

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜூன் 7, 2007 புரட்சி 4 முழக்கம் 78 விலை : ரூ.2.50

# ‘ராஜஸ்தான்’ கலவரம் உணர்த்துவது என்ன?

ராஜஸ்தானில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருந்த குஜ்ஜார் சமூகத்தினர் (மக்கள் தொகை 8 சதவீதம்) தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக் கோரி தொடங்கிய போராட்டம் - வன்முறையாக வெடித்து 27 உயிர்களைப் பலிவாங்கிய பிறகு, இது பற்றி ஆராய, குழு ஒன்றை அமைப்பதாக, மாநில பா.ஜ.க. முதல்வர் வசுந்தரா ராஜே சிந்தியா அறிவித்துள்ளார். குஜ்ஜார் சமூகத்தினர் தங்களைப் பழங்குடியினப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும், பிரச்சனை மிகவும் சிக்கலானதற்குக்காரணம், ஜாட் சமூகத்தினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்ததுதான். சில ஆண்டுகளுக்கு முன் ‘ஜாட்’ சமூகத்தினர் (12 சதவீதம்) பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து - கல்வி, வேலை வாய்ப்புகளில், குஜ்ஜார் சமூகத்தினரின் வாய்ப்புகள் மோசமாகக் குறைந்துவிட்டன. பா.ஜ.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, குஜ்ஜார் சமூகத்தினரை பழங்குடியினப் பட்டியலில் சேர்ப்பதாக வாக்குறுதி தந்திருந்தது. ஆனால், பழங்குடியினர் பட்டியலில் ஒரு சமூகத்தினரை சேர்க்கும் உரிமை மத்திய அரசுக்குத்தான் உண்டு. மாநில அரசுக்கு இல்லை. இதற்கிடையே ராஜஸ்தானில் பழங்குடியினர் பட்டியலில் உள்ள ‘மீனாஸ்’ சமூகத்தினர், குஜ்ஜார்களை, பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்துவருவதால், பிரச்சினை மேலும் சிக்கலாகிவிட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு - பெரியார் வலியுறுத்தியதுபோல், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வழங்குவதுதான். கல்வி, வேலை மற்றும் அரசியல் உரிமைகள், அனைத்து வகுப்பினருக்கும், அவர்களின் மக்கள் தொகை விகிதாச்சாரத்துக்கேற்ப, பகிர்ந்து அளிக்கும்போது மட்டுமே உண்மையான சமத்துவத்துக்கும், ஜனநாயகத்துக்கும் வழி திறக்கப்படும்.

பார்ப்பன உயர்சாதியினரால் மறுக்கப்பட்ட உரிமைகளுக்குப் போராடுவது சமூக நீதிக்கான போராட்டம். அதைத்தடுத்து நிறுத்த முடியாது. சமூகநீதியை நீண்ட காலம் தள்ளிப் போட்டால், அது ரத்தம் சிந்தும் புரட்சியைத்தான் உருவாக்கும்.

அதே நேரத்தில், சமத்துவம் தான் அனைத்துக்கும் அடிப்படை.

சாதி அமைப்பு - சமத்துவத்துக்கு எதிரானது. சாதியின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் கேட்பது, சாதி அமைப்பு முறையால் பறிக்கப்பட்ட உரிமைகளுக்கான பரிகாரம். அதே நேரத்தில் சாதியமைப்பு முறையும் தகர்க்கப்பட்டாக வேண்டும்.

ராஜஸ்தான் மாநிலத்தில், குஜ்ஜார் சமூகமும், மீனாஸ் சமூகமும், சாதிப் பஞ்சாயத்துக்களை நடத்தி, தங்களது சாதி “தர்மங்களை” நிலைநாட்டி வருவதாக செய்திகள் வந்துள்ளன. சட்டப்பூர்வமான பஞ்சாயத்துகளைவிட அதிகாரத்தை தங்கள் கரங்களில் எடுத்துச் செயல்படும் இந்த சாதி பஞ்சாயத்துகள் - சாதி விதிகளை மீறாமல் பாதுகாப்பது, சாதி மறுப்பு திருமணம் செய்வோரைத் தண்டிப்பது உட்பட தங்கள் சாதிக்குள் நடக்கும் பல்வேறு பிரச்சினைகளை விசாரித்து தீர்ப்பு கூறுகின்றன. இரண்டு சாதி பஞ்சாயத்துகளிலும் உள்ள இளைஞர்கள் தான் அண்மையில் நடந்த கலவரங்களைத் தீவிரமாக்கினார்கள் என்று செய்திகள் வருகின்றன.

தமிழ்நாட்டிலும், இத்தகைய சாதி பஞ்சாயத்துகள் இருக்கவே செய்கின்றன. குறிப்பாக - அருந்ததி சமூக மக்களை அடக்கி, ஒடுக்கி வைப்பதற்காகவே நிதி திரட்டி செயல்படும் ‘பண்டு கிராமங்கள்’ (Fund Villages) திண்டுக்கல், ஒட்டன் சத்திரம், பழனி போன்ற பகுதிகளில் செயல்படுகின்றன. தேனீர் கடைகளில் இரட்டை தம்ளர், இரட்டை இருக்கைகளை எதிர்த்து - பெரியார் திராவிடர் கழகம் பிரச்சாரப் பயணம் மேற்கொண்டபோது, இந்த ‘பண்டு கிராம’ சாதிவெறியர்கள் தான் கடும் எதிர்ப்பு தெரிவித்து, கழகப் பிரச்சாரத்தைத் தடுத்துள்ளனர். இதற்குக் காவல்துறையும் உடந்தையாகவே இருக்கிறது. சேலத்துக்கு அருகே காடம்பட்டி எனும் கிராமத்தில் அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திரவுபதியம்மன் கோயிலுக்குள் பல்லாண்டு காலமாகவே தலித் மக்கள் நுழைய முடியவில்லை. கடந்த ஜூன் 4 ஆம் தேதி அவர்கள் கோயில் நுழைவு போராட்டத்தை அறிவித்து, பிறகு, ஆளும் கட்சியின் உறுதியின் பேரில், போராட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இப்படி பல ‘கண்டம்பட்டிகள்’ இருக்கவே செய்கின்றன. தீண்டாமைத் தடுப்புச் சட்டங்கள் செயலிழந்து, சாதி வெறியினர் காலடிகளில் மிதித்து நசுக்கப்பட்டுக் கிடக்கின்றன. ராஜஸ்தான் போன்ற மாநிலங்களைப் போல், மிக மோசமான நிலை தமிழகத்தில் இல்லை என்று கூறலாமே தவிர, தமிழ்நாட்டில் தீண்டாமையும் - சாதி ஆதிக்கமும் தொடரவே செய்கின்றன.

வகுப்புவாரி உரிமை என்ற சமநீதிக்குப் போராடும் அதே நேரத்தில், சாதி அமைப்புக்கு எதிரான போராட்டத்தையும் தீவிரமாக நடத்தியாக வேண்டும். ராஜஸ்தான் மாநிலத்தில் நடந்த கலவரமும் - இதையே உணர்த்துகிறது. ●

## தஞ்சை மாநாடு : ஒரு தோழரின் உணர்ச்சிக் கடிதம்

ஒரு தோழரின் கடிதம்...

நான் மே 24 ஆம் தேதி புரட்சிப் பெரியார் முழக்கத்தின் வழியாக தஞ்சை மாநாடு செய்தியைப் பார்த்தேன். சாதி ஒழிக்கச் சட்டம் எரித்து “50 ஆண்டுகள்” கடந்தும் போராளிகளுக்கு பெரியார் நினைவுப் பரிசுகளை வழங்கிய கழகத்தின் செயலைப் பாராட்டி, பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். அதைப் போல் திருச்சி தியாகராசன் அவர்களின் வீரச் செயல்களை இதழில் படித்த போது அவர் வாழ்வில் பெரியாரின் உண்மைத் தொண்டனாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார். “பல காலம் கோழையாக வாழ்வதைவிட, சில காலம் வாழ்ந்தாலும், வீரனாக வாழ்ந்து சாகணும்” என்ற எண்ணத்தில் வாழ்ந்தவர் தான் அய்யா தியாகராசன். அவரது வீரச்செயலைப் பார்க்கும்போது என் உள்ளத்தில் வீர உணர்ச்சிப் பீறிடுகிறது.

பெரியார் காலத்தில் திராவிடர் கழகம் பார்ப்பனர் கூட்டத்திற்கு சிம்ம சொப்பனமாக இருந்தது. இப்போது இயங்கும் திராவிடர் கழகம் நீர்த்துப் போய் விட்டது. துளிர்விட்டு இருக்கிறது பார்ப்பனர் கூட்டம். தமிழ்நாட்டில் புரட்சி இல்லை. பெரியாருக்குப் பிறகு தி.க. செயல்பாடு சரி இல்லை. பெரியார் தொண்டர் களுக்கும் மரியாதை இல்லை. ஆனால், கொளத்தூர் மணி தலைமை ஏற்ற பெரியார் திராவிடர் கழகம் மட்டுமே நம்பிக்கை தருகிறது. எப்போது இருட்டு அறைக்குள் “சிவப்பு நட்சத்திரம்” பொறிக்கப்பட்டதோ, அப்போதே அய்யாவின் புரட்சி ஆரம்பமாகி விட்டது.

பெரியாரின் லட்சியத்தில் வீறு நடைபோடுகிறது பெரியார் திராவிடர் கழகம். நான் ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தை எங்கள் அயோத்திதாசப் பண்டிதர் படிப்பகத்தில் படிக்கும் போது “ஈழ எரிமலை” இதழைப் போன்று எழுச்சியூட்டுகிறது. பெரியாரின் பகுத்தறிவு எங்கள் இளைஞர்களுக்கு எழுச்சி யூட்டுகிறது. மென்மேலும் ‘புரட்சி பெரியார் முழக்கம்’ இச் சமூகத்திற்கு எழுச்சியூட்ட வாழ்த்துகிறேன்.

தோழமையுடன்

**பா. மற்கலியன்,** ‘அறிவாசான் அயோத்திதாசர் பண்டிதர் படிப்பகம்’, தலித் எழுச்சி சேனை (மாநில அமைப்பாளர்). ஒபுளாபுரம், புது ஆயக்குடி, பழனி வட்டம்

## தஞ்சையில் தூவிய சாதி ஒழிப்பு விதை

**(தஞ்சை மாநாடு பற்றி ‘நக்கீரன்’ (மே 26) வெளியிட்ட கட்டுரை)**

சாதி இழிவுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றால் சாதி ஒழிக்கப்பட வேண்டும். ஆனால், இந்திய அரசியல் சட்டமே (13(2), 25(1), 29(1), (2), 368) இதற்கு தடையாய் உள்ளதே? இந்த சட்டப்பிரிவுகளை அடியோடு நீக்காவிட்டால், அந்தச் சட்டங்கள் எழுதப்பட்ட தாள்களை கொளுத்துவோம்.

இப்படி போராட்ட அழைப்பு விடுத்து 26.11.1957 அன்று இந்திய அரசியல் சட்டத்தை சுமார் 10 ஆயிரம் தொண்டர்களோடு எரித்துக் காட்டினார் பெரியார். அந்த ‘சட்ட எரிப்புப் போராட்டத்தின் பொன்விழாவையும், அப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு பெரியார் விருதுகள் வழங்கும் விழாவையும் நடத்தியது பெரியார் திராவிடர் கழகம்.

மே 19 சனியன்று தஞ்சை தரணியெங்கும் கருப்புச் சட்டைகளின் கம்பீரம். ராஜராஜன் மணிமண்டபம் எதிரே உள்ள தமிழரசி அரங்கத்தில்தான் சாதி ஒழிப்பு மாநாடு.

காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் மாநாடு தொடங்க முதல் நிகழ்ச்சியாக சாதி ஒழிப்பு பற்றிய கருத்தரங்கம் நடந்தது.

(4 ஆம் பக்கம்)

## தஞ்சை மாநாட்டில் – புனித பாண்டியன் பேச்சு

# இந்து மதத்தை ஒழிக்கும் பண்பாட்டுப் புரட்சி நடக்க வேண்டும்

*‘அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்’ என்ற அம்பேத்கர் கோட்பாட்டுக்கு தவறான விளக்கம் தரப்படுவதை தஞ்சை மாநாட்டில் ‘தலித் முரசு’ ஆசிரியர் புனித பாண்டியன் சுட்டிக்காட்டியதோடு, இந்து மதம் ஒழியும்போது தான் சாதி ஒழியும் என்று வலியுறுத்தினார். (சென்ற வார தொடர்ச்சி)*

சாதியை ஒழிக்கப் போன அம்பேத்கர் எதற்கு கடவுள் மறுப்பு வாசகங்களை சொல்ல வேண்டும். அதிலே தான் நீங்கள் பெரியாருடைய கல்வெட்டிலே பொறிக்கப்பட்டுள்ள கடவுள் மறுப்பு வாசகங்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். அதைத் தான் இந்த சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடவுள் மறுப்பை சொல்லாமல் நீங்கள் சாதியை ஒழிக்க முடியாது என்பதே அம்பேத்கருடைய பெரியாருடைய மிக ஆழமான, தெளிவான நிலை. ஆனால் அம்பேத்கரிஸ்டுகள் அம்பேத்கருடைய கடவுள் மறுப்புக் கொள்கையை சரிவர பிரச்சாரம் செய்வதில்லை. அதனால் தான் பெரியாரை அவர்கள் வெறும் கடவுள் மறுப்பாளராக பார்க்கின்றார்களே ஒழிய அம்பேத்கருக்கு இணையாக சாதியை ஒழிக்க போராடிய போராளியாக பார்க்க மறுக்கிறார்கள்.

அதேபோல மதம் மாற்றம் என்று எடுத்துக் கொண்டால் தந்தை பெரியார் அவர்கள் நான் பவுத்தத்திற்கு போய்ச் சேர மாட்டேன் என்று சொன்னாரே ஒழிய அது ஒரு நிறுவனமாக்கப்பட்ட ஒரு மதமாக மாறிவிடும் என்பதால் நான் பவுத்தத்தில் சேர மறுக்கின்றேன். என்னுடைய கழகத்தினர் பவுத்தத்திலே சேர மாட்டார்கள் என்று சொன்னாரே ஒழிய அவர் இந்த நாட்டினுடைய தாழ்த்தப்பட்ட மக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் கண்டிப்பாக இசுலாத்துக்குச் செல்லுங்கள். பிற மதங்களை தழுவுங்கள். உங்கள் ‘சூத்திர’ இழிவை அப்பொழுதுதான் ஒழிக்க முடியும் என ஆணித்தரமாக தொடர்ச்சியாக பல்வேறு இடங்களிலே பேசி இருக்கிறார்கள்.

ஆனால், இதையும் இன்றைக்கு இருக்கக்கூடிய தலித் அரசியல் பேசக்கூடியவர்கள் அம்பேத்கரிஸ்டுகளாக இருந்து தங்களுடைய பிரச்சாரத்தை முன் எடுக்கக்கூடிய அறிவு ஜீவிகள் அம்பேத்கருடைய கடவுள் மறுப்பு வாசகத்தையும் அம்பேத்கருடைய மதமாற்ற விசயத்தையும் சொல்ல மறுக்கிறார்கள். அல்லது அதற்கு முன்னுரிமை கொடுக்க மறுக்கின்றார்கள். இதற்கெல்லாம் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிலே தந்தை பெரியார் அவர்கள் அண்ணல் அம்பேத்கருடைய அதே கருத்து நிலைப்படி, அதே வழியின்படி, அதே கொள்கையின்படி புத்தருடைய அதே கோட்பாட்டின்படி பகுத்தறிவை பரப்பினார். சாதியை ஒழிப்பதற்காக அவர் பகுத்தறிவை பரப்பினார். சாதியை ஒழிப்பதற்காக அவர் இந்துமதத்தை மறுதலித்தார். சாதியை ஒழிப்பதற்காகத்தான் அவர் இராமனையும், கடவுள்களையும் செருப்பால் அடித்தார். இந்தக் கருத்துக்களை எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய அரசியலை பேசக் கூடியவர்கள் வைக்கக்கூடிய மிக முக்கியமான கருத்து என்னவென்று சொன்னால் அது அரசியல் அதிகாரம் என்பதுதான்.

இன்று நீங்கள் பார்க்கலாம், எதை நீங்கள் திறந்தாலும், எந்த தொலைக்காட்சியை திறந்தாலும், அரசியல் அல்லது சினிமா, அதைத் தவிர எதையுமே நீங்கள் பத்திரிகையிலும், ஊடகங்களிலும் பார்க்க முடியாது. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களும் அக்கருத்துக்களுக்கு ஆட்பட்டு தங்களுடைய தீண்டாமை கொடுமைகள் தன் மீதான வன்கொடுமைகள் எல்லாம் குறைய வேண்டுமானால் நாம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினால் தான் இந்த தீண்டாமை கொடுமைகள் எல்லாம் முற்றுப்பெறும் என்று அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் அம்பேத்கருடைய மேற்கோள்களையே தவறாக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் காலம் காலமாக.

அரசியல் அதிகாரம் தான் ஒரே தீர்வு என்ற ஒரே ஒரு வாக்கியத்தை மட்டும் எடுத்துக் கொண்டு நாம் எல்லாம் அரசியல் கட்சிகளாக வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாக வேண்டும். நாம் எல்லாம் அரசியலிலே ஈடுபட்டு போராட்டங்களை நடத்தினால்தான் இந்த சாதி ஒழியும் என்று தவறாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்காக பெரியார் ஒன்றுமே செய்யவில்லை என்ற ஒரு கருத்தையும் பரப்பி வருகிறார்கள்.

இந்த நாட்டிலே சமூக, பண்பாட்டு புரட்சி நடைபெறாமல் இங்கே அரசியல் புரட்சியை நடத்தவே முடியாது என்பது அண்ணல் அம்பேத்கருடைய மிகத் தெளிவான முடிவு. இங்கே சமூக, பண்பாட்டு புரட்சி நடத்தப்பட வேண்டும். அதன் தொடர்ச்சியாகத்தான் நீங்கள் அரசியலைக் கைப்பற்ற வேண்டும். கைப்பற்ற முடியும் என்பதுதான் அம்பேத்கருடைய கனவு.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் இறுதி இலக்கு என்று அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அதற்கு முன்னால் இங்கே சமூக, மத, பண்பாட்டு புரட்சி நடந்தாக வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அவர் முன்னாலே சொல்லப்பட்ட கருத்துக்கள் எல்லாம் வசதியாக மறந்துவிட்டு அவருடைய இறுதி இலக்கு என்று சொல்லக்கூடிய அரசியல் அதிகாரத்தை மட்டும் இன்றைக்கு பேசக் கூடியவர்களாக பலரும் இருக்கிறார்கள்.

ஆனால், பெரியார் அவர்கள் கடைசி வரைக்கும் கறுப்புச் சட்டை போட்ட தம் கழகத்தவர்கள் எந்த அரசியல் கட்சிகளிலும் தன்னை இணைத்துக் கொள்ளக் கூடாது என்பதிலே மிக மிக உறுதியாக இருந்தார். ஆகவே, இது புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஏன் அவர் அப்படி இருந்தார் ? இந்த மக்களுடைய சூத்திர இழிவும், பஞ்சம இழிவும் நீங்கள் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதால் நிச்சயம் போகாது உங்கள் சாதியை நீங்கள் ஒழிக்க வேண்டும் என்று சொன்னால் நீங்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினால் போதாது. நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோமே 30, 40 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு திராவிடக் கட்சிகள் தான் நாட்டை ஆண்டுக் கொண்டிருக்கின்றன. அதனால் சாதியை ஒழித்து விட முடிந்ததா ?

சாதி முன்பைவிட வேகமாக பல்வேறு வடிவங்களிலே வந்து கொண்டிருக்கின்றது. தந்தை பெரியார் சொன்னாரே இந்தச் சூத்திரப் பட்டம் போக வேண்டும் என்று, அதற்காக இங்கு இந்த திராவிடக் கட்சிகள் ஏதாவது செய்திருக்கின்றதா. அவர்கள் சொல்லலாம், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனும் சட்டத்தை. அது சரியான சட்டம் தான். சட்டரீதியாக சூத்திரப் பட்டம் ஒழிந்திருக்கின்றது. ஆனால் சமூக ரீதியாக, மத ரீதியாக சூத்திரப் பட்டம் இங்கே ஒழிந்திருக்கின்றதா ? 40 ஆண்டுகளாக சூத்திரர்கள் தான் ஆட்சி செய்கின்றார்கள், பிற்படுத்தப்பட்டவர்கள்தான் ஆட்சி செய்கின்றார்கள். ஆனாலுமே இங்கே சூத்திரப் பட்டம் ஒழியவில்லையே ! என்னக் காரணம் ? பிற்படுத்தப்பட்ட மக்கள் அரசியல் அதிகாரம் தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, பல்வேறு மாநிலங்கள் முழுக்க பிற்படுத்தப்பட்டவர்கள் தான் முதல்வராக இருக்கின்றார்கள். அவர்கள் தான் மிக வலிமையான அரசியல் கட்சி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் எல்லோருமே சமூக ரீதியாக இன்று வரை சூத்திரர்களாகத்தானே இருந்து கொண்டிருக்கிறார்கள். அதை எப்படி மாற்ற வேண்டும். அதை எப்படி ஒழிப்பது, இந்து மதம் என்று சொன்னால், ஒருவன் மேல் சாதியாகவும், ஒருவன் கீழ்சாதியாகவும் இருந்தாக வேண்டிய கட்டாயம். அவன் நிச்சயமாக சாதியற்ற ஒருவனாக இருக்க முடியாது. நம்மை போன்ற பெரியாரிஸ்டுகள், அம்பேத்கரிஸ்டுகள் தீர்மானம் போட்டு சொல்லலாம். ஆனால் பொது மக்களாக இருக்கக் கூடியவர்கள் அப்படி சொல்வதை ஒரு போதும் இந்த சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை.

இந்துவாக இருந்தால் ஒருவன் மேல்சாதியாகவும், ஒருவன் கீழ்சாதியாகவும் தான் இருந்தாக வேண்டும். அந்த அடிப்படையிலேதான் அவனுக்கு எல்லாமே நிர்ணயிக்கப்படுகிறது. கே.ஆர்.நாராயணன் அவர்கள் மெத்த படித்தவர். இந்தியாவினுடைய முதல் குடிமகனாக இருந்தார். இன்றும்கூட அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகம் என்றுதான் பதிவாகின்றது. இன்றைக்கு தீண்டாமை, சட்டத்திலே ஒழிக்கப்பட்டு விட்டாலும்கூட ஏன் அவர் தாழ்த்தப்பட்டவராக அறிமுகம் செய்யப்படுகின்றார். காரணம் என்ன என்று சொன்னால் இந்து மதத்தை நீங்கள் ஒழிக்காமல் இந்த சமூக விடுதலையை நீங்கள் பெற முடியாது. வெறும் அரசியல் அதிகாரம் கையில் கிடைத்தால்கூட நீங்கள் இந்து மத பண்பாட்டுப் புரட்சியை நடத்தாமல் நிச்சயமாக சூத்திரப்பட்டத்தையோ பஞ்சமர் பட்டத்தையோ ஒழிக்கவோ, அதிலிருந்து மீளவோ முடியாது என்பதுதான் பெரியாருடைய லட்சியமாக இருந்தது. நோக்கமாக இருந்தது. இது புத்தர் காலம் தொடங்கிய போராட்டம். நிச்சயமாக பல தலைமுறைகள் இந்த போராட்டம் தொடரும். அம்பேத்கரும், புலே-வும், பெரியாரும் புத்தருடைய தொடர்ச்சியாக இந்த போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். பல நூற்றாண்டுகளாக இந்தப் போராட்டம் நடந்துக் கொண்டிருக்கின்றது. ஏதோ இது ஒரு கட்சி ஆட்சியில் இருப்பதாலோ ஏதோ ஒரு இயக்கம் மக்கள் மத்தியில் இருப்பதாலோ இந்த சூத்திரப் பட்டத்தையோ, பஞ்சமர் பட்டத்தையோ, சாதியையோ நீங்கள் நீக்கிவிட முடியாது. இது இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு இட்டுச் செல்ல வேண்டிய சமூகப் புரட்சி. சமூக மாற்றம். சமூகப் போராட்டம்.

அந்த சமூகத்தை நீங்கள் மாற்ற வேண்டும் என்று சொன்னால் இந்து மதத்திலே மிகப் பெரிய சீர்திருத்தம் மட்டும் அல்ல. இந்துமதத்தை ஒழித்தாக வேண்டும். இந்து மதத்தின் மீதான கடுமையான தாக்குதலை தொடுத்தாக வேண்டும். இதுதான் தந்தை பெரியாருடைய செயல் திட்டமாக இருந்தது. இந்த வகையிலே நீங்கள் பெரியாரை புரிந்து கொள்ளும்போதுதான் அவர் மிகப் பெரிய சமூகப் புரட்சியாளராக மிகப் பெரிய சமூக மாற்றத்திற்கான வழிகாட்டியவராக இந்த சமூகம் அவரை ஏற்றுக் கொள்ள முடியும்.

அம்பேத்கர் அவர்கள் மாமனிதர் யார் என்பதற்கான ஒரு விளக்கம் தருகிறார்கள். அது தந்தை பெரியாருக்கு அப்படியே பொருந்தி வருகின்றது. “நேர்மையும், அறிவும் சேர்ந்தால் ஒழிய ஒருவர் மாமனிதராக முடியாது. மாமனிதராவதற்கு இது மட்டும் போதுமா. இங்கு நாம் உயர் மனிதருக்கும், மாமனிதருக்கும் உள்ள வேறுபாட்டை பார்க்க வேண்டுமென நான் நினைக்கின்றேன். ஏனெனில் மாமனிதர் உயர்மனிதரைவிட மேலானவர் என நான் நம்புகிறேன். பிறரோடு ஒப்பிட்டு பார்க்கும் போது நேர்மையும், அறிவுத்திறனும் உயர் மனிதராக்கிக் காட்ட போதுமானவை. ஆனால், அவரை மாமனிதராக போற்றுவதற்கு போதுமானவை அல்ல. உயர் மனிதருக்கு இருப்பதைவிட மாமனிதருக்கு ஏதாவது ஒரு தனிச் சிறப்பு இருக்க வேண்டும். அது என்ன ? அம்பேத்கர் விளக்குகிறார்: “தத்துவ அறிஞர்கள் மாமனிதருக்கு வழங்கியுள்ள வரையறை இங்குதான் முக்கியத்துவம் பெறுகின்றது. சமூகக் கொடுமைகளுக்கு எதிராக மாமனிதன் கிளர்ந்தெழ வேண்டும். சமுதாயத்தை தூய்மையாக்க அவன் ஒரு துப்புரவு பணியாளனைப் போல் செயல்பட வேண்டும். இப்பண்புகளே மாமனிதர்களை உயர்மனிதர்களிடமிருந்து உயர்த்திக் காட்டுகின்றன. - மதிப்புக்கும் வணக்கத்திற்குமுரிய ஆவணங்களாகின்றன” என்று அம்பேத்கர் அவர்கள் ஒரு மாமனிதருக்கான இலக்கணத்தை சொல்லியிருக்கின்றார்கள். அந்த மாமனிதனுக்கான இலக்கணத்தோடு தந்தை பெரியார் அவர்கள் வென்று மேன்மேலும் நம்மிடையே மீண்டும் வீறு கொண்டு இத்தகைய அவதூறுகள் எல்லாவற்றையும் கடந்து இமயம் போல் இந்திய துணைக் கண்டம் முழுதும் உயர்வார் - என்று, புனித பாண்டியன் பேசினார்.

– புரட்சிப் பெரியார் முழக்கம் 07.06.2007

### ஆனூரார் பற்றி ‘முகம்’

**கேள்வி :** *தமிழகத்தின் முன்னாள் அமைச்சர்களில் இன்றும், தமிழ் மக்களுக்கு ஒரு கேடு என்றால், களத்தில் நிற்பவர்கள் யாராவது இருக்கிறார்களா?*

**பதில் :** *இருக்கிறாரே ஒருவர், ஆனூர் செகதீசன்! இவர் எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இருந்தவர். பெரியார் கிழித்த கோட்டு மேலேயே நடப்பவர். பெரியார் தி.க.வினர் நடத்தும் எல்லாப் போராட்டத்திலும் தொண்டர்களோடு தொண்டராகக் கருஞ்சட்டை அணிந்து குரல் கொடுப்பதைப் பார்க்கலாமே.*

**நன்றி : ‘முகம்’ ஜூன் 2007 இதழ்**

## தஞ்சை கழக மாநாட்டில் கவிஞர் வெண்ணிலா உரை

# பார்ப்பனிய அவதாரங்களை எதிர்த்த புலே !

*இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே பார்ப்பனியம் – அவதாரங்களை அறிவியல் வினாக்களால் துளைத்தெடுத்தவர் பூலே என்று தஞ்சையில் நடந்த சாதி ஒழிப்புக் கருத்தரங்கில் கவிஞர் வெண்ணிலா குறிப்பிட்டார். அவரது உரை:*

அமங்கலத்தின் வண்ணமாக மூடநம்பிக்கையின் இருப்பிடமாக ஒதுக்கப்பட்ட வண்ணமாக இருந்த கருப்பு நிறத்தை பகுத்தறிவாளர்களின் நிறமாக, சிந்தனையாளர்களின் நிறமாக மாற்றிய தந்தை பெரியாருக்கு என் முதல் வணக்கம்.

பொதுவாகவே சாதி இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டுமானால், முன்பெல்லாம் சாதி பெருமையாக வெளிப்படையாகப் பேசப்பட்டது; கருதப்பட்டது; கவுரவத்துக்கு தோளில் போடும் துண்டைப் போல் இருந்தது. இப்போது, சட்டைக்குள் போடும் பனியனைப்போல் மறைமுகமாக சாதி பேணப்படுகிறது. நம்மை போன்ற இயக்கங்களில் உள்ளவர்களைத் தவிர, சாதியை எதிர்ப்பவர்கள் மிகவும் குறைவு தான். 50, 100 ஆண்டுகளுக்கு முன்பு சாதியை மறுத்தவர்களைவிட இன்றைக்கு சாதியை இறுக்கமாகக் கட்டிக் கொண்டிருக்கின்ற மக்கள் தொகை அதிகமாயிருக்கு. இன்னும் சொல்லப்போனா தன்னுடைய சுயநல வளர்ச்சிக்கு வலிமையான ஆயுதமாகவும், வன்முறைக்கான ஆயுதமாகவும் தமிழகத்தில் இன்று பயன்படுத்தும் போக்கு அதிகமாயிருக்கு.

எந்த அரசியல் கட்சிப் பின்னால் போனாலும் அதற்குள் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்ற சாதி அரசியல் நம்முடைய முகத்தில் வந்து பளார், பளார் என அறையுது.


ஒரு வேட்பாளரை தேர்ந்தெடுப்பதிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்தின் வாக்கு வங்கியை கணிப்பதிலிருந்து அனைத்திற்கும் அடிப்படையாக எந்த விசயம் இருக்குமென பார்த்தால் சாதி தான் இருந்துகிட்டிருக்கு. இதையெல்லாம் பார்க்கிறபோது கவுதம புத்தர் காலத்திற்கு திரும்பிப் போய் விடுவோமோ என்ற பயம் வந்துகிட்டே இருக்கு. யோசித்துப் பாருங்க நகரங்களில்கூட மிக நுட்பமாக சாதியை கையிலே வெச்சிக்கிட்டுருக்காங்க. முதல்லே போன உடனே ஒரு ஒத்தை பார்வையிலே கண்டுபிடிச்சிடறாங்க, நம்ம என்ன சாதி, அப்புறம் சாதிக்குரிய அடையாளங்களை எல்லாம் கண்டுப்பிடிச்சி வெச்சிருக்காங்க. எப்படி தான் கண்டுபிடிக்கிறாங்க என தெரியல.

நம்முடைய நடத்தைகளுக்கு ஒரு சாதி முலாம் பூசுவது, இது எல்லா இடத்திலேயும் மறுக்க முடியாத அளவுக்கு மிகத் தீவிரமாக நடந்துகிட்டேயிருக்கு. அப்ப நமக்கு மிகப் பெரிய கேள்வி வருது. சாதி எப்படி வந்தது ? ஏற்கனவே சாதி இருந்தாலும், குழுக்களாக இருந்தாலும், ஆரியர்களால் மட்டும் தான் இந்தியாவில் 'வர்ணாஸ்ரமம்' என்ற நான்கு அடுக்குமுறை மிகத் தீவிரமாக வேரூன்றியது. இன்றைக்கு மொத்தம் இருக்குற மக்கள் தொகையில் மூன்று சதவீதம் மட்டும்தான் பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். மீதி 97 சதவீதம் நம்மைப் போன்றவர்கள் பார்ப்பனரல்லாதவர்கள்; ஆனால் இவர்களும் சாதி ஆதிக்க மனப்பான்மை கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். அப்படியானால் நாம் எல்லோருமே பார்ப்பனர்களாகி விட்டோமா என்கிற கேள்வி இயல்பாக எழுகிறது.

ஏனென்றால் நம்மை போன்றவர்களும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மக்களும் மனத்தளவில் ''பிராமணர்''களாக மாறி இருக்கிறோம் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டி உள்ளது. அதனால் தான் இன்றைக்கும் அசைக்க முடியாமல் சாதி இருந்துக்கிட்டே இருக்கு. அதனுடைய தொடர்ச்சியாக சாதிய கட்சிகளின் வளர்ச்சியும் இருக்கு. சமத்துவபுரங்கள் வந்தும், அங்கே சாதி ஒழிந்துள்ளதா ? ஒரு கவிஞன் அழகாக சொல்லியிருக்கான், ''சமத்துவபுரம்; கழிவு நீர் குழாய் சுத்தம்செய்ய அதே கருப்பன்.''

### உடல் சார்ந்த அரசியல்

தாழ்த்தப்பட்ட சமூகத்திலிருந்து ஒருவர் குடியரசுத் தலைவர் ஆகிவிட்டார் என்று பெருமைப் பேசிக் கொள்ளலாம். ஆனால் உயர்ந்த சாதியைச் சார்ந்த ஒருவனோ, பிற்படுத்தப்பட்ட சாதியைச் சார்ந்த ஒருவனோ



கழிப்பறையை சுத்தம் செய்ய முன் வரவில்லை. இன்றைக்கும் அதே வேலையை செய்பவர்களாக தாழ்த்தப்பட்டவர்கள் தான் இருந்துக் கிட்டுருக்காங்க. அதிலே நமக்கு என்ன பெருமை இருக்கு? திருமாவளவன் சிதம்பரத்திற்கு வந்தவுடன் அவருக்கு பெருமை செய்யுறாங்கன்னு எல்லோரும் பெருமைப்படுறாங்க. ஆனா திருமாவளவனுக்கு மட்டுந்தான் அது நடக்கும். அதே சிதம்பரத்தில் தாழ்த்தப்பட்ட ஒரு ஆள் உள்ளேப் போக முடியுமா ? என

> *சமத்துவபுரங்கள் வந்தும், அங்கே சாதி ஒழிந்துள்ளதா? ஒரு கவிஞன் அழகாக சொல்லியிருக்கான், "சமத்துவபுரம்; கழிவு நீர் குழாய் சுத்தம்செய்ய அதே கருப்பன்."*

யோசித்துப் பாருங்க. அதுக்கான சாத்தியமே கிடையாது. அப்ப என்ன சாதியை நாம் ஒழிச்சிருக்கோம். சாதிய கட்சிகள் தான் என்ன சாதியை ஒழிச்சிருக்கு. நாம எல்லோரும் தெரிந்தோ தெரியாமலோ மிக ஆழமாக சாதிக்கப் பின்னால் சென்று கொண்டிருக்கிறோம். அதற்கு அடிப்படை விசஷயமாக நான் எதைப் பார்க்குறன்னா நம்முடைய பாரம்பரியமான உடல் பற்றிய அரசியல் தான் சாதியாக நம்ம கிட்ட இயங்குது என நான் உறுதியாக நம்புகிறேன். இந்திய தத்துவ மரபு என்ன சொல்லுதுன்னா, ஆன்மீக வாழ்க்கைதான் உயர்வான வாழ்க்கை. உடல் சார்ந்து வாழ்கின்ற வாழ்க்கை கீழானது. உடல் கீழானது அதற்குள் இயங்குகிற மனது, ஆன்மா என்று சொல்லுகிறோமே அந்த மனது மேலானது, என்கிறது ஆன்மீகம்.

பார்ப்பனர்கள் மனதோடு ஏற்றி படிப்பறிவோடு வேதங்களோடும், உபநிடதங்களோடும் வாழ்கின்ற வாழ்க்கை உயர்வானது. நாம் படிப்பறிவு இல்லாம வயித்துக்கு சாப்பிட்டுக்கிட்டு வாழ்ந்துக்கிட்டிருக்கிற உடல் சார்ந்த, உழைப்புச் சார்ந்த வியர்வை சார்ந்த வாழ்க்கை கீழானது என்ற கருத்து ஆழமாக வந்திருக்கு. உடல் சார்ந்த வாழ்க்கை கீழானது என்கிறபோது அதை ஒட்டித்தான் சுத்தம், அசுத்தம், மேல்சாதி, கீழ் சாதி என்ற கருத்துகள் தொடர்ச்சியாக நம் மனதில் படிந்து கொண்டேயிருக்கு. இதே அடிப்படையில் தான் பெண்ணடிமையும் வருகிறது. சுத்தம், அசுத்தம் என்ற கண்ணோட்டத்தில்தான் பெண் அசுத்தமானவள். அவளுக்குள் நிகழ்கின்ற மாதவிடாய் பிரச்சினைகள் எல்லாம் அசுத்தத்தின் வெளிப்பாடு என்று கூறி, பெண்ணையும் தீட்டுப்பட்டவளாக, தீண்டத்தகாதவளாக ஒவ்வொரு குடும்பத்திலேயும் ஒதுக்கி வைப்பதை நாம் பார்த்துக்கிட்டு இருக்கோம். இந்த உடல் சார்ந்த அரசியல் என்பதும் சாதியத்தினுடைய மிக இறுக்கமான பிடிக்கு ஒரு காரணமாக இருந்திருக்க முடியும். இதனுடைய தொடர்ச்சியாக நாம் மராட்டியத்தில் தலித் எழுச்சிக்கு வித்திட்ட புலே-வை நிறுத்திப் பார்க்க வேணடும்.

பெரியார் காலத்தின் முன்பே வாழ்ந்தவர் புலே. இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே, அறிவியல் பூர்வமாக மதத்தை அவர் விமர்சித்திருப்பது வியப்பாக இருக்கிறது. இன்னும் சொல்லப்பானால், அவரது அனைத்து நூல்களிலேயும் 'இந்து' என்ற வார்த்தையையே பயன்படுத்தவில்லை என்பது மிகவும் ஆச்சரியமானது. ''பிராமணியம்'' என்ற பெயரைத்தான் சொல்லியிருக்கிறார். பிரம்மாவின் முகம், தோள், தொடை, காலிலிருந்து தான், பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திரர்கள் பிறந்தார்கள் என்று கூறப்படுவதை ஒரு கல்லூரி மாணவன் கலகக் குரலை எப்படி எழுப்புவானோ, அப்படி அவர் கேள்விகளைக் கேட்கிறார்.

தலையில் ஒரு குழந்தை பிறப்பதற்கு தலையில் ஒரு கருப்பை இருக்கணும், தோளில் ஒரு குழந்தை பிறக்க அங்கே ஒரு கருப்பை இருக்கணும். இப்படி நான்கு இடத்திலேயும் நான்கு கருப்பை இருக்கணும். அப்படின்னா அதற்கு சமமாக எல்லா உறுப்புகளையும் கற்பனை செய்து பாருங்கள். பால் கொடுக்க எட்டு மார்பகங்கள், ஒவ்வொரு கருப்பைக்கும் நாலு நாள் என்றால் 16 நாள் மாத விடாய் வந்திருக்கும். அப்போது மாதத்தில் 16 நாள் அவர் தனியா உட்கார்ந்திருக்கனும். அப்போ 'பிரம்மா'வுக்கு தேவையான வேலையை அந்த வீட்ல யார் செய்தார்கள் ? அதைவிட அடிப்படையான ஒரு கேள்வியைக் கேட்கிறார். அவருக்கு அன்பான மனைவி ஒருவர் வீட்டில் இருந்தாலே அவளிடம் ஒரு கருப்பை இருக்கும்போது 'பிரம்மா' ஏன் விவஸ்தை இல்லாம வந்து நாலு இடத்திலே குழந்தையை சுமந்துக்கிட்டு அந்தப் பெண்ணையே கேவலப்படுத்தும்படி ஏன் நடந்துக்கிட்டான் ? என்று கேட்கிறார், புலே.

இந்த பிரம்மா, சொந்த மகள் சரஸ்வதியையே உடல் உறவு கொண்டவன். எனவே, பிரம்மாவைப் போய் வேசி மகன் என சாதாரண வார்த்தையாலே திட்ட முடியாது. அதைவிட மோசமானவன் 'பிரம்மா' என்கிறார் புலே !

இந்து மதத்தின் கருத்தாக்கங்கள் எல்லாமே ஒட்டு மொத்தமாக தகர்க்கப்பட வேண்டும் என்பதுதான் அவருடைய தீவிரமான கருத்தாகும். இதே போல் எல்லா அவதாரங்களையும் அவர் உடைத்து நொறுக்குகிறார். மச்ச அவதாரம் என சொல்கிறோம் இல்லையா, அவர் கேள்விக் கேட்கிறார். 'ஏண்டா அறிவிருக்கா, மச்ச அவதாரம் என ஒரு மனுசனைச் சொல்றே. மச்சம்னா மீன். மீன் எங்கே வாழும் ? தண்ணியில். மனிதன் எங்கே வாழ்வான் ? நிலத்திலே வாழ்வான். மனிதனைத் தூக்கி தண்ணீரில் போட்டா அடுத்த நிமிடம் செத்துடுவான். மீனை தூக்கி நிலத்திலே போட்டா அடுத்த நிமிடம் செத்துப் போயிடும். இவை இரண்டும் எப்படி பொருந்திச்சி ?' எனக் கேட்கிறார் புலே.

இப்படி எல்லா அவதாரங்களையும் கேள்வி கேட்டு அடித்து நொறுக்குகிறார். ஆனால், அதற்கு அடிப்படையான அறிவியல் காரணத்தையும் முன் வைக்கிறார். என்ன சொல்றார்னா, மச்சம் என்பதே வேகமாக செல்லக் கூடிய ஒரு படகு. முதன்முதலில் ஈரான் நாட்டிலிருந்து ஆரியர்கள் நுழையும்போது மச்சம் என்ற படகில் வந்து இறங்கியிருப்பாங்க. அதை ஓட்டிக்கிட்டு வந்த தலைவன் மச்ச அவதாரம் என மக்களால் வணங்கப்பட்டிருப்பான் என அவர் அறிவியல் சார்ந்த பதிலையும் முன் வைக்கிறார்.

ஆமை அவதாரம். ஆமைன்னா மெதுவாக வரக்கூடிய ஒரு படகாம். சின்னப் படகு வேகமாக வந்துச்சு. பிறகு மக்களை ஏற்றிக் கொண்டு வரும் பெரிய படகு மெதுவா வந்துச்சு. இந்த மாதிரி அறிவியல் பூர்வமான பதில்களை சொல்வதின் மூலமாக இந்துமதம் நம்பிக் கொண்டிருந்த அத்தனை அவதாரங்களையும், புரட்டுக்களையும் புலே - மிகவும் தெளிவாக மறுத்தார். (தொடரும்)

### நன்கொடை

பெரியார் பெருந்தொண்டரும், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவருமான மறைந்த மயிலாடுதுறை இராசமாணிக்கம் அவர்களின் பெயர்த்தியும், மத மறுப்பு திருமணம் புரிந்து கொண்ட இரசீத்கான் - ரெஜீனா அவர்களின் புதல்வியுமான உண்மை, எம்.எஸ்சி., மதுரை வாடிப்பட்டி ஜஸ்டின் ஜெயக்குமார், எம்.சி.ஏ. ஆகியோருக்கு மூன்றாம் தலைமுறை கலப்புத் திருமணம் 18.2.2007 அன்று நடைபெற்றது அதன் மகிழ்வாக ''புரட்சிப் பெரியார் முழக்கம்'' வளர்ச்சி நிதியாக ரூ.200 வழங்கப்பட்டது.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
பேசி: 2451 2857, 2461 6233
periyarmulakkam@yahoo.com

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# குடியரசுத் தலைவருக்கு குயில்தாசன் உருக்கமான கடிதம்

இந்திய குடியரசுத் தலைவருக்கு - தூக்குத் தண்டனையில் சிறையில் வாடும் பேரறிவாளனின் தந்தை ஞான சேகரன் (குயில்தாசன்) உருக்கமான கடிதம் எழுதியுள்ளார்; கடிதத்தின் விவரம்:

அய்யன்மீர், வணக்கம்.

எம் ஒரே மகன் பேரறிவாளன் 16 ஆண்டுகளாக, மறைந்த திரு. ராசீவ்காந்தி அவர்களின் கொலை வழக்கில் பொய் யாகக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை கைதியாகச் சிறையில் துயர்படுகிறான்.

எங்கள் ஒரே ஆண் வாரிசைப் பிரிந்து முதுமையும், நோயும், தனிமையும் சூழத் துயர்பட வாழுகிறோம். இது குறித்துப் பல கடிதங்கள் விண்ணப்பித்தும் அரசும், நிர்வாகமும் அமைதியாகக் காலங் கடத்துவது எம்மை அஞ்சச் செய்கிறது.

26 பேருக்கும் மரண தண்டனை என்று தீர்ப்பெழுதியதை அடிப்படையாகக் கொண்டு உச்சநீதிமன்றம் நால்வருக்குத் தூக்கு என்றும், 19 பேருக்கு விடுதலை என்றும் முடிவுசெய்தது. இவ்வழக்கு, தடா சட்டத்துக்குப் பொருந்தாது என்று கூறி விட்டு, அத்தடா சட்டத்தின் அடிப்படை யிலேயே தண்டிக்கப்பட்டுள்ளனர்.

அரசியல், மதம், இனம், சாதி, மரபணுக்களுடன் பெரியார் கொள்கைக்கு எதிரான உணர்வுகள் யாவும் கலந்து எவருக்காவது நாலு பேருக்கு தூக்குத் தண்டனை கொடுத்து வழக்கை நிறைவு செய்து கொள்ளப்பட்டது. தடா சட்டத்தால் உயர்நீதிமன்றத்தில் முறையிட வாய்ப் பளிக்கப்படவில்லை.

அரசியல் சார்பற்ற பெரியார்தம் கொள்கைத் தொண்டாற்றும் எம் குடும் பத்தை அழிப்பதன் மூலம் பெரியாரை ஒழிப் பதாக அற்ப மகிழ்ச்சி காணும் காழ்ப்புடை யோர் சிலர் எம் மகனின் விடுதலைக்குத் தடையாக இருப்பாரோ என்று கருதுகிறோம்.

மற்றபடி, திரு.இராசீவ் காந்தி கொலைக்கும், எம் மகனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதைக் குற்றச் சாட்டையும் தீர்ப்பையும் காய்த்தல் உவத்தல் இன்றி அமைதியாக ஆய்ந்து அறிந்தாலே விளங்கும்.

எம் மகனை விடுதலை செய்யப் பல தலைவர்களுக்கு மனிதநேய மன முள்ளதை அறிவோம். அரசியல் எனும் விளையாட்டு அவர்களையும் அடக்கி விடுகிறதே என்று விக்கித்துப் போகிறோம்.

150 ஆம் ஆண்டு முதல் 'சுதந்திர'ப் போர் நிறைவு நாளில் இரத்தம் சிந்தி உயிர் நீத்த அந்த வீரர்களின் தியாகத் திருவடிகளில் தூவும் மலராகத் தூக்குத் தண்டனையை நாட்டிலிருந்து நீக்கி அறத்தை நிலைநாட்டவும், எம் மகனை விடுதலை செய்யவும் வேண்டுகிறோம்.

ஒப்பம்/- **குயில் தாசன்**

*கடிதத்தின் நகல்*
பிரதமர், திருமதி சோனியாகாந்தி,
முதல்வர் கலைஞர், மத்திய உள்துறை
அமைச்சர், அரசயில் கட்சிகள் /
இயக்கங்கள்/அமைப்புகள் ஆகியவற்றின்
பொறுப்பாளர்களுக்கு
அனுப்பப்பட்டுள்ளது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

"சாதி ஒழிப்பு, சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கைதாகி சிறையிலேயே 5 பேர் இறந்து போனார்கள். சிறையிலிருந்து வெளியே வந்ததும் 13 பேர் இறந்து விட்டனர். மொத்தம் 18 உயிர்களை பலி கொடுத்த மிகப் பெரிய போராட்டம் இது.." என கருத்தரங்கத்தை தொடக்கி வைத்தார் விடுதலை ராஜேந்திரன்.

"பகுத்தறிவு என்பது கேள்வி கேட்பது, பார்ப்பனியம் என்பது எதையும் கேள்வி கேட்கக் கூடாது என்பது. விஞ்ஞானம் என்னதான் வளர்ந்தாலும் சாஃப்ட்வேர் என்ஜினியர்கள் கூட சாதி பார்த்துத் தானே பெண் தேடுகிறார்கள் ?" சாட்டை யடிக் கேள்வியை சொடுக்கினார் வழக் கறிஞர் பானுமதி.

கவிஞர் அ.வெண்ணிலா கருத்தரங் கத்தில் பேசியபோது, "முன்பு தோளில் துண்டாக இருந்த சாதி இப்போது உள்ளாடை போல ஒட்டிக் கொண்டிருக் கிறது. வலிமையான வன்முறைக்கு ஆயுத மாக இருப்பதே சாதி தான். சமத்துவபுரம்... கழிவுநீர் குழாய் சுத்தம் செய்ய இன்னும் அதே கருப்பன் தானே ?" - கேள்வி கேட்டார். அழகிய பெரியவனும் புத்தரின் சீர்திருத்தங்கள் பற்றி பேசினார்.

கருத்தரங்கம் முடிந்ததும், சாதி ஒழிப்பு சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட வீரர்கள் மேடையேற்றப்பட்டனர்.

விழாவுக்கு தலைமை ஏற்ற பாட்ஷா பேசியபோது, "சட்டம் எரித்த பெரியார் தொண்டர்கள் பின்னாளில் அரசு உதவி கிடைக்கும் என்றா எதிர்பார்த்தார்கள். ஆனால், சட்டத்தின் மீது சத்தியம் செய்து பதவியேற்றவர்கள் எப்படி உதவி செய்வார்கள் ? அந்த உதவியை விட மிகப் பெரிய பெருமை இந்த 'பெரியார் விருது' கிடைத்திருப்பதுதான்" என பேச உருக்கம் நிலவியது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்களுக்கு பாராட்டு தேவையே இல்லை. சாதியை ஒழித்தால்தான் எங்கள் போராட்டம் வெற்றி பெறும். இனியும் ஒரு முறை போராட வாய்ப்பு கிடைக்குமானால், இறுதி காலத்தையும் போராட்டத்தில் சந்தோஷமாக கழிப்பேன். 18 மாதம் சிறை தண்டனை பெற்ற பெரம்பலூர் அன்னூர் பொன்னுச்சாமியின் பேச்சு, கூடியிருந்த இளைஞர்களையெல்லாம் சாதி ஒழிப்பு உணர்வுக்குத் தள்ளியது. அன்றைய போராட்ட நிகழ்வுகளைப் பற்றி திருச்சி வரகனேரி தியாகராஜன் மனம் திறந்த போது கூட்டம் ஆர்ப்பரித்தது.

"அய்யாவுக்கு சட்ட எரிப்புப் போராட் டத்தில் 3 ஆண்டு சிறைத் தண்டனை அறிவிக்கப்பட்டதும் என்னால் தாங்க முடியல. அய்யாவை சிறைக்கு அனுப்புற துக்காக வாதாடின வக்கீல் சீனிவாசாச் சாரி மேல ஆசிட் அடிச்சேன். அப்புறம், அய்யா படத்தை செருப்பால் அடிக்கும் விழாவை சிலர் ஏற்பாடு செய்திருந்தனர். அங்கே சோடா கொடுக்கும் வேலைக் காரனைப் போல நுழைந்தேன். விபூதி வீரமுத்து என்பவர் அய்யா படத்தை செருப்பால் அடிக்க கையை ஓங்கும்போது அவர் மண்டையிலே சோடா பாட்டிலால் ஓங்கியடிக்க மண்டை உடைஞ்சது" என அன்றைய செயல்பாடுகளை பட்டியலிட்டார் தியாகராஜன்.

விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றி னார் திருவாரூர் தங்கராசு.

மாலையில் ஜூபிடர் தியேட்டர் வாசலில் இருந்து 5,000 பேருடன் பிரம்மாண்டப் பேரணி கிளம்பி, திருவள்ளுவர் திடலை அடைந்தது. அங்கே பிரம்மாண்டமான பொதுக் கூட்டம்.

சாதி ஒழிப்புக்கான விதை தஞ்சையில் வெற்றிகரமாக தூவப்பட்டிருக்கிறது. ❑

# 'பாருங்கய்யா; பாருங்க கிராமங்கள பாருங்க'

மே 9, 2007-ல் தஞ்சையில் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டுப் பேரணியில் எழுப்பப் பட்ட முழக்கங்கள்

*வெல்க வெல்க வெல்கவே!*
*பெரியார் திராவிடர் கழகம் வெல்கவே!*

*வாழ்க வாழ்க வாழ்கவே!*
*சாதி ஒழிக்க சட்டம் எரித்த*
*தந்தை பெரியார் வாழ்கவே!*

*உழைக்கும் மக்களை இழிவுபடுத்தி*
*பார்ப்பன நலனை உயர்த்திப் பிடிக்கும்*
*இந்திய அரசியல் சட்டத்தை*
*எரித்த எங்கள் தோழர்களே*
*உங்களுக்(கு) எங்கள் வீரவணக்கம்!*

*சாதியை ஒழிக்க சட்டம் எரித்து*
*சிறை சென்ற தோழர்களே!*
*உங்களுக்(கு) எங்கள் வீரவணக்கம்!*

*சாதியை ஒழிக்க சட்டத்தை எரித்த*
*பெரியார் - வாழ்க!*
*சாதியை ஒழிக்க மனுநீதியை எரித்த*
*பெரியார் - வாழ்க!*
*சாதியை ஒழிக்க பார்ப்பானை எதிர்த்த*
*பெரியார் - வாழ்க!*
*சாதியை ஒழிக்க ராமனை எரித்த*
*பெரியார் - வாழ்க!*
*சாதியை ஒழிக்க பிள்ளையார் உடைத்த*
*பெரியார் - வாழ்க!*
*சாதியை ஒழிக்க கடவுளை மறுத்த*
*பெரியார் - வாழ்க!*

*பாருங்கய்யா பாருங்க*
*கிராமங்களைப் பாருங்க*
*டீக்கடையைப் பாருங்க!*
*இரட்டை குவளைப் பாருங்க!*
*நியாயம் தானா, கேளுங்க*

*செருப்பு தைக்கும் எங்கள் தோழன்*
*செருப்பு போட்டு நடக்கவே*
*உரிமை இல்லை பாருங்க!*
*நியாயம் தானா சொல்லுங்க!*

*உடையட்டும் உடையட்டும்*
*இரட்டைக் குவளை உடையட்டும்!*
*டீக்கடையில் உடையட்டும்!*
*தீண்டாமை சாகட்டும்!*

*எரியட்டும் எரியட்டும்*
*பிணத்தைப் புதைக்கும் சுடுகாட்டில்*
*சாதிவெறி எரியட்டும்!*

*கொள்ளி வை! கொள்ளி வை!*
*சாதிக்கும் சேர்த்து கொள்ளி வை!*
*போராடுவோம் போராடுவோம்*
*சாதியை ஒழிக்கப் போராடுவோம்*
*இறுதிவரை போராடுவோம்*
*இறக்கும் வரை போராடுவோம்!*

*சுத்தறான் சுத்தறான்*
*காதுல பூவை சுத்தறான்*
*தண்ணிக்கு மேல பாலந்தான்*
*எல்லாருக்கும் தெரிஞ்சது*
*தண்ணிக்குள்ளே பாலமாம்*
*ராமகோபாலன் சொல்லறான் -*
அதுக்கு
*ராமன் பேர இழுக்கிறான்*
*சுத்தறான் சுத்தறான்*
*காதுல பூவை சுத்தறான்*

*நூறு கோடி மக்களின்*
*பிரதிநிதி செய்யுறான்*
*சட்டமொன்னு செய்யுறான்*
*ரண்டு பேரு இருந்துகிட்டு*
*செல்லாதுன்னு தள்ளறான்*
*உச்சநீதி மன்றமா?*
*உச்சிக் குடுமி மன்றமா?*

## அரும்பாவூரில் சிறை மீண்ட கழகத்தினருக்கு பாராட்டு

தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 5 மாத சிறைவாசத்துக்குப் பிறகு, சிறை மீண்ட கழகத்தோழர்களுக்கு பெரம்பலூர் மாவட்டம் அரும்பாவூரில் பாராட்டு விழா நடைபெற்றது. கவிஞர் ம. செல்வபாண்டியன் தலைமை வகிக்க வெற்றியழகன் வர வேற்றுப் பேசினார். மருத்துவர் க.கோபால், கு. வரதராசனார், கா.ரெ.சாமி முன்னிலை வகிக்க பூபேசு, ராஜேசு, தமிழ்க்கனல், தாகிர் பாட்சா ஆகியோர் தோழர்களை வாழ்த்திப் பேசினர்.

ஏற்புரை நிகழ்த்திய மாவட்ட அமைப்பாளர் லட்சுமணன் "தமிழ் மக்கள் நலனுக்காக பலமுறை சிறை சென்றவர் பெரியார். இன்று அவருக்காக நாங்கள் சிறை சென்று வந்ததை பெருமையாக கருதுகின்றோம்" என்று குறிப்பிட்டார். "பத்து பைசா பூணுலை அறுத்ததற்காக தமிழக அரசு இந்த வழக்கிற்கு இரண்டு லட்சத்திற்கும் மேல் செலவு செய்துள்ளது" என்றும், தமது சிறை அனுபவங்களையும் நகைச்சுவை உணர்வோடு எடுத்துரைத்தார் மாவட்டத் தலைவர் துரை. தாமோதரன். எழுச்சியுடனும், தமிழ் உணர்வோடும் நடைபெற்ற இக்கூட்டத் திற்கு விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், த.மு.எ.ச. போன்ற தோழமை அமைப்புத் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர். முடிவில் இலியாசு நன்றி கூறினார்.


**செய்தி: இ. தாகிர்பாட்சா, அரும்பாவூர்**

**ஈழப் பிரச்சினையில்**
**இந்திய உளவு நிறுவனங்களின் சதி**
- ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தும் நூல்
பக்.112 விலை ரூ.20
ஆசிரியர் : **விடுதலை இராசேந்திரன்**
வெளியீடு : பெரியார் திராவிடர் கழகம்
*தொடர்புக்கு:*
**பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை,**
(மேட்டூர் பேருந்து நிலையம் அருகில்), சேலம் மாவட்டம் - 636 401,
தொலைபேசி: 954298 - 244162

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 7th June 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜூன் 14, 2007 புரட்சி 4 முழக்கம் 79 விலை : ரூ.2.50


## *கண்முன் நிலவும் தீண்டாமைகளுக்கு எதிராக*

# களமிறங்கிப் போராட, தயாராவோம்!

## தஞ்சை மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறைகூவல்!

*"நாட்டில் நிலவும் சிக்கல்களைப் பார்த்து, அதை மாற்றப் பெரியார் போராடினார்; அது போல் நாம் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்" என்று மே 19 இல் தஞ்சையில் நடந்த சாதி ஒழிப்பு மாநாட்டில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையில் குறிப்பிட்டார். உரை விவரம்:*

சாதியைப் பாதுகாக்கிற அரசியல் சட்டப் பிரிவுகளை எரிக்கிற போராட்டத்தை அறிவித்த இந்த தஞ்சை மண்ணில், அதை எரித்த வீரர்களை அழைத்து வந்து 50 ஆண்டுகள் கழித்து, மகிழ்ச்சியாக கொண்டாடுகிற பொன் விழா அல்ல. இந்த மாநாடு, அந்தக் கொடுமை, அவர்கள் ஒழிக்க நினைத்த கொடுமை இன்னும் தொடர்கிறதே என்ற ஆதங்கத்தோடு எடுத்த அந்த மாநாட்டிற்கு வந்திருப்பவர்களுக்கு வணக்கங்களை கூறிக் கொள்கிறேன்.

பல்வேறு கருத்துகள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன, பேசப்பட்டிருக்கின்றன. சாதி ஒழிப்புப் போராளிகள் பல கருத்துகளை சொன்னார்கள். காலை அரங்கில் அவர்கள் தங்களுடைய நினைவலைகளைப் பகிர்ந்து கொள்கின்ற அந்த வாய்ப்பு ஒரு சில பேருக்கு மட்டுமே அளிக்கப்பட்டது.

அவர்கள் சொன்னார்கள் - எங்களுக்கு இப்பேர்பட்ட வாய்ப்புக் கிடைக்கும், இப்படி பாராட்டு கிடைக்கும் என்று கருதி, இந்தப் போராட்டத்திற்கு வரவில்லை. ஒரு மனிதனுடைய கடமை அது. மனிதனாக வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனுடைய கடமையை நாங்கள் ஆற்றினோம். அதற்காக நாங்கள் எதையும் எதிர்பார்க்கவில்லை. இன்றும் இப்பேர்ப்பட்ட போராட்டங்கள் எடுக்கப்படுமேயானால், நாங்கள் கலந்து கொள்ள இப்போதும் அணியமாக இருக்கிறோம் என்றெல்லாம் அவர்கள் பேசிய உரை நம்முடைய தோழர்களுக்கு ஒரு புத்தெழுச்சியை உண்டாக்கியிருக்கிறது.

பெரியார் வாழ்ந்த காலத்தில் அவர் மிகப் பெரும் தலைவர். அவர் பெரும் ஆளுமை கொண்டவர். அவர் நினைத்தால் ஒரு அறிக்கையின் வழியாக, நாம் பெரும் போராட்டத்தின் வழியாக ஏற்படுத்துகிற எழுச்சியை அல்லது அரசுக்குக் கொடுக்கின்ற அழுத்தத்தை பெரியார் ஒரு அறிக்கையின் வழியாக கொடுக்க முடியும். ஆனால், நம்மால் அப்படி செய்ய முடியாது. நாம் பெரியார் அல்ல.

பெரியாரை பார்த்தோம், படித்தோம், அறிந்தோம், உணர்ந்தோம், உள் வாங்கிக் கொண்டோம். அவர் இலட்சியங்களை அடைய வேண்டும் என கருதுகின்றோம். ஒருவேளை பெரியார் கைக் கொண்டிருந்த அந்த வழிகளை விட்டு விலகிக் கூட சில செயல்கள் நடந்திருக்கின்றன. அவர்களையும் நாம் பாராட்டினோம். காரணம் அவர்கள் உள்ளத்தில் இருந்த உணர்வுகள் நியாயமானவை. செயல்கள் சட்டப்படி தவறாக இருக்கலாம், ஆனால் நியாயமானவை. அந்த உணர்ச்சியோடு பார்க்கிற நாம், பெரியாருடைய எல்லா போராட்டங்களும், எல்லா பேச்சுகளும் அவை அனைத்தும் சாதி ஒழிப்பை முன்னிறுத்தி சிந்திக்கப்பட்டவை, பேசப்பட்டவை, எழுதப்பட்டவை. இந்த சமுதாயத்தில் பல்வேறு இயக்கங்கள் இருக்கின்றன. அவர்களெல்லாம், தமிழனுக்கு உரிமை, ஆட்சி உரிமை எல்லாம் பேசுகிறார்கள். முதலில் மனிதனாகட்டும் அவன். அவர்களை மனிதனாக்க பெரியார் இயக்கம் எடுத்தார். மனிதனான பின்னால் அவனுக்கு உரிமைகள் என்ற உணர்வு வரும். அடிப்படையாக சமத்துவம் உள்ள மனிதனாக ஆக்குவதற்கான சிந்தனைகளை முன் மொழிந்திருக்கிறார். நாம் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார் மங்கலத்தில் எல்லாம் தேர்தலே நடக்காதிருந்தது. இப்போது நடத்திக் காட்டி விட்டார்கள். இப்போது தேர்தல் நடந்தது ஒரு முன்னேற்றம். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இன்னும் அலுவலகத்திற்குள் போகவில்லை. வெளியே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். வெளியேக்கூட நாற்காலி போட்டு அல்ல, கீழே உட்கார வைத்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்துவிட்ட தீர்மானங்களுக்கு கையெழுத்து போடுவது மட்டும்தான். போட்டால் தான் செல்லும் என்பதால், சிறு மாற்றம். சிறு முன்னேற்றம். ஆனால், இன்னும் அந்த உள்ளாட்சிகளில் கிராமங்களில் என்ன நடக்கிறது ? ஒரு பக்கம் நம் அறிஞர்கள் எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டார் வழிபாடு பார்ப்பான் எதிர்ப்பை உள்ளடக்கியது. அது தமிழர் பண்பாடு என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நமக்கு அதில் கருத்து வேறுபாடு உண்டு. தீண்டாமையை இந்த சிறு தெய்வங்கள் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றன. தாழ்த்தப்பட்டவன் அந்தக் கோயில்களுக்குள்ளே நுழைய முடியாது. அங்கு ஓடுகிற தேரின் வடத்தை இவன் தொட முடியாது. பெருந்தெய்வங்களையெல்லாம்கூட தொட்டு விடலாம். கண்டமங்கலத்தில் இன்னும் தேருக்கான போராட்டம் நீதிமன்றம் ஆணையிட்டாலும் நடந்து கொண்டு இருக்கின்றது.

ஒரு பக்கம் காவேரி நீருக்காக, முல்லை பெரியாறுக்காக போராடிக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் வாகரை என்ற ஊராட்சியின் அந்த தலைவர் தன்னுடைய கிராமத்திற்கு தண்ணீரைக் கொண்டு போகிறார், அரசு திட்டத்தின் வழியாக கொண்டு போகிறார். அதை அனுமதிக்க மாட்டேன் என்கிறான். காவேரியையும், முல்லை பெரியாறு, பாலாறையும் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். பேச வேண்டியதுதான். அதற்கு முன்னால் நம்மோடு இருக்கின்ற சக மனிதன் அவன் தலைவனாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும்கூட தன்னுடைய பகுதிக்கு அரசு திட்டத்தின் வழியாக, சட்டப்படியாக நீர் கொண்டு செல்வதற்குக்கூட தடுக்கப்படுகிற நிலை இன்னும் இருக்கின்றது.

நாம் உள்ளூர் சிக்கல்களைப் பார்க்கிறோம். இங்கிருந்து தொடங்குவோம். பெரியார் வழியில் நாராயண குரு இருந்தார். அவர் சில அமைப்புகளை, இயக்கங்களை, திட்டங்களை, செய்திகளைச் சொல்லி ஒரு சிறு மாற்றத்தை ஏற்படுத்தினார். அதற்குப் பின்னால் அய்யன்காளி வந்தார். அவர் பார்த்தார் நாராயணகுரு அமைதியாக போதித்தார். அய்யன்காளி, எவனாவது டீ கடையிலே, கள்ளுக்கடையிலே தீண்டத்தகாதவன் என புறக்கணித்தால் உதைத்தார், ஆட்களைக் கொண்டு போய் அடித்தார். மாட்டு வண்டியிலே போகக் கூடாது என்றால் அடித்தார். இதைத்தான் அய்யன்காளி செய்தார்.

இங்கே இந்து மதக் கொடுமை தாங்காமல் கிருத்துவ மதத்தைத் தழுவிக் கொண்டார்கள் சில பேர். அமெரிக்கா போன்ற நாடுகளிலே கிருத்துவர்களாக இருந்த நீக்ரோக்களில் கொஞ்சம் பேர் இசுலாமியர்கள் ஆனார்கள். அவர்கள் கேட்டார்கள், கிருத்துவனைப் பார்த்து, என் பிள்ளைகளை, குழந்தைகளை, மனைவியை, பெண்களை நீ நிறவெறியில் கொன்று போடுகிறாய், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று ஏசு சொன்னார் என்று சொல்கிறீர்கள், ஆனால் எங்கள் பிள்ளைகளைக் கொலை செய்கிறாய். அதனால் நாங்கள் இசுலாமியர்களாகிறோம் என்றார்கள்.

பெரியார் சொன்னார், "தேவைப்படுகின்ற எந்த வழியிலாவது நாம்

(4 ஆம் பக்கம்)

### கழகத்தின் முயற்சிக்கு வெற்றி
### வடலூரில் பார்ப்பன பூசகர் வெளியேற்றம்

தில்லையில் சிவபக்தராக வழிபடச் சென்ற வள்ளலாரை - பார்ப்பனக் கும்பல் விரட்டி அடித்தது. வள்ளலாரின் 'அருட்பாவை' ஏற்க மறுத்து - ஆறுமுக நாவலரைக் கொண்டு 'மருட்பா' எழுதி வெளியிட்டு - வள்ளலார் மீது வழக்கும் தொடர்ந்தார்கள். சைவத்தின் பெயரால் - பார்ப்பனியம் இழைக்கும் அநீதிகளைக் கண்டு கொதித்தெழுந்த வள்ளலார் 1872 இல் வடலூரில் உத்தர ஞான சிதம்பரம் என்ற சபையை நிறுவி, ஏழைகளுக்கு உணவு அளித்து பார்ப்பனச் சடங்குகளை விலக்கி, புதிய மார்க்கத்தை உருவாக்கினார். வள்ளலார் சபைக்குள் புகுந்த ஆடூர் சபாபதி குருக்கள் என்ற பார்ப்பனர் - முதலில் வள்ளலார் கொள்கையை ஏற்பது போல் நடித்து - அவரது மறைவுக்குப் பிறகு - வள்ளலார் நெறிக்கு மாறாக, வள்ளலார் சபையில் பார்ப்பனியத்தைப் புகுத்தினார்.

சிவலிங்க பூசை, பிரதோஷ வழிபாடு, பூணூல் அணிந்த அர்ச்சகர் என்று 'பார்ப்பனியம்' நுழைந்தது. அவரது வழி வந்த சபாநாத ஒளி பார்ப்பன இந்துத்துவா சக்திகளின் பேராதரவுடன் வள்ளலார் மார்க்கத்தைக் குழி தோண்டி புதைப்பதை எதிர்த்து முற்போக்காளர்கள் - பார்ப்பன எதிர்ப்பாளர்கள் போராடினார்கள். பெரியார் திராவிடர் கழகம் மற்றும் வள்ளலார் வழிவந்த உண்மைத் தோழர்களும் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி போன்ற அமைப்புகளும் இதை எதிர்த்துப் போராடின. கழக சார்பில் பல்லாயிரக்கணக்கில் துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

கடந்த ஜன 27 ஆம் தேதி வடலூரில் வள்ளலார் சத்திய ஞான சபையில் நுழைந்துள்ள பார்ப்பன பூசகர் சபாநாத ஒளியை வெளியேற்றக் கோரி பெரியார் திராவிடர் கழகம் மாபெரும் பொதுக் கூட்டத்தை நடத்தியது. பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் பாலு (பு.மா.கி.மு.) வள்ளலார் தொண்டர் தி.பாலகுரு, வழக்கறிஞர் இராசு, சித்த மருத்துவர் சுப்பையன் ஆகியோர் உரையாற்றி, வள்ளலார் சபையிலிருந்து பார்ப்பன அர்ச்சகரை நீக்க வேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்தனர். கழகம் முன் வைத்த கோரிக்கை வெற்றி பெற்றுள்ளது. கடந்த மே 17 ஆம் தேதி தமிழக அரசின் அறநிலையத் துறை சபாநாத ஒளி சிவாச்சாரியாரை வெளியேற்ற உத்தரவிட்டது. பார்ப்பனர் வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து வள்ளலார் நெறியின்படி மீண்டும் தொடங்கியுள்ளது.

# எப்படி வந்தது "ராமன்" பாலம்?

"மக்களிடம் மரபு வழியாக நிலை பெற்றுள்ள நம்பிக்கைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்து, மக்களைத் திருத்த முடியாது. எனவே ராமாயணம், மகாபாரதம் போன்றவற்றை முற்றாக எதிர்த்துப் பெரியார் பிரச்சாரம் செய்வது, எதிர்விளைவுகளையே உருவாக்கும்" - என்று பல "முற்போக்கு"வாதிகள் - பெரியார் பிரச்சாரத்தைக் கடுமையாகக் குறை கூறினார்கள். இன்னும் ஒரு படி மேலே போய், ராமாயணத்தில் வரும் ராமன் பாத்திரம் - பொதுவுடைமைப் பேசுகிறது. அயோத்தியில் சோசலிச ஆட்சி நடந்துள்ளது என்றெல்லாம், பிரச்சாரம் செய்து நூல் எழுதிய "முற்போக்காளர்களும்" தமிழ்நாட்டில் இருக்கவே செய்தார்கள்.

'முற்போக்குக் கருத்துக்களை பழமையில் தேடாதீர்கள். அரிசி தேவை என்றால் அரிசி கடைக்குப் போய் வாங்குங்கள். மலத்தில் அரிசி பொறுக்காதீர்கள்' என்று பெரியார் அவருக்கே உரிய மொழியில் பதிலளித்தார். பெரியாரின் பதில் - அன்று பலரை முகம் சுளிக்க வைத் திருக்கலாம். ஆனால், பெரியாரின் அணுகுமுறைதான் சமூகத்துக்குப் பயன்தரும் என்பதை காலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. அயோத்தி ராமன் அரசியல் மய்யப் பிரச்னையாக மாற்றப்பட்டபோது - 'ராமன்' கடவுள் அல்ல; அவதாரம் அல்ல; ராமாயணம் பொய்; புனைவு; என்ற கருத்தைப் பேச வேண்டிய கட்டாயம் உருவானது. 'ராமனை' அரவணைத்துப் போக வேண்டும் என்று அதுவரை பேசி வந்தவர்கள் தங்கள் குரலை மாற்றிக் கொள்ள நேர்ந்தது.

அடுத்து, மதவெறி சக்திகள் - இப்போது - ராமனை - 'சேது சமுத்திரத் திட்டத்துக்கு' இழுத்து வந்து விட்டார்கள். பா.ஜ.க.வினர் மட்டுமல்ல, பார்ப்பன செயலலிதாவே 'ராமன்' கட்டிய பாலத்தை இடித்துவிட்டு சேது சமுத்திரத் திட்டத்தை கொண்டு வரக் கூடாது என்கிறார். இராமகோபாலன்களும், இல.கணேசன்களும், குருமூர்த்திகளும் பூணூலை உருவிக் கொண்டு தொடை தட்டுகிறார்கள்.

'இருந்த மசூதியை இல்லாத ராமனுக்காக இடித்தார்கள்; இல்லாத பாலத்தை இராமனுக்காக இடிக்கக் கூடாது என்கிறார்கள்' என்று ஒரு புதுக்கவிதையை கவிஞர் ஒருவர் எழுதினார்.

இராமன் கட்டிய பாலத்தை இடிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள். அனுமான் எரித்துப் பொசுக்கிய இலங்கை இருக்கக்கூடாது என்று போராடினாலும் வியப்பதற்கு இல்லை. கற்பை நிருபிக்க பெண்கள் - இராமபிரான் வைத்த சோதனையைப் போல் 'எரியும் நெருப்பில் குளித்து மீள வேண்டும்' என்று கூட அடுத்தப் போராட்டத்தை இவர்கள் தொடங்கிவிடலாம். இந்த மதவெறி சக்திகள் பரப்பி வரும் கருத்துகளில் கடுகளவாவது உண்மையோ, அறிவு சார்ந்த வாதங்களோ இருக்கிறதா ?

இவர்கள் என்னதான் சொல்கிறார்கள் ?

சீதையை மீட்க இலங்கை மீது இராமன் படை எடுத்துச் சென்றபோது, கடலைக் கடக்க வானரங்களின் உதவியோடு ஒரு பாலம் அமைத்துக் கொண்டு, அந்தப் பாலத்தின் வழியாகச் சென்று, ராவணனை வீழ்த்தி, சீதையை மீட்டு வந்தான். இப்போது திட்டமிடப்பட்டுள்ள சேதுக் கால்வாய்த் திட்டம் கடலுக்கு அடியிலுள்ள அந்த இராமன் பாலத்தை இடித்துத்தான் கட்டப்பட இருக்கிறது. எனவே ராமன் பாலத்தை இடித்துவிட்டு சேதுக் கால்வாய் திட்டத்தைக் கட்டக்கூடாது என்பதே பா.ஜ.க. இந்து முன்னணி - ஜெயலலிதா மற்றும் பார்ப்பனர்களின் வாதம்.

சரி; இராமாயணம் எப்போது நடந்தது ? 'திரேதாயுகத்தில்' நடந்தது என்கிறார்கள். அதாவது 17,50,000 ஆண்டுகளுக்கு முன்பு ! இந்த 17.5 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு - மனித இனமே உருவாகவில்லை. இரண்டு கோடி வருடங்களுக்கு முன் 'பிரை மேட்ஸ்' எனும் குரங்கினம் தோன்றியிருக்கின்றன. அவற்றிலிருந்து 20 லட்சம் வருடங்களுக்கு முன் தான் - மனிதனின் மூதாதைகள் உருவாகின. அதற்குப் பிறகு சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன் தான் நவீன மனிதன் (Homo-Sapiens) உலகம் முழுதும் பரவ ஆரம்பித்துள்ளான். மனித உயிர்களின் பரிணாம வளர்ச்சியே பெறாத காலத்தில் - ராமன் வாழ்ந்தான் என்பதும் - அவன் பாலம் கட்டினான் என்பதும் கட்டுக்கதை - அல்லவா ?

அப்படியானால் இவர்கள் இராமன் கட்டிய பாலம் என்று எதைச் சொல்கிறார்கள் ?

ராமேசுவரத்துக்கும் - தலை மன்னாருக்கும் இடையே கடல் பரப்பிற்குக் கீழே ஒரு நீண்ட மணல் திட்டு தெரிகிறது. இந்த மணல் திட்டையே, இவர்கள் 'இராமன் பாலம்' என்று கதை விடுகிறார்கள். அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மய்யமான 'நாசா' விண்வெளிக் கோள் மூலம் படம் பிடித்து, கடலுக்குடியில் பாலம் இருந்ததாக கூறியுள்ளது என்று, இவர்கள் கடந்த பல ஆண்டுகாலமாகவே ஒரு புரளியைக் கிளப்பி விட்டார்கள்.

நாசா ஆய்வு மய்யம் அதை மறுத்துவிட்டது. உலகின் பல பகுதிகளில் கடலுக்கடியில் இருப்பவைகள் பற்றி விண்வெளிக் கோள் மூலம், நாசா ஆய்வு மய்யம் படம் பிடித்து வருகிறது. அப்படி 2002 ஆம் ஆண்டு ராமேசுவரம் தலைமன்னார் பகுதியிலும் படம் பிடித்தது உண்மை. அந்த படங்களை இந்திய விண்வெளி ஆய்வு மய்யத்திடம் நாசா வழங்கியது. உலகின் பிற பகுதிகளில் கடலுக்கடியில் மணல் திட்டுகள் இருப்பது போலவே இந்தியாவின் இந்தப் பகுதியிலும் மணல் திட்டுகள் இருக்கின்ற என்றே 'நாசா' அறிவித்தது. இதைத் தொடர்ந்து அமெரிக்காவில் 'இந்துத்துவ' சக்திகளின் இணைய தளமான 'இந்தோலிங்க்' என்ற இணைய தளமும், 'வைகணவா' என்ற செய்தி தொடர்பகமும் கடலுக்கடியில் ராமன் கட்டிய பாலம் இருப்பதாக 'நாசா' அறிவித்துவிட்டது என்ற பொய்ச் செய்தியைப் பரப்பியது. இந்தக் கட்டுக்கதையை இந்தியாவிலுள்ள ஒரு செய்தி நிறுவனம் (பி.டி.அய்.) உலகம் முழுதும் பரப்பியது. அப்போதே 2002 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் - 'மார்கேசு' எனும் நாசாவைச் சார்ந்த அதிகாரி மறுத்துவிட்டார். நாசா நிறுவனத்தின் ஆய்வின்படி கடலுக்கடியில் இருந்தது மணல் திட்டு தான்; அது பாலம் என்றோ, அதைக் கட்டியது 'ராமன்' என்றோ நாசா கூறவில்லை. அது தங்களின் ஆய்வுக்குரியதும் அல்ல என்று தெளிவுபடுத்திவிட்டார். ஆனாலும் பொய்யைப் பரப்புவதையே 'தர்மம்' என்று நம்பும் பார்ப்பன சக்திகள் தொடர்ந்து தங்களது கட்டுக்கதைகளைப் பரப்பி வருகின்றன.

இந்த மணல் திட்டுகள் கடலுக்கடியில் எப்படி வந்தன ? இதற்கு பூகோள, புவியியல் விஞ்ஞானம் விடை கூறுகிறது.

இன்று உலகில் தனித் தனியாக உள்ள கண்டங்கள் ஒரு காலத்தில் ஒன்றோடு ஒன்றாக இணைந்தே இருந்தன. பூகோளவியலில் இப்படி ஒன்றாக இணைந்திருந்த நிலப்பிரிவு, "பாங்கியா" என்று அழைக்கப்படுகிறது. பூமியின் வெப்பத்தினால் மாற்றங்கள் நிகழ்ந்தன. பூமியின் மய்யப் பகுதி இறுகி, அதனால் மேல் பகுதிகள் இளகி, ஒன்றிலிருந்து ஒன்றாகப் பிரிந்து பல கண்டங்களாக உருவெடுத்தன. இதை கண்டங்களின் விலகல் (கான்டினென்டல் டிரிப்ட்) என்று பூகோளவியல் கூறுகிறது. இதைப் பற்றி - பூகோளவியலிலும் நிலவியலிலும் விரிவாக கற்றுத் தரப்படுகிறது. இந்தப் பாடத்துக்குப் பெயர் 'வேகனர்ஸ் கான்டினென்டல் ட்ரிப்ட் தியரி' என்பதாகும். இப்படி ஒன்றாக இணைந்திருந்த கண்டங்கள் விலகியபோது இரு கண்டங்களை இணைத்திருந்த ஒரு நிலப்பரப்பு கடலுக்கு அடியில் போனது. புவியியலில் இதற்குப் பெயர் 'இஸ்மஸ்' என்பதாகும். இதுதான் கடலுக்கு அடியில் உள்ள மணல் திட்டுகள். இந்த மணல் திட்டுகள் ராமேசுவரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் சேது சமுத்திரத்திட்டம் அமையப் போகும் இடத்தில் மட்டும் தான் இருக்கிறதா என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதில். உலகில் ஏராளமான இடங்களில் இதேபோல் மணல் திட்டுகள் கடலுக்கு அடியில் இருக்கின்றன.

- தென் அமெரிக்க மற்றும் வட அமெரிக்க கண்டங்களை இணைக்கும் கடல் பகுதியில் இத்தகைய மணல் திட்டுகள் இருக்கின்றன. இந்த மணல் திட்டின் மீது தான் பனாமா கால்வாய் வெட்டப்பட்டு, கப்பல்போக்குவரத்து நடைபெறுகிறது. பசிபிக் கடலையும், அட்லாண்டிக் கடலையும் இணைப்பது பனாமா கால்வாய் தான். இந்தக் கால்வாய் அமையாமல் போயிருக்குமானால், பசிபிக் கரையோர துறைமுகங்களுக்கு வரும் கப்பல்கள், தென் அமெரிக்கக் கண்டம் முழுவதையும் சுற்றி வர வேண்டியிருந்திருக்கும்.
- அய்ரோப்பா கண்டத்தையும் - ஆப்பிரிக்கா கண்டத்தையும் இணைக்கும் கடல் பகுதியிலுள்ள மணல் திட்டு மீது தான் சூயஸ் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. மத்திய தரைக்கடலையும், செங்கடலையும் இணைப்பது சூயஸ் கால்வாய்தான். இதன் வழியாக வெற்றிகரமாக கப்பல் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.
- நியுசிலாந்து தீவுக்கு அருகிலுள்ளவை ஆக்லாந்து தீவுகள் மற்றம் கிரேட்டர் ஆக்லாந்து தீவுகள். இவைகளை இணைக்கும் கடலுக்கடியில் மணல் திட்டுகள் இருந்தன. இந்த 'மணல் திட்டு'களை வெட்டி எடுத்து - அங்கே கால்வாய் கட்டப்பட்டு, தீவுகள் இணைக்கப்பட்டுள்ளன.
- கனடா நாட்டை - அதன் அருகே - நியுபவுண்ட் லான்ட் தீவுகளை இணைக்கும் கடல்பகுதியிலும், ஆஸ்திரேலியாவை - அதன் அருகே உள்ள டாஸ்மேனியா மற்றும் புரூனித் தீவுகளையும் இணைக்கும் கடலுக்கு அடியிலும் உள்ள மணல் திட்டுகள் வெட்டி எடுக்கப்பட்டு கால்வாய்கள் வெட்டப்பட்டு, கப்பல் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

ராமேசுவரத்துக்கும் - தலைமன்னாருக்கும் இடையே கடலுக்கு அடியில் இருக்கும் மணல் திட்டுகள் - உலகின் ஏனைய பகுதியிலுள்ள மணல் திட்டுகள் போன்றுதான் என்று அமெரிக்காவின் வெளி ஆய்வு நிலையம் கூறுகிறது. ராமேசுவரத்துக்கும் - தலைமன்னாருக்கும் இடையே கடலுக்கடியிலுள்ள மணல் திட்டுகளை ராமன் கட்டிய பாலம் என்று கூறுகிறவர்கள், உலகின் இதர பகுதிகளில், இதே போன்று - கடலுக்கடியிலுள்ள மணல் திட்டுகளையும், ராமன் கட்டினான் என்று கூறுவார்களா ? மத்திய அரசும் சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பாக தாக்கல் செய்த மனுவில் தெளிவாக மறுத்துள்ளது. அந்த மனுவில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"தலை மன்னார் - தனுஷ்கோடி இடையே பாலம் கட்டப்பட்டு இருந்ததற்கு அறிவியல், இலக்கியம், வரலாறு, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆதாரம் இருப்பதாகக் கூறுவ தவறு. அங்கு மனிதனால் செயற்கையாக கட்டுமானப் பணிகள் நடந்ததற்கான அடையாளம் காணப்படவில்லை.

நாசா வெளியிட்ட படத்தை ஆதாரமாக வைத்து மனு தாக்கல் செய்துள்ளனர். இதை வைத்து அதை ராமர் பாலம் என்று கூறக் கூடாது. அந்தப் படம் மட்டும் தங்களுடையது என்றும், ஆனால், அது ராமர் கட்டிய பாலம் என்ற கருத்து தங்களுடையதல்ல என்றும் நாசா தெளிவுபடுத்தி இருக்கிறது. 17 லட்சத்து 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தப் பாலம் கட்டப்பட்டதாக கூறுகிறார்கள். இதற்கான ஆதாரம் ஒன்றுமில்லை. கம்பராமாயணத்திலும், வால்மீகி ராமாயணத்திலும் ராமர் பாலம் கட்டப்பட்டது பற்றி தெளிவாக குறிப்பிடப்படவில்லை.

ராமநாதபுரம் மாவட்டம் குறித்த அரசு ஆவணங்களில் ராமர் பாலம் கட்டப்பட்டதாக எழுதப்பட்டு உள்ளது என்று மனுதாரர்கள் கூறுகின்றனர். ஆனால், அதை கதை என்றும், அப்படிப்பட்ட கதையில் கூட, இலங்கையில் இருந்து ராமர் திரும்பி வந்து அம்பு மூலம் பாலத்தை அழித்துவிட்டார் என்றே அந்த ஆவணங்கள் கூறுகின்றன. எனவே எந்த விதத்திலும் ஆதாரம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டு உள்ள மனுக்களை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்ய வேணடும்" - என்று மத்திய அரசே திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

'நாசா' இந்த 'மணல் திட்டு' படத்தை வெயிடுவதற்கு முன்பு - இந்த மதவெறி சக்திகள் வேறு ஒரு கதையைப் பரப்பி வந்தார்கள். ராமேசுவரம் கோயிலுக்குப் போனால், அங்கு தண்ணீரில் மூழ்காமல் மிதக்கக்கூடிய பவழப் பாறைகளைக் காண முடியும். இந்தப் பவழப் பாறைகளைக் கொண்டுதான் இராமன் பாலம் கட்டினான் என்று கூறி வந்தவர்கள், 'நாசா' படம் வந்த பிறகு, தங்களது குரலை மாற்றிக் கொண்டார்கள். செயற்கைக் கோள் படம் - கடல் பகுதியில் தொடர்ச்சியாக சுண்ணாம்புக்கல் இருப்பதைப் படம் பிடித்துக் காட்டியப் பிறகு, ராமன் சுண்ணாம்பால், இந்தப் பாலத்தைக் கட்டினான் என்று கதையளக்கத் துவங்கிவிட்டார்கள். இதற்கும் விஞ்ஞான அடிப்படை கிடையாது. சுண்ணாம்பைக் கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தத் தொடங்கியது 3000 ஆண்டுகளுக்கு முன்புதான். ஆனால் - திரேதாயுகத்தில் ராமன் சுண்ணாம்புக்கல் பாலம் கட்டினான் என்று, காதில் பூ சுற்றுகிறார்கள்.

பாமர மக்களிடம் - ஊறிப்போன நம்பிக்கைகளைச் சுரண்டி, மதத்தின் அடிப்படையில் மக்களை திரட்டலாம் என்பதே இவர்களின் நோக்கமாகும்போது, மக்களிடம் ஊறிப் போயிருக்கிற, அந்த நம்பிக்கைகளைத் தகர்க்கும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டாமா என்பதே நமது கேள்வி ? 'ராமன்' அரசியலுக்கு வந்துவிட்டதால், இப்போது 'ராமனை'யும், ராமாயணத்தையும் விமர்சிக்கலாம். மற்ற புராண - இதிகாச - வேத - பார்ப்பனிய கருத்துகளை எதிர்த்து மக்களிடம் பிரச்சாரம் செய்ய வேண்டியதில்லை என்று ஒதுங்கிக் கொண்டால், அடுத்தடுத்து புதிய புதிய 'புராணங்கள்' அரசியல் தளத்துக்குக் கொண்டு வந்து கடை விரிக்கவே செய்வார்கள்.

எனவே - மதச் சார்பின்மையில் உண்மையான கவலை கொண்ட அமைப்புகள் கட்சிகள், பகுத்தறிவுப் பிரச்சாரத்தைச் செய்யும் போதுதான், மதவெறி சக்திகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்த முடியும் ! என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ❑

### தஞ்சை கழக மாநாட்டில் கவிஞர் வெண்ணிலா உரை

# பெண்ணுரிமைக்குப் போராடியவர், புலே !

*தஞ்சையில் நடந்த சாதி ஒழிப்புக் கருத்தரங்கில் கவிஞர் வெண்ணிலா ஆற்றிய உரை – கடந்த இதழ் தொடர்ச்சி :*

இரண்டாவது அவர் செய்த முக்கியமான பணியாக நாம் எதைப் பார்க்கவேண்டும் என்றால், கல்வியில் அவர் செய்த புரட்சி. என்ன தான் சாதி இல்லையின்னு பேசிக் கொண்டிருந்தாலும், இந்த நாட்டில் சாதியை ஒழிக்க முடியாது. அடிப்படையாக தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்குமான கல்வி கொடுப்பதே சாதியை ஒழிக்க ஒரேவழி.

'மகாத்மா' என்றால் ஒரு குழந்தைகூட காந்தியைத்தான் சொல்லும். ஆனால் காந்தியோட அரசியல் வாழ்க்கை ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் போதே ஜோதிபாபுலேவுக்குத்தான் 'மகாத்மா' என்ற பட்டமே கொடுக்கப்பட்டு விட்டது. இதற்குப் பின்னால் நம் அரசியல் இரட்டடிப்பு என்பது எவ்வளவு கேவலமா இருந்திருக்கு என்பது ஆச்சரியமா இருக்கு. புலேவுக்கு 'மகாத்மா' பட்டம் வழங்கப்பட்டது யாருக்குமே தெரியலே. 1888 செப். 11 இல் - அவருக்கு 'மகாத்மா' பட்டம் வழங்கப்பட்டது.

முதன் முதலில் அவர் பள்ளி துவங்குகிறார். சூத்திர வாதி - சூத்திரர் என்று அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களான பெண்களுக்கான பள்ளியைத் துவக்குகிறார். தீர்க்க தரிசனமாக ஒரு தலைவர் செயல் திட்டங்களை வடிவமைச்சிருக்கார். பெண்களுக்கான பள்ளிக்கூடம் என்ற உடனே புனேவில் இருந்த மொத்த பார்ப்பனர்களும் பதைக்கிறார்கள். ஏற்கெனவே இந்த ஆளு நமக்கு புரியாததையெல்லாம் பண்ணிக்கிட்டிருக்கான், அதுவும் தாழ்த்தப்பட்ட பெண் பிள்ளைகளை படிக்க வெச்சாருன்னா நம்ம நாடு அழிவுக்கான இடத்தை நோக்கி போயிக்கிட்டிருக்கு என்றுச் சொல்லி, அந்தப் பள்ளிக்கு யார் யாரெல்லாம் பாடம் நடத்தப் போறாங்களோ அவர்கள் எல்லோரையும் மிரட்டி, பள்ளிக்கு பாடம் நடத்தப் போகாமல் தடுத்தார்கள்.

புலே என்ன செய்கிறார் ? தன்னுடைய மனைவி சாவித்திரி பாயை 7 வயதில் திருமணம் செய்து கொண்டவர். படிப்பறிவே இல்லாத பொண்ணு. அவருக்கு எழுத்தறிவு கற்றுக் கொடுத்து, இந்தியாவில் முதல் பெண் ஆசிரியராக அந்தப் பள்ளிக்கு அவரை அனுப்புகிறார். சாவித்திரிபாயின் உணர்வுகளைப் படித்துப் பார்த்தால் ரொம்ப ஆச்சரியமாக இருக்கு. அவர்கள் எழுதுகிறார்கள் - 7, 8 வயதில் திருமணமாகி வீட்டுக்குள் நுழைந்த பிறகு நான் வெளியே போனதில்லை. ஆனா, முதல் முதலாக இன்றைக்கு நான் ஒரு பள்ளி ஆசிரியராக காலடி எடுத்து வைக்கும்போது என்னுடைய மன உணர்வுகளை சொல்லவே முடியல ஒரு பக்கம் பெருமிதத்திலேயும், மகிழ்ச்சியிலும் இருந்தாலும், இன்னொரு பக்கம் என்னை மீறி ஒரு திகில் வந்து சூழ்ந்துக்கிட்டே இருந்திச்சி என்றார். ஏன்னா ரோட்டில் இரண்டு பக்கமும் மக்கள் வந்து நின்று பாக்குறாங்க. 'ஒரு பொம்பளப் பொண்ணு திருமணமான பொண்ணு வீட்டை விட்டு வெளியில் வருவதா ?' அப்படின்னு மக்கள் வழி நெடுக பார்க்குறாங்க. இவள் எங்கே தான் போகிறாள் என்று ஆச்சரியமா பார்த்து அவங்க பள்ளிக்கூடத்துக்குள்ளே நுழையறாங்க என தெரிந்தவுடனே, அந்த சின்ன கிராமமே தீப்பிடிச்சி எரியறா மாதிரி எரிகிறதாம். ஒரு பெண்ணு பள்ளிக்கூடத் துக்கு வாத்தியாரா போறதா, இது என்ன காரியம், அப்படின்னு சொல்லி அவரது அப்பாவுக்கு பெரிய மிரட்டல் விடுகிறார்கள். இவர்கள் நடந்து வரும்போது கல் எடுத்து வீசுகிறார்கள். முகத்துக்கு நேரா காரி உமிழ்கிறார்கள். இவையெல் லாம் நாம் படிக்கும்போது நமக்கு செய்தியாக இருக்கலாம். ஆனால், அந்த நிலையில், அந்த கணத்தில், அந்த உணர்வில் அனுபவிப்பதின் வேதனையும் நாம் உணர்ந்து கொண்டோமானால், நம்மிடம் நிச்சயம் சாதி என்ற உணர்வே இல்லாமல் போய்விடும்.

பெண்களுடைய முன்னேற்றத்தால் மட்டுமே மிகப் பெரிய மாற்றத்தை கொண்டுவர முடியும் என்று ஜோதிபாபுலே அவர்கள் முதலில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒரு பள்ளியைத் துவங்கினா லும், பின்னர் பொதுப் பிரிவினருக்கான பெண்களுக்கான ஒரு பள்ளியை துவக்கு கிறார். புலே பார்ப்பன ஆளுமையையே எதிர்த்தார். அதனாலேதான் முதன் முதலில் விதவைகள் மறுவாழ்வு இல்லம் மற்றும் சிசுக் கொலைத் தடுப்பு மையத்தை அவர் தொடங்கினார். விதவைகளுக்கான கொடுமை அப்போது பார்ப்பன பெண் களுக்குத் தான் அதிகமாக இருந்தது. 7 வயது, 3 வயது, ஏன் 1 வயது குழந்தைகளும், அறியாப் பருவத்திலேயே விதவையானார்கள். அதுக்கு மொட்டை அடிச்சி, வீட்டை விட்டு வெளியே வரக் கூடாது என்பது ஒரு சடங்கு.

ஆங்கில அரசாங்கம் ஒரு கணக்கு எடுத்து அறிவித்தார்கள். மருத்துவமனைகளில் சிசிக்சைக்காக வந்த 'விதவை'ப் பெண்களில் பெரும்பாலோர் எப்படி வந்தார்கள் என்றால், நாற்பது, அம்பது வயதுள்ள ஆண்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, நடக்கக்கூட முடியாத நிலையிலேயே தவழ்ந்து கொண்டு, இடுப்பு எலும்பு உடைந்து போய் உயிர்ப் பிழைப்பதே அரிது என்ற நிலையிலே தான் அந்தக் குழந்தைகள் மருத்துவமனைக்கு வந்தார்கள். அவர்கள் மீது செலுத்தப்பட்ட பாலியல் வன்முறை வரம்பு இல்லாதது என்று 1938 இல் ஆங்கிலேய அரசுப் பதிவேடுகளில் எழுதப்பட்டுள்ளன.

ஆனால், 1800 களில் இந்த நிலைமை எவ்வளவு மோசமாக இருந்திருக்கும் ? வீட்டில் இருக்கும் ஆண்களின் பாலியல் தொந்தரவாலே ஒவ்வொரு குழந்தையும் வயிற்றில் கரு சுமந்த பிறகு அவர்கள் தவித்த தவிப்புகளை எல்லாம் சாவித்திரிபாயும், ஜோதி பாபுலேவும் பார்த்து, இந்த பார்ப்பன விதவைப் பெண்களுக்காக நாம் ஏதாவது நிச்சயம் செய்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்த பிறகு தான், விதவைப் பெண்களுக்கான பிரசவம் பார்ப்பதை தன் வீட்டில் வைத்தே பார்த்தார்கள்.

விதவைப் பெண்கள் எல்லாம் இந்த விசயம் வெளியே தெரிந்து விடும் என பயந்துக் கொண்டு பிரசவம் பார்க்க வரவேயில்லை. இவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து பெரிய சுவரொட்டி அடித்தார்கள். இங்கு யாருக்கு பிரசவம் பார்க்கப்படுகிறது, யாருக்கு எந்தக் குழந்தை பிறந்தது என்பது யாருக்கும் தெரியாமல் ரகசியமாக வைக்கப்படும் என்று புனே நகரம் முழுதும் ஒட்டினார்கள். கங்கையிலும், காசியிலும் போய் அங்கங்கே ஒட்டி வைக்கிறாங்க. ஏன்னா இந்த பெண்கள் வேறு வழியில்லாமல் கங்கையிலே போய் தான் சாவார்கள். அதனாலேதான் இதை படித்துவிட்டாவது திரும்பி வரட்டும் என அங்கே சுரொட்டிகளை ஒட்டினார்கள்.

அப்படி வந்த விதவைப் பெண்ணின் குழந்தை தான் ஜோதி பாபுலே தத்தெடுத்துக் கொண்ட யஷ்வந்த் புலே.

மதம் சார்ந்து மட்டும் தன் நடவடிக்கைகளை விரிவுபடுத்திக் கொள்ளாமல் அவருடைய முதன்மை இலக்காக மனிதம் என்பது மட்டுமே மேலோங்கியிருந்தது. அதற்கான அத்தனை களப்பணிகளிலும் தன்னுடைய மனைவியையும், அவர் இணைத்துக் கொண்டார். இன்றைக்கு மராட்டிய உலகத்தில் ஜோதி பாபுலேவை ஒரு எழுத்தாளராக யாரும் பேசுவதில்லை. ஆனால் அவர் கண்டுபிடித்த 'அகண்ட்' என்ற கவிதை பாணி இன்றைக்கும் குறிப்பிடத் தகுந்த விசயமாக இருக்குது. ஏன்னா, 'அவங்' என்ற பாடல் சமயக் குறவர்களுடைய பக்தி சுலோகங்களைச் சொல்ற பாடல்களாக இருந்தது. அதற்கு எதிராக ஒரு கவிதை வடிவத்தையே அவர் முன்னிறுத்தினார்.

ஆக, காலந்தோறும் தொடர்வது இடைவெளி விடாதது, அப்படியிங்கிற அர்த்தத்தோட ஒரு கவிதை பாணியையே உருவாக்கினார். அதில் பார்ப்பனர்களுடைய பித்தலாட்டங்களை அம்பலப்படுத்தினார். அதேபோல அவர் 'அடிமை முறை' எனப் பல நூல்களை எழுதியிருக்கிறார்.

தன்னுடைய அத்தனை பயணத்தையும், களப்பணியாளராக இருந்தாலும் சரி, ஒரு நிறுவனத்தை நடத்துபவராக இருந்தாலும் சரி, பள்ளியின் தலைவராக இருந்தாலும் சரி, அந்தப் பள்ளியைக்கூட எதிர்காலத்தில் அரசாங்கம் நடத்தும் என சொல்லும்போது தாராளமாக விட்டுக் கொடுக்கிறார். நான்தான் நடத்த வேண்டும் என்று எந்தக் காலத்திலேயும் அவர் கூறியது கிடையாது. ஆனால், நான் நினைக்கின்ற விசயத்தை யார் செய்தாலும் அவர்களுக்கு ஒத்துழைப்பு தருவேன் என்று தன் வாழ்நாள் முழுக்க தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டும் அல்லாமல் எங்கெல்லாம் மனித குலம் துயருற்று கண்ணீர் வடிக்கிறதோ அங்கெல்லாம் ஆதரவுக் கரத்தை நீட்டினார் புலே. இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னாலும் இன்றும் புலே தொடங்கிய சமூகப் புரட்சி - அவர் தொடங்கிய இடத்திலேயே அங்கே நின்று கொண்டிருக்கிறது என்பதுதான், இந்தத் தலைமுறையின் சோகம். அதை மாற்றுவதற்கு நம்மில் எத்தனைப் பேர் தயாராக உள்ளோம் என்பதே இந்தக் கருத்தரங்கம் எழுப்பும் கேள்வியாக இருக்க வேண்டும் - என்றார் கவிஞர் வெண்ணிலா. ●

## 'இந்து'வின் சின்ன புத்தி

சிகிச்சை பெறுவதற்கும், வெளிநாடு போவதற்கும், வேலை தேடுவதற்கும் என்று, கொழும்பு தனியார் விடுதிகளில் அறைகள் எடுத்துத் தங்கிய 500 தமிழர்களை ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி 30 நிமிடத்துக்குள் வெளியேற்றி, தனிப் பேருந்துகள் ஏற்பாடு செய்து, தமிழ் ஈழப் பகுதிக்கு கொண்டு போய் இறக்கியது சிறீலங்கா அரசு.

ஈழப் பிரச்சினையில் ஒவ்வொரு அசைவுக்கும் தலையங்கம் தீட்டி, விடுதலைப்புலிகளைக் கண்டிக்கும் 'இந்து' நாளேடு - அமெரிக்கா, பிரிட்டன், நார்வே என்று உலக நாடுகளே கண்டித்த இந்தப் பிரச்சினையில் தலையங்கம் தீட்டாமல் மவுனம் சாதித்தது. சிறீலங்காவின் உச்சநீதிமன்றமே இதைக் கண்டித்தும்கூட பார்ப்பன 'இந்து'வுக்கு கண்டிக்க உள்ளம் வரவில்லை. அமெரிக்கா, நார்வே நாடுகளின் அறிக்கையை வெளியிட்ட 'இந்து' அதில் இடம் பெற்றிருந்த 'கண்டனம்' என்ற வார்த்தையைக்கூட நீக்கிவிட்டுத்தான் செய்தியை வெளியிட்டது.

அடுத்த நாள் - ராஜபக்சே வருத்தமும், மன்னிப்பும் கேட்டார். அதை வெளியிட்ட 'இந்து' ராஜபக்சே கூறிய 'மன்னிப்பு' என்ற வார்த்தையை நீக்கிவிட்டுத்தான் செய்தியை வெளியிட்டது.

இது தொடர்பாக - சிறீலங்காவுக்கான ஜப்பான் தூதர் கொழும்பில் பேட்டி அளித்தபோது - பிரிட்டனைப் போல் சிறீலங்காவுக்கு அளித்து வரும் நிதி உதவியை ஜப்பானும் நிறுத்துமா என்று ஒரு செய்தியாளர் கேட்டார். பிரிட்டனைப் போல் நிதி உதவியை நிறுத்த மாட்டோம் என்றார், ஜப்பான் தூதுவர். அதை 'சிங்கள ரத்னா' விருது பெற்ற பார்ப்பன ராம் நடத்தும் 'இந்து' எப்படி செய்தி வெளியிட்டது தெரியுமா ? பிரிட்டன், சிறீலங்காவுக்கு நிதி உதவியை நிறுத்துவதற்கு, ஜப்பான் எதிர்ப்பு என்று செய்தி வெளியிட்டது. இப்படித்தான் சிங்களர்களை மிஞ்சிய 'ராஜ விசுவாசியாக' - பார்ப்பன 'இந்து'வும், ராமும் இருக்கிறார்கள். இது பத்திரிகை தர்மமா ? பூணூல் தர்மமா ?

*('இந்து'வின் இந்த பார்ப்பனியத்தை எதிர்த்து – இணைய தளங்களில் ஈழத் தமிழர்கள் நூற்றுக்கணக்கில் தங்கள் கொதிப்பை வெளிப்படுத்தி விடுகின்றனர். பார்ப்பன எதிர்ப்புகளாக வெடித்திருக்கும் அந்த உணர்வுகள் பற்றிய செய்தி – அடுத்த இதழில்)*

## அப்பா – மகன்

*மகன் :* கனிமொழிக்கு எம்.பி. பதவி வழங்கியதை கேலி செய்து – பார்ப்பன 'தினமணி' வெளியிட்ட கேலிச் சித்திரத்தைக் கண்டித்து, முதலமைச்சர் கலைஞரே தனது கைப்பட போட்டி கேலிச் சித்திரம் ஒன்றை 'முரசொலி'யில் போட்டிருக்கிறாரே பார்த்தீர்களா?

*அப்பா :* ஆம், மகனே!

*மகன் :* பூணூல் – உச்சிக்குடுமியோடு, திறந்த மேனியில் பார்ப்பான் படத்தைப் போட்டுக் காட்டி அது ஆதிக்கத்தின் சின்னம் என்று காட்டியிருக்கிறாரே!

*அப்பா:* அது உண்மை தானே, மகனே?

*மகன் :* உண்மை தான். ஆனால், அதே ஆதிக்க சின்னங்களை பெரியார் சிலை உடைப்புக்கு பதிலடியாக பெரியார் திராவிடர் கழகத்தினர் அறுத்தபோது, சாதாரண வழக்கில் வரக்கூடிய பிரச்னையாகக் கருதாமல், தேசப் பாதுகாப்புச் சட்டத்தையே ஏவி தேச விரோதிகள் என்று கலைஞர் கைது செய்தாரே, அது நியாயம் தானா, அப்பா?

கனிமொழி பிரச்சினையில் – பூணூல் சிண்டுகளை எதிர்க்கலாம் தவறில்லை. ஆனால், பெரியார் சிலை அவமதிப்புகளுக்கோ, கொள்கைப் பிரச்னைகளுக்கோ பூணூல் சிண்டுகளை எதிர்த்தால், அதுதான் தேச விரோதம் என்று கலைஞர் கூறுகிறாரா, அப்பா?

*அப்பா :* எனக்குத் தெரியாது, மகனே!

# பட்டியல் தயாரிப்பீர்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மனிதர்களாக வேண்டும்'' என்றார். பெரியார் தத்துவம் படித்தெல்லாம் பொது வாழ்க்கைக்கு வரவில்லை. நாட்டில் நிலவி இருக்கிற சிக்கல்களைப் பார்த்து அதை மாற்ற வேண்டும் என்று நினைத்தார். பெரிய தத்துவங்களை பேசிக் கொண்டிருக்க நமக்குத் தெரியவில்லை. அல்லது நமது எதிரிக்கு நம்முடைய தத்துவங்கள் புரியாமல் இருக்கிறது. நாம் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டாக வேண்டும். சட்டப்படி தீண்டாமை கொடுமையானது. குற்றமானது என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். பாடப் புத்தகத்தில் எல்லாம் அதை வெளியிட்டார்கள். பெரிய தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். ஆனால் நடைமுறையில் வேறாக இருக்கிறது. அதை எப்படித்தான் மாற்றுவது, எப்படித்தான் தீண்டாமையை பின்பற்றுபவர்களை சிந்திக்க வைப்பது? இவர்களுக்கு அதிர்ச்சி வைத்தியம் தந்தாக வேண்டும்.

பெரியார் கூட இந்த போராட்டத்தை அறிவித்தபோது பெரியார் 3 ஆம் தேதி அறிவித்தார் என்றால், 11 ஆம் தேதி அரசு அவசரமாக சட்டம் இயற்றுகிறது. எட்டு நாளில் ஒரு மசோதா உருவாக்கி, நிறைவேற்றி தேசிய சின்னங்களை, சட்டத்தை எரிப்பது, காந்தி படத்தை எரிப்பது என்பதெல்லாம் குற்றம் என அவசர அவசரமாக அரசு எட்டு நாளில் சட்டம் இயற்றிய பின்னால் தான் பெரியார் தொண்டர்கள் சட்டத்தை எரித்தார்கள். மூன்று ஆண்டு சிறைத் தண்டனை என்று சட்டம் வந்தது தெரிந்த பிறகுதான், இவர்கள் சட்டத்தை எரித்தார்கள்.

எனவே, சில போராட்டங்களை எடுக்கிறபோது, நாம் இந்த போராட்டங்களை நடத்துவதன் வழியாக உடனே மாறிவிடுவார்கள் என்றில்லை. இப்படிப்பட்ட போராட்டங்களையும் எடுப்பார்கள் என்று நினைக்க வேண்டும் என்பதற்காகத்தான் சிறிய முயற்சியாக இந்த சாதி ஒழிப்பு போராட்ட வீரர்களை பாராட்டினோம். அவர்களை பாராட்டுவதென்பது, அவர்களை வழிகாட்டிகளாகக் கொண்டு நாம் செயல்பட வேண்டும் என்பதற்குத்தான். தோழர் தியாகு பேசினார், தஞ்சையில் மாநாடு என அறிவித்த உடன் எனக்கு தியாகு அவர்களின் நினைவு வந்தது. அதற்கு முன்பு பெரியார்நூற்றாண்டு நிறைவு விழாவின்போது 1979 இல் ஒன்பதாயிரம் வருமான வரம்பாணையை எதிர்த்து பிரச்சாரம் பல முனைகளில் நடந்தது. நானும் கன்னியாகுமரியில் இருந்து நடந்து வந்து 30 நாள் பிரச்சாரம் செய்து, தஞ்சையில் முடித்தோம். அந்த மாநாடு முடிந்தபோது தியாகுவை சந்தித்தேன்.

அதன் பிறகு, நீண்ட தேடலுக்குப் பின்னால் மூன்று நாட்களுக்கு முன்னால் தான் அவருடைய முகவரியை அறிய முடிந்தது. சென்னைத் தோழர் தபசி. குமரன் அவர்கள் நேரடியாக அவரைச் சந்தித்து அழைப்பிதழ் தந்து இம்மாநாட்டிற்கு வரவேண்டும், எங்கள் இளைஞர்கள் முன்னால் உங்கள் கருத்துகளை வைக்க வேண்டும், இளைஞர்களுக்கு எழுச்சியைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெரியார் கூட தீண்டாமை ஒழிப்பைப் பற்றி பேசுகிறபோது சொல்கிறார்: ''எனக்கு கத்தியைக் கொடுத்தார்கள், எதற்கு கொடுத்தார்கள், என் கழுத்தை அறுத்துக் கொள்ளவா, அல்லது முத்த மிடவா, விற்றுத் தின்னவா? எதற்குக் கொடுத்தார்கள், காந்தி சிலையை உடைக்கிறேன் என்று சொன்னால், ஊர் ஊராக சம்மட்டிக் கொடுக்கிறார்கள். எதற்கு? இந்தக் கொள்கை சரியானது என்று ஆதரவுக் காட்டுவதின் அடையாளம்' என்றார்.

அப்படிப்பட்ட நமது முன்னோர்கள் வந்து பல செய்திகளை பகிர்ந்து கொண்டுள்ளார்கள். இந்த மாநாட்டில் நாம் திட்டமிட்டுள்ள செயல் திட்டத்தை விளக்கும் தீர்மானத்தை உங்கள் முன்னால் முன்மொழிகிறேன். (தீர்மானத்தைப் படித்தார்; ஏற்கனவே தீர்மானம் வெளியிடப்பட்டுள்ளது) முற்று முடிவாக இதுவே சாதியை ஒழித்து விடாது என்றாலும்கூட சாதியக் கொடுமைகளுக்கு எதிரான இந்த செயல்பாடுகள் தொடர வேண்டும். இதைப் பற்றியெல்லாம் நாம் பரப்புரை செய்து, மக்களிடம் விளக்க வேண்டும். அதை நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

அம்பேத்கரைப் பற்றியெல்லாம்கூட சொல்லுவார்கள். அம்பேத்கர் சொன்னார், ''நம்மை நினைத்தால் நாக்கில் தீயை வைப்பதைப் போல் நடுக்கம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் கொஞ்சமாவது மாற்றிக் கொள்வான். பலியிடப்படுவது ஆடுகளைத்தான்; சிங்கங்களை அல்ல'' என்று சொன்னார்.

சாதிச் சங்கங்களைப் போலத்தான் இப்பொழுது எல்லா அமைப்புகளும் நடக்கிறது. அவர்களுக்கு தலைவர்களாகவும், தேர்தலில் நிற்கவும் பதவியில் பங்கு பெறவும் தான் முன்னுரிமை தரப்படுகிறது. அந்தக் கண்ணோட்டத்தில் பெரியார் இயக்கம் இந்த போராட்டத்தை நடத்தவில்லை. உண்மையில் சாதியத்தின் மீதான இந்த சிறு தாக்குதல் வழியாக சாதியவாதிகள் அதைப் பற்றி கருதவில்லை என்றாலும் அரசாவது கொஞ்சம் எண்ணிப் பார்க்குமா? என்ற எண்ணத்தோடுதான் போராட்டத்தை அறிவித்து இருக்கிறோம். தோழர்கள் முனைப்போடு வாய்ப்புள்ள எல்லா பகுதிகளிலும் இந்த பட்டியல் திரட்டும் பணியில் ஈடுபட வேண்டும். போராட்டத்தில் அனைவரும் முனைப்போடு கலந்து கொள்ள வேண்டும்.

நம்மிடத்திலே பணம் இல்லை என்றாலும், பெரியாரியலை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற அக்கறை இருக்கிறது. தோழர்களுக்கு உணர்வு இருக்கின்றது. உற்சாகம் இருக்கின்றது. அதைப் பெரியாரியல் நடைமுறைப்படுத்த நீங்கள் பயன்படுத்தவேண்டும். இந்த போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு தரவேண்டும் எனகேட்டு இம்மாநாட்டிற்கு உழைத்த அனைவருக்கும் நன்றி கூறி முடிக்கிறேன். ❑

# தேவாரம் பாட தமிழ் குடமுழுக்கு நடத்த நீதிமன்றம் தடை

சக்திவேல் முருகனார் - தமிழகம் முழுதும் பார்ப்பன வடமொழிகளை விலக்கி - தமிழ்த் திருமணங்களையும், தமிழில் குட முழுக்கையும் நடத்தி வருகிறார். அதே போன்று சண்முகசுந்தரனாரும் நடத்தி வருகிறார். ஆகமங்களுக்கு பதிலாக - தமிழ்த் திருமறைகளைப் பயன்படுத்தி வருவதற்கு, தடை விதிக்கக் கோரி மயிலாடுதுறை தர்ம்புர ஆதினத்தின் சீடர்கள் சிலரும், சைவ சித்தாந்தத்தைக் கடைபிடிப்பதாகக் கூறும் திருஞான சம்பந்தம் உட்பட நான்கு பேர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். சைவ ஆதின மதத் தலைவர்களின் நன்மதிப்பை பாதிக்கும் கட்டுரைகளை இவர்கள் வெளியிட்டதாகவும், அதற்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் வழக்கு மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

வழக்கை விசாரணைக்கு ஏற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பி.ஜோதிமணி கோயில் குடமுழுக்கு, யாகம் போன்றவற்றில் ஆகமவிதிகளைப் பின்பற்றாமல், திருமறைகளைப் பயன்படுத்த இடைக்கால தடை விதித்தார். தீட்சதப் பார்ப்பனர்களின் முழுமையான ஆதிக்கத்தில் உள்ள தில்லை நடராசன் கோயிலில், அர்த்த மண்டபத்தில் - தேவாரம் திருவாசகம் பாட - பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரிமை உண்டு. பார்ப்பனரல்லாதாருக்கு உரிமை இல்லை என்று தில்லை தீட்சப் பார்ப்பனர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளனர். மனுவை விசாரணைக்கு ஏற்ற தலைமை நீதிபதி ஏ.பி.ஷா, நீதிபதி ஜோதிமணி ஆகியோர், அர்த்த மண்டபத்தில் பார்ப்பனரல்லாத ஓதுவார் தேவாரம் திருவாச கத்தைப் பாடலாம் என்று, இந்து அற நிலையத் துறை பிறப்பித்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளனர். நான்கு வாரத்தில் பதில் தருமாறு, அற நிலையத்துறைக்கு தாக்கீது அனுப்பப் பட்டுள்ளது.

80 வயதைக் கடந்த ஆறுமுகசாமி எனும் ஓதுவார் - பார்ப்பன தீட்சதர்களை எதிர்த்து, தொடர்ந்து போராடி வருகிறார். பார்ப்பன தீட்சதர்கள் - முதியவர் ஆறுமுகசாமி தேவாரம் பாடுவதைத் தடுத்து, தாக்கி மண்டையைப் பிளந்து வெளியே தள்ளினர். இந்து அறநிலையத் துறைக்கு தனது கோரிக்கையைக் கொண்டு போனார். துறையின் இணை ஆணையர் தேவாரம், திருவாசகம் பாட அனுமதி மறுத்துவிட்டார். ஆணையரிடம் மேல் முறையீடு செய்யப்பட்டபோது, **20.4.2007** இல், அனுமதி வழங்கப்பட்டது. அறநிலையத்துறை ஆணையர் அனுமதி வழங்கியதை எதிர்த்து பொது தீட்சதர்களின் சார்பில் தன்வந்திரி தீட்சதர் வழக்கு தொடர்ந்தார். நீதிபதி ஜெயபால், வழக்கை தள்ளுபடி செய்தார். மீண்டும் உயர்நீதிமன்றத்தில் தீட்சதர்கள், மேல் முறையீடு செய்தனர்.

''அர்த்த மண்டபத்தில் தீட்சதர்கள் தான் - பரம்பரை பரம்பரையாக பக்திப் பாடல்களைப் பாடி வருகிறார்கள். தீட்சதர்களைத் தவிர வேறு எவருக்கும் இங்கு பாட உரிமை கிடையாது. கோயிலுள்ள மகா மண்டபத்தில் யார் வேண்டுமானாலும் பாடலாம். ஆனால் அர்த்த மண்டபத்தின் உரிமை, தீட்சதர்களுக்கே உரியது'' என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ❑

## துத்துக்குடி மாவட்ட கழகம் தீர்மானம்

பெரியார் திராவிடர் கழகம் தூத்துக்குடி மாவட்ட அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம் 11.3.2007 ஞாயிறு முற்பகல் தூத்துக்குடி சோ.மா. விடுதியில் நடைபெற்றது. மாவட்ட கழகத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு தலைமை ஏற்றார். ஆட்சிக் குழு உறுப்பினர் பால். பிரபாகரன் முன்னிலை ஏற்றார். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

- பெரியார் பெருந்தொண்டரும், திராவிடர் கழக தென் மாவட்ட பிரமுகரும், பொதுக்குழு உறுப்பினருமான தூத்துக்குடி சா. காளிமுத்து உடல் நலக் குறைவு காரணமாக 8.3.07 அன்று மறைவுற்றார். பெரியார் இயக்கத்துக்கு அரும் பணியாற்றிய அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.
- பெரியார் திராவிடர் கழகக் கொடியினை நிர்வாக பிரச்னைக்காக கொடியினை மாற்றியமைக்க வேண்டும் என்னும் கோரிக்கை எழுந்தபோது 9.4.2006 அன்று நடந்த தூத்துக்குடி மாவட்ட கலந்துரையாடல் கூட்டக் கோரிக்கையை ஏற்று, தூத்துக்குடியில் பெரியார் பாசறையாக செயல்பட்டபோது பயன்படுத்திய கருப்பு செவ்வகத்தில் சிகப்பு நட்சத்திரக் கொடியினை, பெரியார் தி.க. கொடியாக அங்கீகரித்த ஆட்சிக் குழுவிற்கு துத்தூக்குடி மாவட்ட கழகம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

## புதிய இணைய தளம்

பெரியார் திராவிடர் கழகச் செய்திகள் - புரட்சிப் பெரியார் முழக்கக் கட்டுரைகள் - பெரியாரிய கட்டுரைகள் - சாதி மறுப்புத் திருமண விவரங்கள் பற்றி அறிய -

'www.dravidar.org.'

இணைய தளம் பாருங்கள். உங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## ஜூன் 16-ல் சென்னையில் வள்ளிநாயகம் நினைவுக் கூட்டம்

மறைந்த ஏ.பி. வள்ளிநாயகம் அவர்களுக்கு வீர வணக்கக் கூட்டம், ஜூன் 16 சனி மாலை சென்னை தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் நடைபெறுகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கி. மகேந்திரன், சுப.வீரபாண்டியன், கிருத்து தாசு காந்தி, உட்படப் பலரும் பேசுகிறார்கள். நிகழ்வில் பாலம், 'தலித்முரசு' கலை இலக்கிய விருது, ஏ.பி. வள்ளி நாயகம் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 15th June 2007

பெறுநர்

## வாசகரின் கடிதம்


கடந்த வார 'புரட்சிப் பெரியார் முழக்க' இதழில் ராஜஸ்தான் கலவரம் உணர்த்துவது என்ன? பார்ப்பன உயர்சாதியினரால் மறுக்கப்பட்ட உரிமைகளுக்குப் போராடுவது சமூக நீதிக்கான போராட்டம், அதைத் தடுத்த நிறுத்த முடியாது என அற்புதமாக எழுதியிருந்தீர்கள். தஞ்சை மாநாட்டில் பேசிய புனித பாண்டியன், வெண்ணிலா ஆகியோரின் பேச்சுக்கள் உணர்ச்சியூட்டின - தொடரட்டும் தங்கள் இதழியல் தொண்டுகள்.

– தங்க. சங்கரபாண்டியன், சென்னை-103.

## நன்கொடை

காரைக்குடி சண்முக நாதன் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சி நிதிக்கு ரூ.500/- வழங்கியுள்ளார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜுன் 21, 2007 புரட்சி 4 முழக்கம் 80 விலை : ரூ.2.50


## காவல்துறை மிரட்டல்களைத் தகர்த்து

# ஈரோட்டை குலுக்கிய நாத்திகர் பேரணி

*ஈரோட்டில் மாவட்டக் காவல்துறை அதிகாரியான பார்ப்பனப் பெண் - கழகம் நடத்தும் மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகளைப் பேரணியில் இடம் பெற அனுமதி மறுக்கவே, தோழர்கள் தடையை மீறத் தயாரானார்கள். கழகத் தோழர்கள் உறுதியைக் கண்டு இறங்கி வந்தது காவல்துறை.*

*ஈரோட்டைக் குலுக்கியது 'நாத்திகப் பேரணி'. நமது செய்தியாளர் தரும் தகவல்கள்:*

*காவல்துறை அடக்குமுறைகளைத் தகர்த்து, ஈரோட்டில் நடைபெற்ற மூடநம்பிக்கை ஊர்வலம்*

**15.6.2007** அன்று ஈரோடு கருங்கல்பாளையத்தில் தஞ்சை சாதி ஒழிப்பு மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது.

முன்னதாக, ஏற்கனவே அனுமதி கோரப்பட்டிருந்த, (பேருந்து நிலையத்திலிருந்து) மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தை பல்வேறு காரணங்களைக் கூறி காவல்துறை மறுத்து, தீச்சட்டியுடன் ஊர்வலம் செல்லக் கூடாது எனத் தடை செய்தனர். சிறிது தூரம் சென்ற பின்பு தீச்சட்டி ஊர்வலம் வைத்துக் கொள்ளலாம் என்று, காவல்துறை இறங்கி வந்தனர். தோழர்களின் கடுமையான வாக்கு வாதம், போர்க் குணத்திற்கு காவல்துறை பணிந்தது. தான் ஏழு ஆண்டுகள் ஈரோட்டில் இருப்பதாகவும், இந்த மாதிரி ஊர்வலத்தை யாரும் நடத்தியதில்லை என்றும், ஊர்வல இடத்தில் இருந்த (தடை செய்த) காவல் துணைக் கண் காணிப்பாளர் நடராஜன் என்பவர் வாக்குவாதம் செய்தார்.

தமிழ்நாட்டு வரலாறு - திராவிட இயக்கத் தோற்றம் - ஆளும் கட்சியின் அடிப்படைக் கொள்கை - பெரியார், அண்ணா பற்றிய அரிச்சுவடி - மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் - இவை பற்றிக்கூட அறியாதவர்களாக தமிழகக் காவல்துறையின் உயர் அதிகாரிகள் இருப்பது தான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பதை பொதுக் கூட்டத்தில் பல்வேறு தலைவர்கள் வன்மையான கண்டனம் தெரிவித்து உரையாற்றினார்கள்.

இந்து முன்னணி அமைப்பினரின் தூண்டுதலுக்கு அடிபணிந்து, ஈரோடு மாவட்டக் காவல் தலைமை செயல்பட்டதுதான் இதற்கு மூலக் காரணம் என்று கூட்டத்தில் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டக் காவல் கண்காணிப்பாளராக உள்ள "சோனல் மிஸ்ரா" என்ற வடநாட்டு பார்ப்பனப் பெண் தான், பல வகைகளில் மண்வாசனை அறியாமலும், தமது இனப்பற்றுக் குறையாமலும் இயக்கத்திற்கு இடையூறு செய்து வருகிறார்.

(இதே "சோனல் மிஸ்ரா" தான் சீரங்கம் பெரியார் சிலை உடைப்பில் எதிர்வினையாற்றிய ஈரோடு மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் உள்ளிட்ட நான்கு பேரை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் சிறைக்கு அனுப்புவதில் தீவிரம் காட்டியவர் என்பது குறிப்பிடத்தக்கது.)

### அடக்கு முறைக்கு அஞ்சாத தோழர்கள்!

காவல் துறையின் அச்சுறுத்தலுக்கு சிறிதும் அலட்டிக் கொள்ளாத தோழர்கள் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும், ஊர்வலம் தொடங்கும் இடத்தில் குவிந்தனர். திருப்பூர், சேலம், மேட்டூர், கோவை, குமாரபாளையம், கொளத்தூர் உள்ளிட்ட பிற மாவட்டப் பகுதிகளிலிருந்தும் தோழர்கள் வந்தவண்ணமிருந்தனர்.

கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர் வெ.ஆறுச்சாமி மேற்பார்வையில் கத்தி மீது நடப்பது, சுருள் கத்தி வீசுதல், அலகு குத்துதல், அலகு குத்தி கார் இழுத்தல், தீச்சட்டி எடுத்தல், பறவைக் காவடி போன்ற பல்வேறு மூடநம்பிக்கை ஒழிப்பு நிகழ்ச்சிகளுடன் ஊர்வலம் தொடங்கி 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பொதுக் கூட்டம் நடக்கும் இடத்தை அடைந்தது.

ஊர்வலத்துக்கு ஈரோடு மாவட்ட இளைஞரணித் தலைவர் ஆ. சிதம்பரம் தலைமை தாங்கினார். ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான தோழர்கள் அணி வகுப்புடன் கலந்துகொண்டனர். கழகத்தின் கொள்கைகளை வெளிப்படுத்தும் முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. நால்ரோடு தோழர்களின் அதிர வைத்த டிரம்ஸ் ஒலி, ஊர்வல எழுச்சியைக் கூட்டியது.

மாலையில் மக்கள் நெருக்கம் மிகுந்த வீதிகளில் ஈரோடு நகர வரலாற்றில் 10 ஆண்டுகள் இடைவெளியில் நடைபெற்ற இந்த மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தை ஆயிரக்கணக்கான மக்கள் கண்கொட்டாமல் பார்த்து வியந்தனர்.

ஊர்வலத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் பங்கேற்றனர். ❑

---

## *கழகத் தோழர்களே!*
## *ஜுன் 30-க்குள் பட்டியல் தயாராகட்டும்!*

**தஞ்சை சாதி ஒழிப்பு மாநாட்டுத் தீர்மானத்துக்கு செயல் வடிவம் தரத் தயாராவோம்!**

உங்கள் பகுதிகளில் -
தேனீர்க் கடைகளில் இரட்டை தம்ளர், இரட்டை இருக்கைகள் இருக்கிறதா ?
அந்தப் பட்டியலை உடனே தயாரியுங்கள் !

- *பஞ்சமி நில ஆக்கிரமிப்பு பற்றிய தகவல்கள்;*
- *தலித் மக்களை அனுமதிக்காத பொதுக் கோயில்கள்;*

ஆகிய விவரங்களையும் உடனே சேகரியுங்கள் !

ஏற்கனவே - கழகத் தோழர்கள் - இது தொடர்பான பட்டியல்களை அனுப்பியுள்ளனர்.
பட்டியல் தயாரிப்பில் ஈடுபடாத தோழர்கள், உடன் களத்தில் இறங்குங்கள் !

**ஜுன் 30 ஆம் தேதிக்குள் பட்டியல் வந்து சேரட்டும்!**

அனுப்ப வேண்டிய முகவரி:
**தா. செ. மணி**
தலைவர், பெரியார் திராவிடர் கழகம்,
பெரியார் படிப்பகம், மேட்டூர் அணை - 636 001. (மேட்டூர் பேருந்து நிலையம் அருகில்)

## *வீரியத்துடன் வளருகிறது "பெரியார் திராவிடர் கழகம்"*

# மூட நம்பிக்கை பரப்ப அனுமதி; பகுத்தறிவை பரப்பத் தடையா?

## ஈரோடு கூட்டத்தில் வழக்குரைஞர் ப.பா. மோகன் எழுச்சி உரை:

*பெரியார் கருத்துகளை வீரியத்துடன் எடுத்துச் செல்கிறது – பெரியார் திராவிடர் கழகம் என்று வழக்குரைஞர் மோகன் ஈரோடு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த வரும், ஈரோடு மாவட்டக் கழகத் தோழர்கள் மீது தி.மு.க. அரசு தொடர்ந்துள்ள வழக்கு களுக்கு, கழக சார்பில் வாதாடி வருபவருமான வழக்கறிஞர் ப.பா. மோகன் ஆற்றிய உரை:*

தோழர்களின் மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில், பகுத்தறிவுப் பிரச்சாரத்திற்கு தடை ஏற்படுத்தியமைக்காக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் பேசினேன். ஈரோடு டி.எஸ்.பி. நடராஜிடம் நாத்திகர்கள் ஊர்வலம் தொன்று தொட்டு நடக்கும் நடைமுறை என்பதை விளக்கினேன். இந்த மாதிரி ஊர்வலங்கள் ஒரு இயக்கம் சார்ந்தது அல்ல - மனிதனை மனிதனாக நடத்தும் போராட்டத்தின் ஒரு அம்சம்தான் - என்றேன், சிலர் மட்டுமல்ல ஆட்சி யாளர்களே செய்ய வேண்டிய - ஒரு அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையைத்தான் பெரியார் தி.க. தோழர்கள் செய்கிறார்கள் - என்பதை எல்லாம் காவல் அதிகாரிகளிடம் விளக்க வேண்டியிருந்தது.

பெரியார் திராவிடர் கழகம் ஒரு பரிணாம வளர்ச்சியாக உருப்பெற்று வருகிறது. பகுத்தறிவுக் கொள்கைகளை வீரியத்துடன் எடுத்துச் செல்லும் அமைப்பாக, புத்துணர் வூட்டும் அமைப்பாக வளர்ந்து வருவதைப் பார்க்க முடிகிறது.

ஆனால், பெரியார் கொள்கைகளை நாம் மேலும் ஆழமாகக் கொண்டு செல்ல வேண்டிய தேவையை 'சிவாஜி' திரைப்பட டிக்கெட் கோவையில் 500 ரூபாய்க்கு விற்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட தகவல் உணர்த்துகிறது. ஆளும் தி.மு.க. அரசு - தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை ஏற்று - அதன் வழி வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு, அதன் காவல் அதிகாரிகள் நாத்திகர் விழா - ஊர்வலத்தையே புரிந்து கொள்ளாமல் நாம் விளக்கம் அளித்து புரிய வைக்கும் நிலையை, அனுமதி பெறும் நிலையை சகித்து கொள்ளவே முடியாது.

அரசியல் சாசனம் - சமய சார்பற்ற - சமநீதி - சம வாய்ப்பை மக்களுக்கு வழங்கக் கோருகிற. சட்டம் அனை வருக்கும் சமமாக அமையும் வழியை உறுதிப்படுத்துகிறது. ஆனால், நீதிமன்றம் தான் வகுத்த சட்டத்திற்கு முரணாக நடந்து கொள்கிறது. இந்தியாவில் உள்ள 3 சதவீத ஆதிக்கக் கூட்டம், சமூக-பொருளாதார, கலாச் சாரங்களில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. பொருளாதார மண்டலம் வரத் தொடங்கியிருக்கிறது. 27 சதவீத இட ஒதுக்கீட்டை இந்திய உச்சநீதிமன்றமே கேலி செய்கிறது. இதற்காக ஒன்றல்ல நூறு பெரியார் இன்றும் தேவைப்படுகிறார். அந்த சமூக, கலாச்சாரப் போராட்டத் தில் தொடர்ந்து பெரியார் தி.க. தன்னை ஈடுபடுத்தியாக வேண்டும்.

பெரியார் தனி மனிதரல்ல, ஒரு இயக்கம்! மானமும், அறிவும் பெறப் போராடிய அந்த புரட்சியாளரை - மாபெரும் தலைவரின் சிலையை உடைத்தார்கள். அதனால், நடைபெற்ற நிகழ்வுகளுக்காக தோழர்கள் மீது வழக்குப் போட்டிக்கிறார்கள். ஆதிக்க சக்தியினரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு மாநில தி.மு.க. அரசு இவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டிருக்கிறது.

எந்தக் கூட்டம் நம்மைக் காலங்காலமாக அடக்கி ஆண்டதோ, மதத்தின் பெயரால், மவுடீகத்தின் பெயரால் - அந்தக் கூட்டம் ஜனநாயகம் என்ற போர்வையில் நம்மை அடக்க நினைக்கிறது. ஆட்சி மாற்றத்தால் இவர்கள் மாறப் போவது இல்லை. சமூக அடித்தளத்தை மாற்ற இடதுசாரி - தமிழ் தேசிய சமூக அக்கறையுள்ள சக்திகள் ஒன்றிணைந்து போராடவேண்டும்.

ஈரோட்டில் மட்டுமல்ல, தஞ்சையில், பல்லடத்தில், மேட்டூரில், கோவையில் - நடைபெற்று வரும் இதுபோன்ற பகுத்தறிவு ஊர்வலங்கள் தமிழ்நாடு முழுவதும் பரவி முழு வீச்சில் நடைபெற வேண்டும் - இவ்வாறு வழக்குரைஞர் ப.பா. மோகன் பேசினார்.

### இராம. இளங்கோவன்

பொதுக் கூட்டத்திற்கு, மாவட்டச் செயலாளர் இராம. இளங்கோவன் தலைமை தாங்கினார். அவரது உரையில் தெரிவித்ததாவது:

"நீண்ட இடைவெளிக்குப் பின்பு பெரியார் மண்ணில் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணி நடைபெற்றிருக்கிறது. இப்படிப்பட்ட மூடநம்பிக்கை ஒழிப்புப் பணியைத் தான் தந்தை பெரியார் 95 ஆண்டுகள் நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று பரப்பினார். இதைச் செய்ய விடாமல் காவல் துறை தடுக்கிறது. இந்த மாவட்ட எஸ்.பி. ஒரு தமிழராக இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா ? எங்கோ வடநாட்டில் இருந்த பார்ப்பன அதிகாரிகளை இந்த அரசு நியமித்தது தான் இதற்குக் காரணம்.

பெரியார் சிலையை உடைத்ததற்காக, அதற்கான மூல பலத்தை ஆராய்ந்து, வெகுண்டெழுந்தோம். சாதி, மதத்தைக் கட்டவிழ்த்து ஒற்றுமையாக இருந்த தமிழர் கூட்டத்தைப் பிரித்து வேறுபடுத்தியது பார்ப்பனக் கூட்டம். அதற்கு ஆதாரமாக மூட நம்பிக்கையை விதைத்தது. அப்படிப்பட்ட கூட்டம் திட்டமிட்டு, "அர்ச்சுன் சம்பத்" என்ற பிற்படுத்தப்பட்ட தோழரைப் பயன்படுத்தி பெரியார் சிலையை உடைத்துக் குதூகலித்தார்கள். ஈரோட்டுக் கண்ணாடி அணிந்த எங்களுக்கு அந்த அம்பை எய்தவன் தெரிந்தான்! ஈரோட்டில் 2 இடங்களிலும் தமிழகத்திலும் பல பகுதிகளில் எதிர்வினைகள் நடந்தன.

தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட 42 பேர் மீதும் வழக்கு. இதில் 7 பேர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம். அதில் 4 பேர் ஈரோடு மாவட்டத் தோழர்கள். எங்களைக் கைது செய்தபோது, மாவட்ட காவல்துறை அதிகாரி உடனடியாக தேசிய பாதுகாப்புச் சட்டத்திற்கு பரிந்துரை செய்தார். அதை அப்படியே மாவட்ட ஆட்சியருக்கு அனுப்புகிறார்.

நாங்கள், டெல்லியில் உயர்கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடு கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்த பார்ப்பன மாணவர்களின் அட்டகாசம் பொறுக்க முடியாமல் ஈரோட்டில் அஞ்சலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி, கொடும்பாவி எரித்தபோது அன்று பணியில் இருந்த காவல் ஆய்வாளர் உதயகுமார் என்பவர் எங்களை கடுமையாகத் திட்டி வாக்குவாதம் செய்தார். எங்களைக் கைது செய்தார்.

அவரே, ஈரோடு சிலை உடைப்புச் சம்பவத்தையொட்டி எங்களைக் கைது செய்த போதும், தரக்குறைவாகப் பேசியதுடன் சிறீரங்கத்தில் பெரியார் சிலையை உடைத்தால் அங்கு போய்ச் செய்வதுதானே - ஈரோட்டில் ஏன் செய்கிறீர்கள் என்றும் பேசினார். பெரியார் சிலை எங்கு உடைக்கப்பட்டாலும், எங்கும் அதற்கு எதிர்வினை நடக்கும். காவல்துறை அதிகாரிகளின் பதவியும், காக்கிச் சட்டையும் பெரியார் போட்ட பிச்சை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

பக்தர்கள் 25 அடி நீள வேலை எடுத்து அலகுக்குத்திக் கொண்டு சாலையையே அடைத்துக் கொண்டு, சாமியாடிக் கொண்டு ஊர்வலம் செல்கிறார்களே அதற்கு அனுமதி பெறுகிறார்களா ? ரோட்டுக்கு மேல் ஒரு மைல் நீளப் பந்தல் போடுகிறார்களே யாரிடம் அனுமதி பெறுகிறார்கள் ? பக்தி என்ற பெயரில் இவைகளையெல்லாம் அனுமதிக்கும் காவல்துறை - நாத்திகப் பிரச்சாரத்திற்கும், கடவுள் மறுப் புக்கும், சட்ட ரீதியாக சம உரிமையை வழங்க வேண்டும். எங்களை மறுப்பது, தடுப்பது - அரசு ஆணையை, சட்டத்தை மீறுவதாகும் என்பதை உணர்ந்து கொள் ளுங்கள்" என்றார்.

### புலி பாண்டியன்
### (மாவட்ட அமைப்பாளர், சாதி ஒழிப்பு பொதுவுடைமை முன்னணி)

50 ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் எடுத்த சாதி ஒழிப்புத் திட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் முன் வைப்பதற்கு மிகுந்த மகிழ்வடைகிறோம். பெரியார் சிலை உடைப்பு எதிர்வினைப் போராட்டத்திற்கு எங்கள் அமைப்புத் தோழர்கள் உட்பட 22பேர் சிறை சென்றனர். மக்கள் திரள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பெரியாரியலை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு சாதி ஒழிப்பு பொதுவுடைமை முன்னணி என்றும் துணை நிற்கும்.

### மு. மோகன் ராஜ்
### (மாவட்டச் செயலாளர் – தமிழ் தேசிய விடுதலை இயக்கம்)

எமது இனத்தைக் கேவலப்படுத்தியது இந்துமதம் மட்டுமே. அதனால் தான் அதைத் தாக்குகிறோம். தமிழக மண்ணில் பெரியார் சிலைக்கும், பெரியாரியலுக்கும் சேதம் ஏற்படுத்திய யாரையும் நாங்கள் விடத் தயாராக இல்லை. பெரியார் தி.க.வினர் இந்தப் போராட்டத் திற்கு தமிழ் தேச விடுதலை இயக்கம் துணையாக இருக்கும்.

### வி. இளங்கோ
### (வழக்குரைஞர்)

பெரியார் கொள்கையாளர்கள் பாராட்டை எதிர்பார்த்து எதையும் செய்வதில்லை. நாங்கள் எங்கள் கடமையைத் தான் செய்தோம். சற்று வேகத்தை அதிகப்படுத்தினோம் அவ்வளவு தான் - என்று வழக்குரைஞர் இளங்கோ குறிப்பிட்டார். அவரது உரை :

"பெரியார் சிலை உடைப்பின் எதிர்வினை யாக நடந்த நிகழ்வாக பூணூல் அறுத்தது, சிலையை உடைத்தது போன்ற நிகழ்வுகளைக் குறிப்பிட்டு, இதனால் இந்தியாவின் பொது அமைதி, பாதுகாப்பு குலைந்து, இந்தியாவின் பொது ஒழுங்கு பாதிக்கும் வகையில் ஈடுபட்டதாகக் கூறி தோழர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க காவல்துறை பரிந்துரைத்திருக்கிறது. இது முன் கூட்டியே திட்டமிடப்பட்ட காவல்துறையின் செயல்." கழக ஆட்சிக்குழு உறுப்பினர் வழக்குரைஞர் துரைசாமி தோழர் களுக்காக, உயர்நீதி மன்றத்தில் வாதாடி, வெற்றி பெற்றார்.

தேசிய பாதுகாப்புச் சட்டத்திலுள்ள பிரிவு 3-ல் இந்த வழக்கு வருகிறதா என்றால், இந்திய தேசியப் பாது காப்புக்கு எதிராக, ராணுவத்திற்கு எதிராக, இந்தியாவைப் பங்கப்படுத்துவதற்கு எதிராகச் செயல்படும்போதுதான் இந்தப் பிரிவின் கீழ் வரும். இந்த சம்பவம் நடப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பாகவே தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று காவல்துறை அறிவித்திருக்கிறது. ஆவணங்களை சரிவரப் பார்க்காமல் காவல்துறை அதிகாரி சொல்வதை, அரசு அதிகாரி கேட்பதால் இப்படி நடந்து இறுதியில் உயர்நீதிமன்றம், "மாவட்ட ஆட்சித் தலை வருக்கு விழிப்புணர்வு கிடையாது" - என்று கண்டனம் தெரிவிக்கும் நிலை உருவாகியிருக்கிறது.

உயர்நீதி மன்றத்தில், இந்த வழக்கு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வருமா, இதில் குறிப்பிட்டுள்ள செயல்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வருமா ? தேசியப் பாதுகாப்புச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதா ? என்ற மூன்று வாதங்களையும் வைத்தோம். நல்ல தீர்ப்புக் கிடைத்தது.

நியாயமாகப் பார்த்தால் சுப்பிரமணியசாமி மீதும்,

(4 ஆம் பக்கம்)

## இதுதான் 'ரா'

'ரா' உளவு நிறுவனம் பற்றி வெளி வந்துள்ள மற்றொரு அதிர்ச்சியான செய்தி:

பிரதமர் அலுவலகத்தில் பல்வேறு உளவு மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் முக்கியமானது 'ரா' என்று அழைக்கப்படும், 'ரிசர்ச் அண்ட் அனலிசஸ் விங்'. இதில், துணை இயக்குனராக இருந்து வந்தவர் தேவன்சந்த் மாலிக். அவர் பற்றிய சந்தேகத்துக்கு இடமான தகவல்கள் வரவே, அவரைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தபோது, 2005 ஆம் ஆண்டு மே மாதம் தலைமறைவானார்.

கேபினட் செயலகத்திலுள்ள, 'ஏவியேஷன் ரிசர்ச் சென்டர்' இயக்குனர் அனுஜ் வரத்வாஜ், புதுடில்லி லோதி காலனி போலீஸ் நிலையத்தில், மாலிக் தொடர்பாக அப்போது புகார் பதிவு செய்தார். போலீசாரும் தேடி வந்தனர். மேற்கு வங்க மாநிலத்தில், '24 பர்கானா' மாவட்டத்தைச் சேர்ந்தவர் மாலிக் என்று, அவர் பற்றிய அரசு பதிவேட்டில் விவரம் இருந்தது. அங்கு போய், அவர் முகவரியில் விசாரித்தபோது தான், அவர் வங்கதேசத்தை சேர்ந்தவர் என்பதே போலீசுக்கு தெரிந்தது.

இந்த விஷயத்தில் பிரதமர் அலுவலக அதிகாரிகள் ரகசியம் காத்து வந்தனர். ஆனால், போலீஸ் நிலையத்துக்கு விஷயம் சென்றதை அடுத்து, திடுக்கிடும் தகவல்கள் வெளிவரத் துவங்கி விட்டன. பிரதமர்அலுவலகத்தில் 'டிசி' என்று செல்லமாக அழைக்கப்பட்டு வந்தவர் தேவன்சந்த் மாலிக்.1999 ஆம் ஆண்டில் இருந்து 2005 ஆம் ஆண்டு மே மாதம் வரை பணியாற்றி இருக்கிறார். அப்போது, அவர் பற்றி விசாரணை நடக்கிறது என்று தெரிந்ததும், திடீரென காணாமல் போய் விட்டார். இப்போது அவர், 'தலைமறைவானவர் என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார். உள்துறை அமைச்சகம் இது தொடர்பான அறிவிப்பை கடந்த வாரம் வெளியிட்டுள்ளது.

மத்திய அரசின் முக்கிய அலுவலகங்களில், உளவு பிரிவுகளில் உளவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது புதிதல்ல. கடந்த 2004 ஆம் ஆண்டில் 'ரா உளவுப் பிரிவின் இணைச் செயலர் ரவீந்தர் சிங் என்பவர் அமெரிக்காவுக்கு முக்கிய ஆவணங்களுடன் தப்பியோடிவிட்டார். கடந்த 2002 ஆம் ஆண்டில், பிரதமர் அலுவலகம், குடியரசுத் தலைவர் மாளிகையில் உளவு வேலை பார்த்ததாக 12 ஊழியர்களுக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை அளிக்கப்பட்டது. கடந்த 1985 ஆம் ஆண்டு, "கூமர் நாராயணன் உளவு சதி வழக்கு" பரபரப்பானது. இவர்கள் இப்போது, கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

**செய்தி : 'தினமலர்' ஜுன் 14, 2007.**

### பழனியில் கழகக் கூட்டம்

பழனியில் 10.6.07 அன்று ஞாயிறு மாலை 7 மணிக்கு தந்தை பெரியார் திடலில் (மின்வாரியம் அருகில்) கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், கடலூர் வழக்கறிஞர் அழகரசன், புதுவை, மோகன், தியாகு மற்றும் பழனிப் பகுதி கோவை, திண்டுக்கல் மாவட்டத் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### கழகத்தின் புதிய கொடிகளை ஏற்றி

# சேலம் – மேட்டூரில் அம்பேத்கர் விழாக்கள்

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 117வது பிறந்தநாள் விழா, ஊர்வலம், பெரியார் திராவிடர் கழக 'புதிய கொடி'யேற்று விழா,. சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது.

அம்பேத்கர் பிறந்த நாள் விழாவை சேலம் மாவட்டம் மேட்டூர் வட்டார பெரியார் திராவிடர் கழகம் சார்பாக 14.4.07 அன்று காலை 10 மணிக்கு மேட்டூர் குஞ்சாண்டியூரிலிருந்து இரு சக்கர வாகன ஊர்வலம் பறை இசை முழக்கத்துடன் சேலம் மாவட்டத் தலைவர் தோழர் கி.முல்லைவேந்தன் தொடங்கி வைத்தார். 25-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களில் 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலம், இராமன் நகர், புதுசாம் பள்ளி, மேட்டூர் ஆர்.எஸ்.என்.எஸ்.கே. நகர், தங்கமாபுரிபட்டினம், சேலம் கேம்ப், காந்தி நகர், அனல் மின் நிலையம் நுழைவு வாயில், மாதையன் குட்டை, பெரியார் நகர், புதுக் காலனி, காவிரி நகர், தூக்கணாம்பட்டி, சிறிய பூங்கா, நேரு நகர், கட்டபொம்மன் நகர், பாரதி நகர், திலீபன் நகர் பிரிவு, பொன்னகர் பிரிவு, குமரன் நகர், மேட்டூர் பேருந்து நிலையம், பெரியார் படிப்பகம் ஆகிய இடங்களில் கழகத் தோழர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கழகத்தின் புதிய கொடிகளை ஏற்றினார்கள்.

**பொதுக் கூட்டம்**

14.4.07 மாலை 7 மணிக்கு மேட்டூர் சதுரங்காடி திடலில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் சேலம் மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு, ஜஸ்டின் ராசு ஆகியோர் உரைக்குப் பின் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க பொதுச்செயலாளர் வழக்குரைஞர் பாவேந்தன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். குமரன் நகர் கதிரவன் நன்றி கூற கூட்டம் நிறைவுற்றது.

கொடியேற்று விழா, இரு சக்கர வாகனப் பேரணி, பொதுக் கூட்டம் ஆகிய நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை மேட்டூர் நகர கழக பொறுப்பாளர்கள் கோவிந்தராசு, மார்டீன், கதிர்வேல், மாவட்ட இளைஞரணித் தலைவர் சக்திவேல், மேட்டூர் ஆர்.எஸ். பகுதி பொறுப்பாளர்கள் நாகராஜ், அசோக் குமார் மற்றும் தோழர்கள் இணைந்து மிக சிறப்பாக செய்திருந்தனர்.

அம்பேத்கர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அம்பேத்கர் பொன் மொழிகளை அச்சிட்டு ஏராளமான துண்டறிக்கைகள், மக்களிடம் விநியோகம் செய்யப்பட்டன. காலை 10 மணிக்கு தொடங்கி இரவு 10 மணிக்கு நிகழ்ச்சி நிறைவுற்றது.

**சேலம் நகரம்**

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 117வது பிறந்தநாள் விழா 14.4.2007 காலை 10 மணிக்கு சேலம் மாநகரத்தில் இரு சக்கர வாகன ஊர்வலம் புதிய கொடியேற்று விழாவுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பத்துக்கும் மேற்பட்ட வாகனங்களில் தோழர்கள் சேலம் தொடர்வண்டி நிலையம் அருகிலிருந்து ஊர்வலத்தைத் தொடங்கினர். செந்தில் கழக கொடியை ஏற்றி வைத்தார்.

கருப்பூர் சக்திவேல், மாநகர அமைப்பாளர் பாலு, டேவிட், ராபர்ட், தங்கராஜ், செந்தில் காமராஜ், ஆசிரியர் கந்தசாமி மற்றும் தோழர்கள் சேலம் காவல்துறை ஆணையாளர் அலுவலகம் அருகிலுள்ள அம்பேத்கர் சிலைக்கும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகிலுள்ள பெரியார் சிலைக்கும் மாலை அணிவித்தனர். தொடர்ந்து தாதகாப்பட்டி பெரியார் படிப்பகம், அன்னதானப்பட்டி, பள்ளுக்கடை, தாசர் தெரு, சேலம் தியாகராசர் பாலிடெக்னிக் சாலை ஆகிய இடங்களில் கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தோழர் டேவிட், பாலு, வீரமணி தங்கராஜ் ஆகியோர் செய்தனர்.

**நங்கவள்ளி ஒன்றியம்**

நங்கவள்ளி ஒன்றியத்தில் 14.4.2007 காலை 10 மணிக்கு மசக்கள்ளியூர் பணங்காட்டிலும், 11 மணிக்கு வனவாசி பேருந்து நிலையத்திலும், 11.30 மணிக்கு நங்கவள்ளி பேருந்து நிலையத்திலும் பெரியார் திராவிடர் கழகத்தின் புதிய கொடியேற்று விழா நடைபெற்றது. களப்பணி ஒருங்கிணைப்பாளர் நங்கவள்ளி அன்பு தலைமையில் வனவாசி கதிர்வேல், பாரதி, மூர்த்தி, வெள்ளையன், செந்தில், சீனி, நங்கவள்ளி கிருட்டிணன் ஆகியோர் கொடியேற்று விழா நிகழ்ச்சயில் கலந்து கொண்டனர்.

**செய்தி தொகுப்பு : முல்லைவேந்தன்**

## பல்லடம் ஒன்றியத்தில் தலைவிரித்தாடும் தீண்டாமை வெறி

பல்லடம் ஒன்றியம் சாமளாபுரம் எனும் கிராமத்தில் கடந்த 23.5.2007 அன்று இரவு நடந்த தீண்டாமைக் கொடுமை இது. சுமை தூக்கும் வேலைக்காக ஆட்டோவில் - சோமனூர் என்ற ஊருக்குச் சென்ற நான்கு அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த தோழர்கள் - வழியில் சாமளாபுரம் என்ற ஊரில் உள்ள உணவுக் கடையில் இரவு சாப்பாடு சாப்பிடச் சென்றார்கள். சப்பாத்தி வரச் சொல்லி, சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, தோழர்கள் தெலுங்கு மொழியில் பேசியதைக் கொண்டு, அவர்கள் அருந்ததியினர் என்று, கடை முதலாளி அடையாளம் கண்டு, ஆத்திரத்துடன், சாப்பாட்டுடன் இலையைப் பிடுங்கி வீசி எறிந்தார். '

'போங்கடா, சக்கிலி நாய்களா, உங்களை எல்லாம் கடைக்குள் விடமாட்டோம்' என்று கூறி அடித் தார். ஆத்திரமடைந்த தோழர்கள் திருப்பி அடித்தவுடன், கடையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஆதிக்க சாதியினரான கவுண்டர்கள் ஒன்றாகத் திரண்டு, தோழர்களை மோசமாகத் தாக்கி, வேட்டி, சட்டைகளைக் கிழித்தனர். அவமானத்துடன் உள்ளாடையுடன் தோழர்கள், தாங்கள் வந்த ஆட்டோவில் ஏறி புறப்பட்டனர்.

மறு நாள் - பெரியார் திராவிடர் கழக ஒன்றிய அமைப்பாளர் விஜயனிடம் பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டனர். உடனே பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் - கருமத்தம்பட்டி காவல்நிலையத்தில் புகார் தரச் சென்றபோது ஆய்வாளர் புகாரைப் பதிவு செய்ய மறுத்து, மாவட்டக் காவல்துறை அதிகாரியை சந்திக்குமாறு கூறவே, மாவட்டக் காவல்துறை ஆய்வாளர் சுப்பிரமணியம் என்பவரை தோழர்கள் சந்தித்தனர். அந்த அதிகாரி சமாதானமாகப் போய் விடுங்கள்; இல்லாவிட்டால், உங்கள் மீது பொய் வழக்குப் போட்டு உள்ளே தள்ளிவிடுவேன் என்று மிரட்டினார். ஏற்க மறுத்த தோழர்களை கேவலமாக இழிந்த வார்த்தைகளில் திட்டினார். மிரட்டலுக்கு பணிய மறுத்து, மறுநாள் 60 தோழர்களுடன் சென்று அதிகாரியை சந்தித்து, வழக்குப் போடுமாறு வலியுறுத்தினர். அதன் பிறகே வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனாலும் - ம.தி.மு.க., தி.மு.க., அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்தவர்கள், கட்சி வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கி விட்டு, வழக்கைத் திரும்பப் பெறுமாறு கழகத் தோழர்களைக் கட்டாயப்படுத்தினர். இதற்கிடையே கருமத்தம்பட்டி காவல் துறையைக் கண்டித்து 7.6.2007 அன்று சேமனூரில் கழக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## 'கெம்ப்ளாஸ்ட்' கக்கும் நச்சுக் கழிவு: மறியல் செய்த 300 தோழர்கள் கைது

மேட்டூர் கெம்ப்ளாஸ்ட் ஆலை நச்சுக் கழிவு பாதிப்புகளைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் காவல்துறை தடையை மீறி மறியல் செய்த 120 பெண்கள் உட்பட 300 பேர் கைது.

18.4.07 காலை 8 மணிக்கு மேட்டூர் கெம்ப்ளாஸ்ட் ஆலை நச்சுக் கழிவு பாதிப்பு களை கண்டித்து காவல்துறையின் தடையை மீறி மறியல் போராட்டம் நடை பெற்றது. மறியல் போராட்டத்துக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை வகித்தார். பாட்டாளி மக்கள் கட்சி பி.என். பட்டி பேரூராட்சித் தலைவர் மயில்சாமி, கோனூர் ஊராட்சி மன்றத் தலைவர் மாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பி.என்.பட்டி பேரூராட்சி, கோனூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் 120 பெண்கள் உட்பட 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

பெரியார் தி.க. மாவட்டத் தலைவர் முல்லைவேந்தன், மாவட்ட செயலாளர் டைகர் பாலன் உட்பட 40க்கும் மேற்பட்ட கழகத் தோழர்களும் மறியல் போராட்டத்தில் பங்கேற்று கைதாயினர். புதைக்கப்பட்ட இராசயன கழிவுகளை உடனே அகற்ற வேண்டும். பாதிக்கப்பட்டப் பகுதி மக்களுக்கு அரசு வழியாக நல்ல குடிநீர் வழங்கப்பட வேண்டும். பாதிக்கப் பட்ட நிலம், கிணறு ஆகியவைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைளை வலியுறுத்தி இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது. இதனால் சேலம் மேட்டூர் சாலையில் சில மணி நேரம் போக்குவரத்து பாதித்தது. கைது செய்யப் பட்டவர்கள் மாலை 6 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

### ஏ.பி. வள்ளிநாயகம் மறைவுக்கு வீர வணக்கம்!

சமநீதி எழுத்தாளர் ஏ.பி. வள்ளிநாயகம் நினைவு போற்றும் வீரவணக்கப் பொதுக் கூட்டம் - 'தலித் முரசு' சார்பில் ஜுன் 16, 2007 மாலை சென்னை தேவநேய பாவாணர் அரங்கில், பேராசிரியர் அய். இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, மகேந்திரன் (சி.பி.அய்.), சுப. வீரபாண்டியன் (திராவிட இயக்கத் தமிழர் பேரவை), எழுத்தாளர்கள் அழகிய பெரியவன், யாக்கன், பூங்குலி, புனித பாண்டியன் மற்றும் அய்.ஏ.எஸ். அதிகாரி கிறித்துதாசு காந்தி ஆகியோர் உரையாற்றினர். தோழர் ஓவியா பங்கேற்றுப் பேசினார். தோழர் வள்ளிநாயகத்துக்கு வழங்கப்பட்ட பாலம் - தலித் முரசு கலை இலக்கிய விருதினை - தோழர் ஓவியா பெற்றுக் கொண்டார்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

## கோவை இராமகிருட்டிணன் எழுச்சி உரை :

# இரட்டைக் குவளைகளை உடைப்போம்!

*தேனீர் கடைகளில் தீண்டாமையை நிலைநிறுத்தும் இரட்டை தம்ளர்களை உடைக்கும் கிளர்ச்சிக்கு தயாராவீர் என்று, கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் அறை கூவல் விடுத்தார். ஈரோடு கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையிலிருந்து –*

தமிழ்நாட்டிலேயே அதிகமாக ஈரோடு மாவட்டத்தில் 30க்கும் மேற்பட்ட தோழர்கள் ‘பெரியார் சிலை உடைப்புக்குப் பிறகு நடைபெற்ற நிகழ்வுகளில் சிறைப்படுத்தப் பட்டதற்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாத்திகர் விழா - தஞ்சை சாதி ஒழிப்பு மாநாட்டு விளக்கக் கூட்டம் - வழக்கறிஞர்களுக்குப் பாராட்டு என்று இயக்க நடவடிக்கைகளை ஒட்டிய மூன்று தலைப்புகளில் இன்றைய நிகழ்ச்சிகள் அமைக்கப் பட்டுள்ளன.

இதே ஈரோட்டு மண்ணில் பிறந்த பெரியார் தான் 95 வயது வரை கடவுள் இல்லை என்று வலம் வந்து சுற்றிச் சுழன்றார். காவல்துறை அதிகாரிகள் அரசாணைக்கு எதிராக தீ மிதிக்கிறார்கள். ஆனால், நாங்கள் தீச்சட்டி எடுத்தால் தடுக்கிறார்கள். அதிக சக்தியுள்ளதாகக் கூறப்படும் பண்ணாரி மாரியம்மனோ, ஈரோடு பெரிய மாரியம்மனோ - எங்களை தீச்சட்டி எடுக்கவேண்டாம் என்று கூற வில்லை. காவல்துறை தான் தடைபோடுகிறது.

கறுப்புப் பணத்தை ஒழிக்கும் கதாநாயகனைக் கொண்ட ஒரு படம் ‘ரிலீஸ்’. ஆனால், அதற்காக ரசிகர்கள் மண்சோறு சாப்பிடுகிறார்கள். கட் அவுட்டுக்கு பால் அபிஷேகம் செய்கிறார்கள் - அதே படத்தின் டிக்கெட் 500 ரூபாய்க்கு விற்கிறது. கர்நாடகாவில் எந்தத் தமிழ்ப் படத்தையும் அனுமதிக்காதவர்கள், கன்னட நடிகர் படத்தை மட்டும் 13 திரையரங்குகளில் அங்கே திரையிடுகிறார்கள். இவர் நம்ம ஆள் என்று மகிழ்ச்சியடைகிறார்கள். தமிழனுக்கு ரோசம் வர வேண்டாமா ? தமிழன் இளக்காரமானவனாக, ஏமாளியாகவே வாழ வேண்டுமா ?

மானமும், அறிவும் பெறுவதற்கே நாத்திகர் விழாவை நடத்துகிறோம். 1957 இல் அரசியல் சட்டத்தில் சாதிக்கு ஏற்புக் அளிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து, தந்தை பெரியார் ஒரு மாநாட்டைக் கூட்டுகிறார்.

பேருந்து வசதி, தகவல் வசதி போன்ற எதுவும் இல்லாமல், பொருளாதார வசதியும் இந்த அளவு இல்லாத அந்தக் காலத்தில், பெரியார் ‘வா’ என அழைக்கிறார். மூன்று லட்சம் பேர் கூடுகிறார்கள். அப்போது பிரதமர் நேரு; முதலமைச்சர் பக்தவத்சலம் !

அரசியல் சட்டத்தில் சாதியைப் பாதுகாக்கும் அம்சத்தை எடுத்தால் - போராட்டத்தைக் கைவிடுவதாகவும், இல்லையென்றால் அரசியல் சட்டப் பிரிவுகளை எரிக்கும் போராட்டத்தை நவம்பர் 26 இல் நடத்தியே தீருவேன் என்றும் பெரியார் அறிவித்தார்.

உடனே, பெரியாருக்காகவே சட்டமன்றம் கூடியது. முன்னதாக 1952 இல் இடஒதுக்கட்டுக்காக பெரியாரின் போராட்டத்திற்குப் பின்பு - காமராசர் டெல்லி சென்று வற்புறுத்திய பிறகு, இந்தியாவின் முதல் அரசியல் சட்டதிருத்தம் நடந்தது. அதன் பின் இரண்டாம் முறையாக 1957 இல் காந்தி பட அவமதிப்பு - தேசியக் கொடி எரிப்பு - அரசியல் சட்ட எரிப்பு - போன்றவைகளுக்காக கடும் தண்டனை கொடுப்பதற்காக தனியாக சட்டம் போட்டார்கள்.

அப்படி சட்டம் போட்டதற்குப் பிறகு, சட்டத்தை எரித்தால் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று சட்டம் வந்ததற்குப் பிறகு - பெரியார் அறிவித்த 1957 நவம்பர் 26 போராட்டத்தில் 10,000 பேர் கலந்து கொண்டார்கள். 3000 பேர் கைதானார்கள். 5 பேர் சிறையிலும், 13 பேர் வெளியில் வந்தும் இறந்தார்கள். சிறையில் இருந்த போது இறந்த 2 பேரை வெளியில் பிணத்தைக் கொடுக்காமல், சிறையிலேயே புதைத்துவிட்டது பக்தவத்சலம் அரசு. மணியம்மையார் வேங்கையாகச் சீறி எழுந்தார். பிறகு 2 பேரையும் தோண்டி எடுத்து பிணத்தைக் கொடுத்தார்கள். சிறைபட்டவர்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகள் தண்டனை கிடைத்தது. பெரியார் 19 முறை சிறை சென்றிருக்கிறார். தஞ்சையில் 1957 போராட்டத்தில் சிறை சென்று இன்னும் உயிரோடு இருக்கும் அந்த மான மறவர்களைப் பாராட்டிச் சிறப்பித்தோம். அதே வழியில் தான் இப்போது எங்கள் தோழர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டத் தில் சிறைச் சென்றவர்கள், தன்னெழுச்சி யாகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். எந்த வித எதிர்பார்ப்புமின்றிப் போராடினார்கள்.

1944 இல் இனிவரும் உலகம் என்ற தனது நூலில் பெரியார் வாடகைத் தாய், சோதனைக் குழாய்க் குழந்தை - என்பது பற்றியெல்லாம் எழுதியிருக்கிறார். பெரியார் கண்ட கனவு இப்போது நனவாகியிருக்கிறது. ஆனால், பெரியார் காலத்திலிருந்த சாதியம் இன்னும் இருக்கிறது. இரட்டை தேநீர் குவளைகள் - கிராமங்களில் அகலவில்லை.

எனவேதான், தஞ்சை மாநாட்டில் வருகின்ற நவம்பர் 15 இல் தமிழ்நாடு முழுவதும் இரட்டைக் குவளைகள் இருக்கும் கடைகளைச் சென்று தம்ளர்களை உடைக்கும் போராட்டத்தை அறிவித்துள்ளோம். அதற்கான பட்டியல்களை தமிழ்நாடு முழுவதும் தயார் செய்யும் பணியை தோழர்களே உடனே தொடங்குங்கள்... தொடங்குங்கள்... என்று கூறி முடிக்கிறேன்'' - இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் உரையாற்றினார். ●

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராம. கோபாலன் மீதும் தான் தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய வேண்டும். இந்தியாவின் பொருளாதாரத்தையே மாற்றக்கூடிய, சேது சமுத்திரத் திட்டத்தை, இந்தியாவின் வளர்ச்சியைத் தடுக்கும் விதத்தில் அடிக்கடி வழக்குகள் போட்டு தொந்தரவு செய்துவரும் இவர்கள் தான் - தேச விரோதிகள் ! இவர்கள் மீதுதான் இந்தச் சட்டம் பாய வேண்டும் !

இல்லாத பாலத்தை வைத்து பிரச்சினை செய்து வரும் இவர்களை விட்டு விட்டு, காட்டுக்குச் சென்ற தனது மனைவியை சந்தேகப்பட்டு தீயில் இறங்கச் சொன்ன அயோக்கிய இராமனின் சிலையை உடைத்ததாக தோழர்கள் மீது வழக்குப் போட்டிருக்கிறார்கள். - இவ்வாறு உரையாற்றினார்.

### வழக்குரைஞர் பாவேந்தன்
### (அமைப்பாளர் தமிழ் தேசிய வழக்குரைஞர் நடுவம்)

“தமிழுக்காக, பெரியாரியலுக்காகப் போராடுபவர்களை தீவிரவாதிகள் என்று கொச்சைப்படுத்துகிறார்கள். இந்தியாவைப் பாதுகாக்க பெரியார் தொண்டர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போடுகிறார்கள். வரலாற்றில் இந்தியா என்ற தேசமே இருந்ததில்லை. நாம் தமிழர்கள் ! தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்தவர்கள். பொது மொழி,பொது எல்லையை - தமிழ் தேச எல்லையைக் கொண்டவர்கள். நம் தேசத்தை நாம்தான் பாதுகாக்க வேண்டும். அது நம்மால் மட்டுமே முடியும். நம்தேச இறையாண்மையைத் தீர்மானிக்கும் சக்தியாக நாம் உருவாக வேண்டும்.

முல்லைப் பெரியாறு, பாலாறு, காவிரிப் பிரச்சினைகளில் தமிழ்நாடு வஞ்சிக்கப் படுகிறது. நரிமணம் பெட்ரோல், நெய்வேலி நிலக்கரி இவை மூலம் தமிழ்நாடு கொள்ளையடிக்கப்படுகிறது. நமக்கான அரசை நாம் உருவாக்க பெரியார் தேவைப்படுகிறார்.

### தோழமை அமைப்பினருக்குப் பாராட்டு!

கழகத் தோழர்களை சிறையில் அடைத்ததற்கு எதிர்ப்பு செய்து போராட்டம் நடத்தி, அதனால் சிறைச் சென்ற தோழமை அமைப்புகளைச் சேர்ந்த மு. மோகன்ராஜ் (தமிழ் தேசிய விடுதலை இயக்கம்), புலி. பாண்டியன் (சாதி ஒழிப்பு பொதுவுடைமை முன்னணி), வெ. இளங்கோ (தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி) மற்றும் வழக்குரைஞர்கள் - வி. இளங்கோவன் (சென்னை), எம். செந்தில் குமார் (சென்னை), ப.பா. மோகன் (பவானி), பாவேந்தன் (ஈரோடு), ஜெ. ஜெயராஜ் (ஈரோடு) - ஆகியோருக்கு கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி, துணைத் தலைவர் கா.சு.வேலுச்சாமி, கழகத் தலைவர் ஆகியோரும் உரையாற்றினர். முன்னதாக “சமர்பா” கலைக்குழுவின் எழுச்சி இன்னிசை நடைபெற்றது. நிறைவாக சதுமுகை பழனிசாமி நன்றி கூறினார்.

**தொகுப்பு : தமிழ்த்தேனி**

---

## தோழர் தமிழ்நம்பி மறைந்தாரே!

பெரியார்திராவிடர் கழகத்துடன் நெருக்கமாக இருந்தவரும், தமிழின உணர்வாளருமான மயிலாடுதுறை தமிழ் நம்பி எனும் தோழர் செல்வகணபதி தனது 52வது வயதில் - 3.6.2007 அன்று விபத்தில் முடிவெய்தினார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் முதுநிலை எழுத்தராக பணியாற்றி வந்த தோழர் தமிழ் நம்பி, சித்த மருத்துவர் சங்கம், செந்தமிழ்ப் பேரவை, அமைப்புகளின் வழியாக, பார்ப்பன எதிர்ப்புக் களத்தைக் கூர்மைப்படுத்தி வந்தவர். பெரியார் திராவிடர் கழகம் சேலத்தில் நடத்திய தமிழர் வழிபாட்டு உரிமை மாநாடு, வடலூரில் வள்ளலார் சபையில் பார்ப்பன ஊடுருவலை எதிர்த்து கழகம் நடத்திய பொதுக் கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கியவர்; கழக ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்கத்’தின் தீவிர வாசகர் ஆவார்.

கடந்த 14 ஆம் தேதி மயிலாடுதுறையில் எம்.ஆர்.பி. திருமணக் கூடத்தில் நடந்த இரங்கல் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், பெ. மணியரசன், நா.க. இரகுபதி, முனைவர் செம்பியன், முனைவர் செயராமன் உள்படப் பலரும் பேசினர். பழனி-சிவானந்த புலிப்பாணி அடிகளார் தலைமை தாங்கினார். இறை நம்பிக்கைக் கொண்ட தமிழர்களிடையே வடமொழி பார்ப்பன எதிர்ப்புகளைக் கூர்மைப்படுத்தும் களத்தில் முழுமையாகப் பணியாற்றி வந்த தமிழ் நம்பியின் மறைவு பேரிழப்பாகும். அவரது துணைவியார் திருமதி புவனேசுவரி அவர்களுக்கும், பள்ளிகளில் படித்து வரும் மகள்கள் யாழினி, நித்திலாவுக்கும் - பெரியார் திராவிடர் கழகம் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்களின் துயரத்தில் பங்கேற்கிறது.

---

## நாடி சோதிடத்தை தடைசெய்யக் கோரி சுவரொட்டி

சீர்காழியில் நாடி சோதிடத்தை தடை செய்யக் கோரி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

- தமிழக அரசே ! நாடி சோதிடம், சோதிட கைரேகை ஆகிய மோசடிகளை உடனடியாக தடைசெய்.
- பீகார், மராட்டிய அரசை பின்பற்றி சோதிட மோசடியைத் தடுக்க சட்டமியற்று.

**– பெரியார் திராவிடர் கழகம், சீர்காழி.**

- ஆகிய வாசகங்கள் அடங்கிய சுவரொட்டியை 1.4.2007 அன்று சீர்காழி, வைத்தீசுவரன் கோயில் பகுதிகளில் ஒட்டப்பட்டது. 3.4.2007 அன்று காலை முதல் மாலை வரை சீர்காழி பொறுப்பாளர்களால் மக்கள் மத்தியில் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. சுவரொட்டிகளை நாடி சோதிட மோசடி கும்பல் கிழித்து எறிந்தது. காவல்நிலையத்தில் கழக சார்பில் புகார் தரப்பட்டுள்ளது.


---

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 22nds June 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஜூன் 28, 2007 புரட்சி 5 முழக்கம் 26 விலை : ரூ.2.50

## எந்த சக்தியாலும் எங்களை வீழ்த்த முடியாது

# "நாங்கள் சாணக்கிய பரம்பரை"


உ.பி.யில் மனுவாதிகள் எதிர்ப்பு என்ற முழக்கத்தோடு தொடங்கப்பட்டது பகுஜன் சமாஜ் கட்சி. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினரை ஓரணியாக்கி, வெகுமக்களை அரசியல் மயமாக்கி, பார்ப்பன மனுவாத சக்திகளை அரசியலில் வீழ்த்தும் திட்டங்கள் அணுகுமுறைகளோடு, பகுஜன் சமாஜ் கட்சியைத் தொடங்கினார் கன்ஷிராம். அவர் உரைக் கேட்கத் திரண்ட பெரும் கூட்டத்தில், "இங்கே யாராவது பார்ப்பனர்கள் இருந்தால் வெளியேறி விடலாம்" என்ற அறிவிப்போடு தனது உரையைத் தொடங்குவார் கன்ஷிராம். மாயாவதி உ.பி. முதலமைச்சரான பிறகு, அவர் 'பெரியார் மேளா'வை நடத்திய போதுதான் பார்ப்பனர்களும், பா.ஜ.க.வினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதே மாயாவதி - இப்போது தனது அரசியல் பாதையைத் தலைகீழாகத் திருப்பியுள்ளார். பிற்படுத்தப்பட்டோரை எதிர்த்து பார்ப்பனர்களுடன் கைகோர்க்க முடிவு செய்தார். பகுஜன் சமாஜ் கட்சியே மாவட்டந்தோறும் பார்ப்பனர்களின் 'மனுவாத' மாநாட்டைக் கூட்டியது. பகுஜன் சமாஜ் கட்சியில் முன்னாள் அதிகாரியான எஸ்.சி. மிஸ்ரா என்ற பார்ப்பனருக்கு ஒரு முக்கிய பதவி தந்து, அவர் மூலம் பார்ப்பனர்களை அணி திரட்டும் திட்டங்களை வகுத்தார்.

இந்தியாவில் அதிகார வர்க்கத்தில் பார்ப்பன ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. சக்தி மிக்க நீதித்துறையும் 'அவாள்' பிடிக்குள்தான் சிக்கியுள்ளது. 'மண்டல் அலை'க்குப் பிறகு, அரசியல் அதிகாரத்தை இழந்த பார்ப்பனர்கள் - இப்போது மாயாவதியை ஏணிப்படியாக்கி, உ.பி. அரசியலில் வலிமை பெறத் துடிக்கிறார்கள். பதவிக்காக - இந்த சமூக துரோகத்தை அரங்கேற்றியிருக்கிறார் மாயாவதி. இந்த 'எலி-தவளை' கூட்டு, எவ்வளவு காலம் நீடிக்கும் என்ற கேள்விக் குறி ஒரு பக்கம் இருந்தாலும், பார்ப்பன வட்டாரங்கள் மகிழ்ச்சிக் கூத்தாடுகின்றன. மீண்டும் தங்கள் பக்கம் காற்று வீசத் துவக்கிவிட்டதாகவே கருதுகின்றன.

இது பற்றி - வட நாட்டிலிருந்து வெளிவரும் ஆங்கில ஏடுகள், பல முகப்புக் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. அதில் ஒன்று 'அவுட்லுக்' ஜூன் 4, 2007-ல் அந்த ஏடு - 'பார்ப்பனர்களின் மீள் வருகை' (Return of the Brahmin) என்ற தலைப்பில் இது குறித்து விரிவான சில கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. அதன் உள்ளடக்கத்தை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வாசகர்களுக்கு தொகுத்து வழங்குகிறோம்:

'இரு பிறப்பாளர்களுக்கு மீண்டும் ஒரு பிறப்பு' என்ற தலைப்பில் - கட்டுரை ஒன்று 'அவுட் லுக்'கில் இடம் பெற்றுள்ளது. 'பல ஆண்டுகள் பதுங்கி நின்ற பிறகு பார்ப்பனர்களின் அரசியல் குரல் ஓங்கி ஒலிக்கத் துவங்கியுள்ளது. அந்தக் குரலைக் கேட்க, ஒவ்வொரு கட்சியும் ஆர்வம் காட்டுகிறது' என்ற பீடிகையுடன் அக்கட்டுரை தொடங்குகிறது. 'மண்டல் யுகத்தில்' ஓரம் கட்டப்பட்ட பார்ப்பனர்கள், தங்களின் புத்திக் கூர்மைகளைப் பயன்படுத்தி, தங்களை எந்தச் சக்தியாலும் தடுத்து விட முடியாது' என்பதை நிரூபித்துள்ளனர், என்கிறது அக்கட்டுரை.

'சுதந்திர போராட்ட காலத்தில் - இந்து மகாசபையை உருவாக்கிய பண்டிட் மதன் மோகன் மாளவியா உவாக்கியது அகில இந்திய பார்ப்பன மகாசபா. இந்த மகாசபையின் தலைவராக இப்போது இருந்து வருபவர் மங்கேராம் சர்மா. புதுடில்லியில் வசிக்கும் இந்த பார்ப்பனர், கடந்த 20 வருடங்களாக உச்சநீதிமன்றத்தில் இட ஒதுக்கீட்டை எதிர்த்து, அடுக்கடுக்காக வழக்குகளை தொடர்ந்து வருகிறார். காங்கிரசு, பா.ஜ.க. இரண்டு கட்சிகளுமே பார்ப்பனர்களுக்கு துரோகமிழைத்துவிட்டது என்று கூறும் இவர் மாயாவதியைப் புகழ்கிறார். தனது தலையில் சுமந்து வந்த 'மண்டலை' தூக்கி வீசிவிட்டார் மாயாவதி. "பிராமணர்கள்" இப்போதுதான் முதல்முறையாக, வாக்களிப்பதில் சாதுர்யத்தைக் காட்டியுள்ளனர் என்று கூறும் இவர், "எங்களை கவுரவித்ததன் வழியாக, மாயாவதி, அரசியலின் போக்கையே திசை திருப்பி விட்டார்." மாயாவதிக்கு ஒரு உண்மை நன்றாகப் புரிந்தது. "பிராமணர்கள், தாங்களாகத் தேர்தலில் போட்டியிட்டு




வெற்றி பெற முடியாது. ஆனாலும் அவர்களால் வெற்றி பெற முடியாவிட்டாலும், தோற்கடிக்கும் சக்தி அவர்களுக்கு உண்டு என்பதை மாயாவதி புரிந்து கொண்டார்" என்கிறார் அவர்.

'பார்ப்பனர்களின் எண்ணிக்கை முக்கியமல்ல; ஆனால், தலித் மக்களுக்காகக் கட்டப்பட்ட ஒரு கட்சிக்கு, பார்ப்பனர்கள் ஆதரவு தந்து, அக்கட்சி வெற்றி பெறுவதற்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியதுதான் மிக முக்கியமானது. இது, அரசியலில் ரசாயன மாற்றத்தை உருவாக்கிவிட்டது. சமூகத்துக்கு தலைமை ஏற்பதையே வழமையாகக் கொண்டிருந்த பார்ப்பனர்கள், ஒரு தலித்தைத் தலைவராக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இந்த நிகழ்வு பிற சாதியினரிடையே ஓர் தூண்டும் விசையாக செயல்பட்டுள்ளது. அதாவது பார்ப்பனர்களே 'தலித்' தலைவரை ஏற்கும்போது, நாம் ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?" என்று பிறசாதிகளிடையே உளவியல் தாக்கத்தை இது உருவாக்கிவிட்டது என்கிறது, 'அவுட்லுக்' கட்டுரை.

ஒரு மாதத்துக்கு முன்பு வரை - மாயாவதியைப் பற்றி பார்ப்பனர்கள் சிந்திக்கக்கூட மறுத்தார்கள். ஆனால் தேர்தல் வெற்றிக்குப் பிறகு, கிராமத்திலிருந்து நகரம் வரை புரோகிதர்களிலிருந்து தொழிலதிபர்கள் வரை, இந்தியா முழுதும் உள்ள பார்ப்பனர்கள் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கிறார்கள். லக்னோவில், வீதிகளில் பார்ப்பனர்கள் மக்களுக்கு இனிப்பு வழங்கி, "இது எங்களுடைய வெற்றியும் கூட" என்று கொண்டாடினார்கள். "நீண்ட காலத்துக்குப் பிறகு - எங்களுக்கு கவுரவம் கிடைத்துள்ளது, பகுஜன் சமாஜ் கடசியின் வெற்றியில். மீண்டும் 'ராம ராஜ்யம்' திரும்பியுள்ளது" என்கிறார்கள் பார்ப்பனர்கள்.

மண்டல் அலைக்குப் பிறகு - பார்ப்பனர்கள் தேர்தல் அரசியலில் ஓரம் கட்டப்பட்டு விட்டனர். இது எழுதப் படாத சட்டமாகவே இருந்தது. ஆனால், பகுஜன் சமாஜ் கட்சியோ, தனது வேட்பாளர்களாக பார்ப்பனர்களை நிறுத்தி, அதில் 51 பார்ப்பனர்களை வெற்றி பெறச் செய்ததன் மூலம், மாயாவதி, மண்டல் அலையை தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டார். மண்டல் அலைக்குப் பிறகு திரைமறைவு அரசியல் நடவடிக்கைகளில் மட்டுமே ஈடுபட்டுவந்த பார்ப்பனர்கள், இப்போது நேரடியாகவே களத்துக்கு வந்து விட்டார்கள்.

கன்னட எழுத்தாளரான யு.ஆர். ஆனந்த மூர்த்தி, 'சம்ஸ்கரா', 'கத்தாஸ்ரத்தா' என்ற பரபரப்பான நாவல்களை எழுதியவர். சம்ஸ்கரா நாவலை 1970 இல் அவர் எழுதினார். ஓர் அர்ச்சகப் பார்ப்பனர், 'கீழ் சாதி'ப் பெண்ணுடன் உறவு வைத்துக் கொண்டது பற்றிய நாவல் அது. கிராமத்தில் வாழும் புரோகிதப் பார்ப்பனர்களின் அதிகாரச் செல்வாக்கை, தனது நாவலில் அவர் படம் பிடித்தார். இப்போது, தலைகீழான மாற்றங்கள் வந்துவிட்டன என்கிறார் யு.ஆர். அனந்த மூர்த்தி. 'பார்ப்பனர்களும் - தலித்துகளும் நிலமற்றவர்கள்; அதுவே மாயாவதி திட்டம் - வெற்றி பெறுவதற்கான காரணம்' என்று ஒரு புதிய 'கண்டுபிடிப்பை' அவர் முன் வைத்துள்ளார். (நிலங்களை வைத்திருப்போரை - கட்டுப்படுத்தும் சமூக அதிகாரம் படைத்தவர்கள் பார்ப்பனர்கள் என்பதே உண்மை-ஆர்)

அரசியல் ஆய்வாளரான மகேஷ் ரங்கராஜன், தென்னாட்டு பார்ப்பனர்கள் பற்றி ஒரு கருத்தை முன் வைக்கிறார். "வரலாற்று காலத்திலிருந்து - தென்னாட்டில் பார்ப்பனர்கள்தான் அனைத்துத் துறைகளிலும் முதலிடத்தில் இருந்தார்கள். அதே பார்ப்பனர்கள்தான் இப்போது புதிய பொருளாதாரக் கொள்கைகள் வந்த பிறகும், முன் வரிசையில் இடம் பிடித்து, வழி நடத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். தென்னகத்தில் தகவல் தொழில் நுட்பத் துறையில் - என். ஆர். நாராயணமூர்த்தியைப் போன்ற "ஜாம்பவான்கள்" வந்துவிட்டார்கள். பார்ப்பனர்களிலும், ஏழைக் குடும்பங்கள் உண்டு என்பது உண்மை தான் என்றாலும், தமிழ்நாட்டிலும், மகாராஷ்டிராவிலும், பார்ப்பனத் தொழிலதிபர் பரம்பரைகள் உருவாகி விட்டன" என்கிறார் ரெங்கராஜன்.

தென்னகத்தைவிட, இந்திப் பேசும் பகுதிகளில் பார்ப்பனர்களின் எண்ணிக்கை அதிகம். ஆனால், 'மண்டலு'க்குப் பிறகு, வடநாட்டுப் பார்ப்பனர்களுக்கு நெருக்கடி வந்துவிட்டது. அரசியலிலும் வேலை வாய்ப்புகளிலும், வட மாநிலங்களில் ஆதிக்கம் செலுத்தினர், பார்ப்பனர்கள். இட ஒதுக்கீடு கொள்கை அமுலான பிறகு, அவர்களின் ஆதிக்கம் மட்டுப்படுத்தப்பட்டது. பார்ப்பன அரசியல் 'ஜாம்பவான்களான' கமலாபதி திரிபாதிகளின் காலம் முடிவடைந்து, வடமாநிலங்கள் - பொருளாதார வளாச்சியில்

(4 ஆம் பக்கம்

# பாதிக்கப்பட்ட தி.க.வினருக்காக சிறையேகிய பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள்

*திராவிடர் கழகத் தோழர்களின் நில உரிமையை பா.ஜ.க. பறித்தது. தி.க. தலைமையிடம் முறையிட்டும் அது மவுனமே சாதித்தது. பெரியார் திராவிடர் கழகச் செயல்வீரர்கள் களமிறங்கினார்கள்; சிறை புகுந்தார்கள்; நடந்தது என்ன?*

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் நெய்க்காரப்பட்டி அருகேயுள்ள ஐந்து மருகால் பகுதியில் ஆதி திராவிடர் நலத்துறை மூலம் 1981 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்களுக்கு வீடு கட்டிக் கொள்ள வீட்டுமனையும், அதற்குரிய பட்டாவும் வழங்கப்பட்டது. இப்படி வழங்கப்பட்ட பட்டாக்களை ஒட்டு மொத்தமாகச் சுருட்டிக் கொள்ள அதே பகுதியைச் சேர்ந்த இராஜேந்திரன் என்ற பி.ஜே.பி. அமைப்பின் பொறுப்பாளர் திட்டமிட்டார். அங்கு வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் அப்பகுதியில் தொழிற்சாலை அமைத்து வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி அனைவரிடமும் 1981 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பட்டாக்களை வாங்கி வைத்துக் கொண்டார்.

அதன் பிறகு 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு ஆதி திராவிடர் நலத்துறை சார்பில் வழங்கப்பட்ட பட்டாக்களிலுள்ள சில குழப்பங்களைச் சரி செய்து திருத்தியமைக்கப்பட்ட பட்டாக்களை வழங்கியது. இப்படி திருத்திய பட்டாக்களை வழங்கும் போது, பட்டாவாக மாறும்போது பி.ஜே.பி. இராஜேந்திரன் பழனியிலுள்ள வருவாய்த் துறை மற்றும் ஆதி திராவிடர் நலத்துறை அதிகாரிகளின் துணையோடு ஐந்து மருகால் பகுதியிலேயே 1980 லிருந்து வாழ்ந்து வரும் 58 குடும்பங்களின் பட்டாக்களை தனது பெயரிலும், தனது குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய உறவினர்கள் பெயரிலும் மோசடியாக மாற்றி விட்டார். மாற்றியவுடன் அங்கு வாழ்ந்து வந்த மக்களுக்கு பல தொல்லைகளைக் கொடுத்து அங்கிருந்து விரட்டிவிட்டு தனது குடும்பத்தினரையும், உறவினரையும் குடியேற்றிவிட்டார். ஒரு சில குடும்பங்கள் மட்டும் அவரது தொல்லைகளைப் பொறுத்துக் கொண்டு இன்னும் ஐந்து மருகாலிலேயே வசித்து வருகின்றனர். அக்குடும்பங்கள் திராவிடர் கழக பழனி ஒன்றியச் செயலாளர் திருச்செல்வம் மற்றும் வின்சென்ட், முருகேசன் ஆகிய திராவிடர் கழகத் தோழர்களின் குடும்பங்களாகும்.

தொழிற்சாலை அமைப்பதற்காக என பொய்யாகக் கூறி இராஜேந்திரன் வாங்கிச் சென்ற பட்டாக்களை இம்மூன்று தோழர்களும் பலமுறை நேரில் கேட்டுள்ளனர். அப்படிக் கேட்கும் போதெல்லம் அத்தோழர்கள் மீது பல பொய் வழக்குகளைப் போட்டு பல ஆண்டுகளாக சிறை, நீதிமன்றம் என அவர்களை அலையவிட்டுள்ளார் பி.ஜே.பி. இராஜேந்திரன். இது தொடர்பாக திராவிடர் கழக தலைமையிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கையுமில்லை. இந்நிலையில் கடந்த 27.4.07 அன்று தி.க. ஒன்றியச் செயலாளர் திருச்செல்வத்தின் தாயாரை வீட்டைக் காலி செய்யச் சொல்லி கடுமையாகத் தாக்கியுள்ளார் இராஜேந்திரன். இதுபற்றி பழனி வட்டக் காவல் நிலையத்தில் புகார் செய்தபோது புகாரையே வாங்க மறுத்துள்ளார் ஆய்வாளர் செந்தில்வேல். தி.க. தோழரின் தாயார் தாக்கப்பட்டதை அறிந்து நமது பெரியார் திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி 30.4.07 அன்று தோழர்களுடன் சென்று பி.ஜே.பி. இராஜேந்திரனை நேரில் கண்டு நியாயம் கேட்டுள்ளார். நியாயம் கேட்கச் சென்றதற்காக 10.5.07 அன்று மருதமூர்த்தி, மணி கண்டன், பத்ரா மற்றும் திராவிடர் கழகத் தோழர்கள் நல்லதம்பி, திருச்செல்வம், வின்சென்ட், முருகேசன் ஆகியோர் மீது பொய் வழக்குப் போட்டு சிறையிலடைத்தது பழனி காவல்துறை. இரட்டைக் குவளை ஒழிப்புப் பிரச்சாரத்தின்போது பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மீது தாக்குதல் நடத்திய வாகரை கிராமத்தைச் சேர்ந்த பி.ஜே.பி. வழக்கறிஞர் கருப்புச்சாமி, கழகத் தோழர்கள் சிறையிலிருந்து விரைவில் வெளியேறாமல் இருக்க உரிய தடைகளைப் போட்டுவந்தார். எனவே பிணையில் வரக்கூடிய விரிவான 506(1) வழக்குப் பதியப்பட்டிருந்தும் கழகத் தோழர்கள் 10 நாள் சிறையிலிருந்து 19.5.07 தான் அன்று பிணையில் வந்தார்கள்.

திராவிடர் கழக ஒன்றியச் செயலாளர் திருச்செல்வம் மற்றும் செயல் வீரர் நல்லதம்பி உட்பட முக்கிய தி.க.வினர் கைதாகியிருந்தும் திராவிடர் கழகம் இப்பிரச்சினையில் உரிய அக்கறை காட்டாதது மட்டுமின்றி, பி.ஜே.பி. இராஜேந்திரனுடன் சமரசமாகப் போய்விட்டனர். இந்நிலையில் பெரியார் திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தியின் துணைவியார் உஷா மற்றும் பழனி நகரத் தலைவர் ஜவகர் ஆகியோர் முயற்சியால் அனைவரும் பிணையில் எடுக்கப்பட்டனர். இப்பிரச்சினைகள் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்களிடம் மே 21 அன்று விரிவாகத் தெரிவிக்கப்பட்டது. உடனே 28.5.07 அன்று ஐந்துமருகால் காலனிக்கு நேரில் வருவதாக பழனி தோழர்களிடம் தெரிவித்தார்.

அதன்படி மே 28 அன்று காலை 11 மணிக்கு வண்டிவாய்க்காலில் மருதமூர்த்தியின் இல்லத்துக்குச் சென்று அங்கிருந்து தோழர்களுடன் ஐந்துமருகாலில் உள்ள திராவிடர் கழகச் செயல்வீரர் நல்லதம்பியின் இல்லத்துக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி சென்றார். (இவர் அண்மையில் தான் தி.க. தலைவர் கி.வீரமணி தலைமையில் சாதி மறுப்புத் திருமணம் செய்தவர்). நல்ல தம்பி மற்றும் அங்குள்ள பாதிக்கப்பட்ட அனைத்து குடும்பத்தினரையும், பி.ஜே.பி.யினரால் தாக்கப்பட்ட திருச்செல்வத்தின் தாயாரையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அமைப்புகள் வெவ்வேறாக இருந்தாலும் கருஞ்சட்டைத் தோழனுக்கு எந்தப் பிரச்சினை என்றாலும் பெரியார் திராவிடர் கழகம் களமிறங்கும் என்ற உறுதியை நடைமுறையில் காட்டியது பெரியார் திராவிடர் கழகம். ஐந்துமருகாலிலிருந்து விரட்டப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களது உரிமையை, உரிய பட்டாவை மீட்கத் தேவையான - உரிய ஆலோசனைகளையும் கழகத் தலைவர் கூறினார்.

தொடர்ந்து பொய்வழக்குப் போட்டு வரும் பழனி வட்ட காவல் ஆய்வாளரைக் கண்டித்தும், பட்டா மோசடிக்குத் துணை போன பழனி வட்ட வருவாய்த் துறை மற்றும் ஆதி திராவிடர் நலத்துறை அதிகாரிகளைக் கண்டித்தும் 8.6.07 அன்று பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன்பு அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துமாறும் தானும் அதில் கலந்து கொள்கிறேன் என்றும் கழகத் தலைவர் அறிவித்தார். நல்லதம்பியின் இல்லத்தில் பகல் உணவை முடித்துக் கொண்டு ஒட்டன் சத்திரத்தில் சாதி ஒழிப்பு மாநாட்டுத் தீர்மான விளக்கக் கூட்டத்திற்குப் புறப்பட்டார். பெரியார் திராவிடர் கழகத்தின் அணுகுமுறை தி.க. தோழர்களை ஈர்த்தது. அன்று மாலையே ஒட்டன்சத்திரம் கூட்டத்திற்கு சிறைச் சென்ற தி.க. தோழர்கள் வருகை தந்தனர். அன்று முதல் தம்மை பெரியார் திராவிடர் கழகமாக அறிவித்து அவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**செய்தி: தாமரைக் கண்ணன்**

# நாத்திக நாகரிகம்

*– தமிழ். தஞ்சை –*

*(தண்டனைப் பெற்ற ஓர் இன உணர்வுள்ள கைதி, திருச்சி சிறையில் எழுதிய கவிதை)*

தேசிய பறவை மயிலென்று தெரியும்
தேசிய விலங்கு புலியென்று தெரியும்
தேசிய "நூல்" எதுவென்று தெரியுமா?
தெரிந்து கொண்டார்கள்
பெரியார் தி.க. தோழர்கள்.

பெரியார் தி.க. தோழர்களே!
நீங்கள் சட்டத்திற்கு தேசவிரோதிகள்
தேசத்திற்கு
உண்மையான பெரியாரின்
தொண்டர்கள்.

'தாலியை அறுத்தால்
கொலை வழக்குப் போடும்
இண்டியன் பீனல் கோடு
பூநூலை அறுத்தால்
தேசிய பாதுகாப்பு வழக்குப் போடும்
இண்டியன் பூ. நூல் கோடு.

மன்னார்குடி நெருப்பை
மடியில் மறைத்துக் கொண்டு
போயஸ் தோட்டத்து பொதிமூட்டை
போதனை செய்கிறது
பஞ்சையும், நெருப்பையும்
திருவரங்கத்தில் வைப்பதோ என்று.

யார் நெருப்பு யார் பஞ்சு
திருவரங்கத்தின் திருவாளர்களே
நீங்கள் நெருப்புதான்
தில்லையில் நந்தனை எரித்ததும்
வடலூரில் வள்ளலாரை எரித்ததும்
நீங்கள் தான்.

கோத்ரா ரெயிலை எரித்ததும்
குஜராத்தை
கொலைக்களமாக்கியதும்
திருவரங்கத்தின் திருவாளர்களே
உங்கள் நெருப்புதான்.

பெரியார் அம்பேத்கர்
சிலைகளை இடிக்கும் நீங்கள்
யாக குண்ட நெருப்புதான்
பெரியாருக்கும், அம்பேத்கருக்கும்
சிலை வைக்கும் நாங்கள்
பருத்தி பஞ்சுகள் அல்ல
பாவேந்தரின் பீரங்கிகள்.

நாடு முழுக்க நாங்கள்
தலை நிமிர்ந்தோம் உன்னால்
உன்தலை உடைக்கப்பட்டது
திருவரங்கத்தில்.

பெரியாரின் தலையில் அடிபட்டது
திருவரங்கத்தில்
பார்ப்பனத்தாலி அறுபட்டது
நாடு முழுக்க.

உழைக்கும் மக்களை ஒதுக்கி வைத்த
அக்கிரகாரத்தின் ஆணி வேரை
பிடுங்கியவர் நீ
அதனால்தான்
அக்கிரகாரத்து, மல மண்டைகள்
ஆட்டம் போடுகிறது
கடைசி வேரை காப்பாற்ற.

சூத்திரனும் பஞ்சமனும்
வேதத்தை படித்தால்
நாக்கை அறுப்பதும்
கேட்பவர் காதில்
ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதும்
பார்ப்பன நாகரீகம்.

பெரியார் அம்பேத்கர் சிலைகள் மீது
காறி உமிழ்பவன்
நாக்கை அறுப்பதும்
கல்லால் அடிப்பவன்
கையை எடுப்பதும்
சிலையை இடிப்பவன்
சிண்டை அறுப்பதும்
நாத்திக நாகரீகம்.

திருவரங்கத்தில்
பெரியாருக்கு சிலை வைத்தால்
புனிதம் கெட்டுவிடுமா?

சமணர்களின் தலையை துண்டித்த
இடம்
சமணமத கோயிலுக்கு
சமாதி கட்டிய இடம்
ரெங்கநாதன் கோயிலை
கட்டியவர்களுக்கு
கூலி கொடுக்காமல்
காவு கொடுத்த இடம்
சமணத்தை சாம்பலாக்கிய சுடுகாடு
இதுதான் திருவரங்கத்தின் புனிதம்.

திருவரங்கத்தில்
பெரியார் சிலையிருப்பதால்
புனிதம் கெடாது
சிலைத் திருடன் கொலைகாரன்
திருமங்கையாழ்வாரின்
வாரிசுகளின் குலத்தொழில் கெட்டுவிடும்.
எங்கள் நெற்றியில் நாங்கள் பூசுவது
திரு நீரல்ல
நீங்கள் எரித்த
எங்கள் முன்னோர்களின் சாம்பல்.

எங்கள் நெற்றியில் நாங்கள் பூசுவது
குங்குமம் அல்ல
உங்களால்
எங்கள் முன்னோர்கள் சிந்திய ரத்தம்.

எங்கள் நெற்றியில் நாங்கள் பூசுவது
சந்தனம் அல்ல
நீங்கள் எங்களை
திண்ணியத்தில் தின்னவைத்த மலம்.

எங்கள் நெற்றியில் நாங்கள் பூசிய
திருநீரை, குங்குமத்தை, சந்தனத்தை
உங்கள் வாரிசுகளும் ஒருநாள்
அவர்கள் நெற்றியில் பூசுவார்கள்.

## திண்டுக்கல் மாவட்ட புதிய பொறுப்பாளர்கள்

திண்டுக்கல் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 22.4.2007 ஞாயிறு மாலை 5 மணியளவில் திண்டுக்கல்லில் கன்னியம்மாள் உணவு விடுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பழனி வண்டிவாய்க்கால், மானூர், ஒட்டன் சத்திரம், செம்பட்டி, வலையபட்டி மற்றும் திண்டுக்கல் நகர தோழர்கள் பங்கேற்றனர்.

இரட்டைக் குவளை ஒழிப்புப் பிரச்சாரப் பணியில் இருந்தபோது ஒட்டன்சத்திரம் அருகே வாகரை கிராமத்தில் சாதி வெறியர்கள் நடத்திய வன்முறைகள் குறித்து பிரச்சாரத்தில் ஈடுபட்ட தோழர்களான க. பெரியார் நம்பி, சு. மருதமூர்த்தி, வழக்கறிஞர் செல்லத்துரை, அர. ஜவகர், தி. தாமரைக்கண்ணன், கடத்தூர் காந்தி, கதிரவன் ஆகியோர் நடந்தவற்றை விரிவாக விளக்கினர். கொடுமுடி பாண்டியன், கோவை கதிரவன், மதுரை தமிழ்ப்பித்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக கழகத் தலைவர் பேசும்போது, இரட்டைக் குவளை மற்றும் இரட்டை இருக்கை ஆகிய வன்கொடுமைகளுக்கு எதிராக தமிழ்நாடு முழுதும் கழகம் பிரச்சாரத்தை தொடங்க உள்ளது எனவும், தஞ்சையில் மே மாதம் 19 ஆம் நாள் நடைபெற உள்ள சாதி ஒழிப்பு மாநாட்டில் இவ் வன் கொடுமைகளுக்கு எதிராக போராட்டம் அறிவிக்கப்படும் எனவும் அறிவித்தார். திண்டுக்கல் மாவட்டத்திற்கு புதிய பொறுப்பாளர்களையும் அறிவித்தார்.

புதிய பொறுப்பாளர்கள்: மாவட்டத் தலைவர் துரை சம்பத், செயலாளர் க.சு. இரவணா, அமைப்பாளர் சு. மருதமூர்த்தி, வழக்கறிஞரணி அமைப்பாளர் க. செல்லத் துரை.

ஒன்றிய அமைப்பாளர்கள் : ஆத்தூர் – வலையப்பட்டி வீ. நாகராஜ், ஒட்டன்சத்திரம்-வடகாடு நாகராஜ்.

பழனி ஒன்றியத் தலைவர் – சிவக்குமார், செயலாளர் – வண்டி வாய்க்கால் மணிகண்டன், அமைப்பாளர் – சுல்தான்.

தொப்பம்பட்டி ஒன்றியத் தலைவர் – கருஞ்சட்டை கமர்தீன், செயலாளர் – அறிவாசான்.

திண்டுக்கல் நகரத் தலைவர் – துரை. சுப்பிரமணியன், செயலாளர் – ஒய்.எம்.ஆர். பட்டி திருப்பதி.

பழனி நகரத் தலைவர் – மௌ. அர. ஜவகர், செயலாளர் – பொன் ராசு, அமைப்பாளர் – மணிகண்டன்.

### ஒட்டன் சத்திரத்தில் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம்

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரத்தில் மே மாதம் 28 ஆம் தேதி மாலை 6 மணியளவில் தஞ்சையில் நடைபெற்ற சாதி ஒழிப்பு மாநாட்டில் அறிவிக்கப்பட்ட போராட்டத் தீர்மானங்களை விளக்கி பொதுக்கூட்டம் நடைபெற்றது. முன்னாள் மாவட்டத் தலைவர் ஒட்டன்சத்திரம் க. சக்திவேல் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் துரை. சம்பத், செயலாளர் க.சு.இரவணா, பெரம்பலூர் மாவட்ட அமைப்பாளர் இலட்சுமணன் ஆகியோர் உரையாற்றினர்.

ஒட்டன்சத்திரம் பெரியார் நம்பி குடுகுடுப்பைக் காரர் வேடமணிந்து, 'மந்திரமா? தந்திரமா?' கலை நிகழ்ச்சியை நடத்தினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி இரட்டைக் குவளை, இரட்டை இருக்கை உடைப்புப் போராட்டத்தின் தேவையை – அவசியத்தை விளக்கி சிறப்புரையாற்றினார். இரட்டைக் குவளை முறை மிகுதியாக உள்ள, பண்டு கிராமங்களின் தலைநகராக உள்ள ஒட்டன்சத்திரத்தில் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தை விளக்கி மக்களைச் சந்தித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கூட்டத்தில் களப்பணி ஒருங்கிணைப்பாளர்கள் தாமரைக்கண்ணன், பொள்ளாச்சி பிரகாசு, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் கருமலையப்பன், திருச்சி மாவட்டப் பொறுப்பாளர் ஜெகநாதன், திண்டுக்கல் மாவட்ட அமைப்பாளர் சு. மருதமூர்த்தி, கொடுமுடி பாண்டியன், தாராபுரம் குமார், வழக்கறிஞரணி செல்லத்துரை, வெற்றிவேந்தன், மானூர் அறிவாசான், கருஞ்சட்டை கமர்தீன், பெரியகுளம் குமரேசன், பழனி சிவக்குமார், பொன்ராசு, சுல்தான், நெய்க்காரபட்டி நல்லதம்பி, வின்சென்ட், திருச்செல்வம், கெங்குவார் பட்டி ஜெயப்பாண்டி, டெல்லி கபீர், வடகாடு நாகராஜ், ஒய்.எம்.ஆர். பட்டி திருப்பதி, செம்பட்டி ஆல்பர்ட், செல்வம் இராசா உட்பட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தலித் – பார்ப்பனக் கூட்டணி:

# தென்னகத்திலும் தொடருமா?

தலித் – பார்ப்பன கூட்டணி, உ.பி.யில் வேண்டுமானால் வெற்றி பெறலாம். அது தென்னாட்டில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்திட வாய்ப்பில்லை என்று – 'அவுட்லுக்' மற்றொரு கட்டுரையை வெளியிட்டிருக்கிறது. அக்கட்டுரை யில் இடம் பெற்றுள்ள முக்கிய கருத்துக்கள்:

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் – உ.பி.யில் நடந்தது போல் – தமிழ் நாட்டிலும், தலித் – பார்ப்பனர் கூட்டணி ஏற்பட வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். இதன் மூலம் காலம் காலமாக தலித் மக்களை ஒடுக்கியவர்கள் என்ற அவப்பெயரிலிருந்து தங்களது சமூகத்தை மீட்க முடியும் என்று கருதுகிறார்கள்.

அகில இந்திய "பார்ப்பன" கூட்டமைப்பின் நிர்வாகக் குழு கூட்டம், ஜூன் 10, 11 தேதிகளில் திருப்பதியில் நடந்தது. அதில் சில முழக்கங்களை முன் வைத்து – அதற்கான செயல் திட்டத்தையும் தயாரித்தனர். 'தீண்டாமைக்கு மரணச் சடங்கு', தலித் வாயிற் கதவில் 'பிராமணர் நலன்' என்ற முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. இக்கூட்டம் தொடர்பாக அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கையில் 'அறிவுக் கூர்மை "பிராமணர்'களுக்கே உரியது என்றும், இந்து மதத்தைக் காப்பாற்றும் கடமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்றும் கூறியிருந்தனர். 'தலித்துகளை அன்போடு அரவணைப்போம்; நம்மைப் போல் அவர்களிடமிருந்தும் மதிப்பையும் எதிர்பார்ப்போம்' என்றும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட் டிருந்தது.

உ.பி. சோதனை முயற்சி வெற்றி பெறுமா என்று கேட்டதற்கு, தமிழ்நாட்டின் பெண் கவிஞர் குட்டி ரேவதி கூறினார், "பார்ப்பனர்கள் தங்கள் மேலாதிக்க செயல்பாடுகளை விரைவில் தொடங்கிவிடுவார்கள். தலித்துகளை விழுங்கி விடுவார்கள் என்றே நினைக்கின்றேன். இப்போதே அது பற்றிக் கூறுவது சரியாக இருக்காது" என்றார். தமிழ்நாடு பார்ப்பன சங்கத் தலைவர் என். நாராயணன், குட்டி ரேவதியின் அச்சத்தை உறுதிப்படுத்தும் வகையில், "உ.பி.யில் நடந்துள்ள 'மாயாவதி திட்டம்' ஏதோ திடீரென்று, ஒரு நாள் இரவில் உருவானது அல்ல; அதற்கு திட்டமிட நீண்டகாலம் தேவைப்பட்டது" என்கிறார். 'பார்ப்பன ரல்லாதார்' என்ற அரசியல் கொள்கை அடிப்படையற்றது. அது மறைந்து விட்டது என்றும் பார்ப்பன சங்கத் தலைவர் கூறுகிறார். மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரத்தின் மகனும், அரசியலின் புதிய வரவான கார்த்திக் சிதம்பரம் கூறுகையில், "அரசியல் வெற்றிக்குத் தேவையான எண்ணிக்கையில் பார்ப்பனர்கள் இல்லை. அவர்கள் ஓட்டு வங்கியும் அல்ல; தமிழ்நாட்டில் சாதியை விட அரசியல் கூட்டணிதான் வலிமையாக உள்ளது. எங்களது சிவகெங்கை தொகுதியில் சிறுபான்மை செட்டியார் சமூகத்தைச் சார்ந்த எனது தந்தை பெரும்பான்மையாக உள்ள தேவர்களை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று வருகிறார். தமிழ்நாட்டில் சாதி அரசியல் வெற்றிக்குத் தடையாக இல்லை" என்கிறார். தமிழ்நாட்டில் – சமூக தளத்தில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன என்று கூறும் கார்த்திக், புதிய வாக்காளர்களுக்கு திராவிட இயக்கக் கொள்கைகளோடு தொடர்பே இல்லை என்கிறார்.

எழுத்தாளர் வாசந்தி (பார்ப்பனர்) கூறுகிறார்: "இரண்டு காரணங்களுக்காக – கடந்த தலைமுறை திராவிட இயக்கத்தால் ஈர்க்கப்பட்டது. ஒன்று பார்ப்பன ஆதிக்கம்; 3 சதவீதமாக உள்ள பார்ப்பனர்கள் அரசியல், பண்பாட்டுத் துறையில் ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து – பார்ப்பனரல்லாத மக்களுக்கு அறைகூவல் விடுத்தது. இரண்டாவது – இந்தி எதிர்ப்பை முன்னிறுத்தி உருவாக்கப்பட்ட மாநில உணர்வு. இப்போது பார்ப்பன எதிர்ப்போ – இந்தி எதிர்ப்போ பிரச்சினையாகவே இல்லை. பார்ப்பனர்கள், ஓரம் கட்டப்பட்டுவிட்டனர். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முழக்கமும் காணாமல் போய் விட்டது" என்கிறார், பார்ப்பன எழுத்தாளர் வாசந்தி.

தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் வடநாட்டுப் பார்ப்பனர்களைப் போல் இல்லை. தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள், மேலும் மேலும் முன்னேறத் துடிக்கும் நடுத்தர வர்க்கத்தினர். அண்மையில் தமிழ்நாடு பார்ப்பனச் சங்கம் – ஒரு கணக்கெடுப்பை நடத்தியது. அதன்படி, தமிழ்நாட்டில் பார்ப்பனர்களில் 7.5 சதவீதம் பேர் மிகவும் வசதி படைத்தவர்கள். 50 சதவீதம் பேர் நடுத்தர வர்க்கத்தினர். எனவே, ஏனைய நடுத்தர வர்க்கத்தினரைப் போல் அரசியலில் ஆர்வம் காட்டாதவர்களாகவே பார்ப்பனர்களும் இருக்கிறார்கள். பாரம்பர்யப் பெருமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமும் இவர்களிடம் இல்லை என்று வேதனைப்படுகிறார் பார்ப்பன சங்கத் தலைவர் நாராயணன். இது ஒரு தடை என்று கூறும் நாராயணன், உ.பி.யைப் போல் தலித்துகள் இங்கே ஒரே தலைமையின் கீழ் அணி திரளவில்லை. அவர்கள் பிளவுபட்டுக் கிடக்கிறார்கள். இது இரண்டாவது தடை என்கிறார். தமிழ்நாட்டில் தலித்துகளை ஓரணிக்கு கொண்டு வரும் முயற்சிகளில் மாயாவதி ஈடுபட வேண்டும்" என்றும் வலியுறுத்துகிறார்.

"தமிழ்நாட்டு கிராமங்களில் – பார்ப்பனர்கள் இல்லை; நகரங்களுக்கு வந்துவிட்டார்கள். பார்ப்பன ரல்லாதார் எதிர்ப்பு இயக்கத்தின் காரணமாக – தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் பூனே, நாக்பூர், டெல்லி போன்ற நகரங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டார்கள்" என்றார் நாராயணன். (உ.பி.யைப் போல் தமிழ் நாட்டிலும் பார்ப்பன தலித் கூட்டணிக்கு ஏங்கி நிற்கும் பார்ப்பனர்களின் பேராசை நிறைவேறப் போவதில்லை; தமிழ்நாடு உ.பி.யும் இல்லை! – ஆர்)

## மிரட்டல்களைத் தகர்த்து – பொள்ளாச்சியில் கழகக் கூட்டம்

எதிர்ப்புகள், சோதனைகளைக் கடந்து, தமிழர் நலன் ஒன்றே குறிக்கோளாய் இயக்கம் நடத்திய வர் பெரியார் : வழக்கறிஞர் கடலூர் அழகரசன் பொள்ளாச்சி யில் எழுச்சியுரை:

பொள்ளாச்சி செம்பா கவுண்டர் காலனி பகுதியில் கழகப் பொதுக் கூட்டம் கடந்த 9.6.07 சனி மாலை நடைபெற்றது. த. கண்ணன் தலைமை தாங்கினார். ச. சக்திவேல் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து கா.சு. நாகராசன், பேரூராட்சித் துணைத் தலைவர் தி.மு.க.வைச் சார்ந்த அ. மைதீன், நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி, பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர் சி. விசயராகவன் ஆகியோரது உரையை அடுத்து கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன், பெரியாரின் தொண்டும், பெரியார் திராவிடர் கழகத்தின் செயல்பாடுகளையும் விளக்கி சிறப்பாக உரையாற்றினார். கடலூர் அழகரசன் நிறைவுரையாற்றினார்.

பகுத்தறிவாளர் பேரவை இரா. மோகன், சாமியார்களின் மோசடிகளை விளக்கிடும் "மந்திரமல்ல தந்திரமே" நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினார். நகைச்சுவையோடும், மக்களுக்கு அறிவியல் பூர்வமாக புரியும்படி எளிமையாகவும் இரா. மோகன் நடத்திய நிகழ்ச்சி பொது மக்கள் மாணவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றது.

"பெரியார் திராவிடர் கழகக் கூட்டத்தில் இந்து மத சாமிகளை இழிவாகப் பேசினால் ஆர்ப்பாட்டம் செய்வோம்" என இந்து மக்கள் கட்சியினர் காவல்துறையிடம் தெரிவித்த திருப்பதாகக் கூறி கூட்டத்திற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர் காவல் துறையினர். இருந்தும் தோழர் அழகரசன் பேசத் தொடங்கியதும் இந்து மக்கள் கட்சியின் அனுராஜ் என்ற நபர் மேடையை நோக்கி ஏதோ கூறியவாறே வர அவரோடு சிலரும் சேர்ந்துக் கொண்டு கோசமிட்டனர். உடனடியாக கழகத் தோழர்களும், காவல் துறையினரும் அவர்களை சூழ்ந்து கொண்டு அந்த கும்பலை வெளியேற்றினர். இந்து மக்கள் கட்சியின் அனுராஜ் என்பவரை காவல்துறை கைது செய்து காவல் நிலையம் கொண்டு சென்றனர்.

பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் எழுந்து கேட்டுக் கொண்டதும் கூட்டத்தில் எழுந்த சலசலப்பு ஓய்ந்து கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

மதவெறியர்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்தும், பார்ப்பன சதிக்கு சூத்திரர்கள் இரையாகிவிடக் கூடாது என்பதை வலியுறுத்தியும் பேசிய அழகரசன், எத்தனையோ கடும் எதிர்ப்புகளை, சோதனைகளைக் கடந்துதான் பெரியார் போராடினார். தமிழர் நலன் ஒன்றே குறிக் கோளாய் இயக்கம் நடத்தினார்.

இதுபோன்ற சலசலப்புகளைக் கண்டு பெரியார் திராவிடர் கழகம் ஒரு போதும் அஞ்சாது. தொடர்ந்து இந்தப் பகுதியில் கழகக் கூட்டங்கள் நடைபெறும், என்றும் கூறி சுமார் ஒரு மணி நேரம் அழகரசன் பேசியதைப் பொது மக்கள் திரண்டு நின்று கேட்டனர்.

சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள், கூட்டம் தொடங்கியதிலிருந்து இறுதிவரை அமர்ந்திருந்து கருத்துக்களை கேட்டனர் மதவெறியர்களின் சலசலப்பை அனைத்து மக்களும் கண்டித்து காவல்துறையிடமும் புகார் கூறினார்கள்.

தோழர்கள் கண்ணன், சக்திவேல், ஜெய்லாப்தீன், விஜய், தனபால், மணிகண்டன், செல்வராசு, பிரகாசு உள்ளிட்ட பேரூர் கழகத் தோழர்கள் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். ●

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# மார்தட்டுகிறார்கள் பார்ப்பனர்கள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பின் தங்கிக் கிடந்ததால் - அவை சமூகத்திலும், எதிரொலித்தன.

சந்திரபான் பிரசாத் என்ற தலித் ஆய்வாளர் - பார்ப்பனர்களுடன் 'தலித்' இணைய வேண்டும் என்ற கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருபவர் ஆவார். (தமிழ்நாட்டிலும் இதே கண்ணோட்டத்தில் செயல்படும் சில தலித் "அறிவு ஜீவி"களும் இருக்கிறார்கள். எப்படியாவது அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம்.) "மண்டல் அமுலாக்கத்துக்குப் பிறகு, உயர் சாதியினர் புறக்கணிக்கப்பட்டனர். அதிகாரத்துக்கு வந்த பிற்படுத்தப்பட்டவர்கள் தவறாக முறைகேடான ஆட்சி நடத்தினர். அதுவே அவர்கள் அதிகாரத்தை இழப்பதற்குக் காரணமாகிவிட்டது. இந்த நிலையில் - தலித்துகளும், பார்ப்பனர்களும், கரம் கோர்த்தது இயல்பான விளைவுதான்" என்று, இவர் தலித் - பார்ப்பனக் கூட்டணியை நியாயப்படுத்துகிறார். (மண்டல் சகாப்தத்துக்கு முன்பு – வடமாநிலங்களில் பார்ப்பனர்களும், உயர்சாதியினரும் மட்டுமே முதல்வராக இருந்தார்கள். அவர்கள் ஆட்சி காலத்தில் – ஏதோ மக்களுக்கான ஆட்சி நடந்ததைப் போலவும், பிற்படுத்தப்பட்டோர் அதிகாரத்துக்கு வந்த பிறகுதான் நிர்வாகமே சீர் குலைந்தது என்பது போலவும் ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார் சந்திரபான் பிரசாத்.– ஆர்)

பிரபாஷ் ஜோஷி என்ற மூத்த பார்ப்பன பத்திரிகையாளர் உ.பி.யில் இந்த கூட்டணியின் வெற்றியை பிற மாநிலங்களிலும் எதிர்பார்க்க முடியாது என்கிறார். ஒவ்வொரு மாநிலத்திலும், தலித் - பார்ப்பன உறவு வெவ்வேறாக இருக்கிறது. உ.பி.யைப் பொறுத்த வரை, பார்ப்பனர் எண்ணிக்கையில் கணிசமாக உள்ளனர். அத்துடன் மாயாவதிக்கு, தலித் சமூகத்தின் முழுமையான ஆதரவு இருந்தது. எனவே வெற்றிக்கு வாய்ப்புகள் இருந்தன. பிற மாநிலங்களில், இந்த நிலை இல்லை" என்கிறார், அவர்.

விரைவில் ம.பி. ராஜஸ்தான் மாநிலங்களில் சட்டசபை தேர்தல் வரவிருக்கிறது. பார்ப்பன உறவை மாயாவதி புத்திசாலித்தனமாகக் கையாண்டால், அவர் இந்த மாநிலங்களிலும், ஒரு சக்தியாக உருவாகக் கூடும் என்கிறார், இந்தி எழுத்தாளரான ராஜேந்திர யாதவ். மாயாவதி - பார்ப்பன ஆதரவைத் தொடர வேண்டும் என்பதில் கவனமாகவே இருக்கிறார். இடஒதுக்கீட்டில் பொருளாதார அளவுகோல் வேண்டும் என்று மாயாவதி கூறியிருப்பதிலிருந்து இதைப் புரிந்து கொள்ள முடியும்.. மாயாவதியைத் தொடர்ந்து, மன்மோகன் சிங்கும், அத்வானியும், இதே கருத்தை எதிரொலிக்க வேண்டிய கட்டாயம் நிகழ்ந்துள்ளது.

வாக்கு வங்கி நோக்கத்தோடு - பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளான பா.ஜ.க., அதன் காரணமாக பார்ப்பன உயர்சாதியினரின் நம்பிக்கையை இழந்து வருகிறது. "அகில பாரத பிராமண மகாசபா"வின் தலைவராக இருப்பவர் மகேஷ்தத் சர்மா. இவர் ஆர்.எஸ்.எஸ்.சிலும் தீவிரமான 'பிரச்சாரகர்' . 'இடஒதுக்கீட்டை பா.ஜ.க.வும் காங்கிரசும் ஆதரித்ததன் மூலம் பெரும் பாவத்தை இழைத்து விட்டன" என்கிறார் அவர். "எங்களுடைய ஆதரவு இல்லாமல், இந்தியாவை எவராலும் ஆட்சி செய்ய முடியாது. **சாணக்கியனை மறந்து விட வேண்டாம், சந்திரகுப்த மவுரியரையே வீழ்த்தியது சாணக்கியன் மூளைதான்.** பா.ஜ.க.வை வளர்த்தவர்கள் நாங்கள் தான். ஆனால் இடஒதுக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ந்து பா.ஜ.க. ஆதரித்தால் - தனது நிலையை மாற்றிக் கொள்ளாவிட்டால் - பா.ஜ.க. மேலும் மோசமாகிவிடும்" என்று எச்சரிக்கிறார், அந்த ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்.

பா.ஜ.க.விலும் - இதே சிந்தனைதான் எதிரொலிக்கிறது. உடடினயாக பா.ஜ.க.வின் தலைவராக தற்போதுள்ள ராஜ்நாத் சிங்குக்கு பதிலாக - ஒரு பார்ப்பனரைக் கொண்டு வரவேண்டும் என்று, கட்சித் தலைமை நிலையத்தில் விவாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் ம.பி., குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் - பா.ஜ.க., பிற்படுத்தப்பட்டோர் ஆதரவுத் தளத்திலே தான் உயிர் பெற்று நிற்கிறது. ஆனால், ஆர்.எஸ்.எஸ். தலைமையோ பார்ப்பனர்களிடமே இருக்கிறது. இஸ்லாமியர் எதிர்ப்பு மட்டுமன்றி, பார்ப்பன உயர்சாதி ஆதிக்க நலனைப் பேண வேண்டும் என்பதும் ஆர்.எஸ்.எஸ்.சின் முக்கிய குறிக்கோள். "இந்துக்கள் ஒற்றுமையைத் தானே மாயாவதி ஏற்படுத்தி இருக்கிறார்" என்று ஆர்.எஸ்.எஸ். தத்துவவாதிகள் ஒரு பக்கம் மாயாவதியைப் புகழ்கிறார்கள். மறுபக்கத்தில் - பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கு இடஒதுக்கீடு தருவதை - ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் எதிர்க்கிறார்கள். இட ஒதுக்கீடு - இந்து ஒற்றுமை என்ற கோட்பாட்டுத் தளங்களில் நிற்கும் இந்த முரண்பாடு பா.ஜ.க.வில் கடும் குழப்பத்தை உருவாக்கியுள்ளது.

இந்தியா "சுதந்திரம்" பெற்றபோது - அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றிருந்த 20 பேர்களில் 13 பேர் பார்ப்பனர்கள். கல்வியில் அவர்களுடைய ஆதிக்கமே இதற்குக் காரணம். அதே பார்ப்பனர்கள் தான் உ.பி.யில் தங்களுக்கும், அரசியல் வாயிற்கதவு திறக்கப்பட்டுவிட்டது என்று இன்று மகிழ்ச்சி அடைகிறார்கள். தலித் பார்ப்பனக் கூட்டணியால் - உ.பி.யில் பார்ப்பனர்களுக்கு, நல்ல பயன்கள் கிடைக்கக் கூடும். அதே நேரத்தில் எண்ணிக்கையில் பெரும் பகுதியினராக இருக்கும் பிற்படுத்தப்பட்டோரை, அரசியலில் பார்ப்பனர்கள் வீழ்த்துவது எளிதானது அல்ல; நீண்ட இடைவெளிக்குப் பிறகு, பார்ப்பனர்களுக்கு தேர்தல் அரசியலில் பங்கு கிடைத்திருக்கிறது; மூடப்பட்ட கதவு திறக்கப்பட்டுள்ளது என்று கூறலாமே தவிர, மற்றபடி பார்ப்பனர்களின் பழைய முழுமையான ஆதிக்கம் திரும்ப வாய்ப்பில்லை என்கிறது, 'அவுட் லுக்'.

பார்ப்பனர்களின் மகிழ்ச்சி தற்காலிகமானதா ? அல்லது நீடிக்கக் கூடியதா என்பது இனிமேல்தான் தெரியும். ❑

## ஆறாம் ஆண்டை நோக்கி 'புரட்சிப் பெரியார் முழக்கம்'

'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் துவக்கப்பட்டு இதுவரை 5 வருடம் – 6 மாதம் நிறைவடைந்திருக்கிறது. இந்த இதழ் 5 ஆம் ஆண்டு 26 ஆம் இதழாக வெளிவருகிறது. எனவே இந்த இதழ் புரட்சி 5 – முழக்கம் 26 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதே அடிப்படையில் இனி இதழ் வெளியீடு கணக்கிடப்படும்.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
பேசி: 2451 2857
periyarmulakkam@yahoo.com

# பார்ப்பனர் பிடியில் இந்தியா

உ.பி.யில் மாயாவதி – பார்ப்பன அணி ஆட்சியைப் பிடித்திருக்கலாம். ஆனால், மத்தியில் அதிகார வர்க்கத்தில் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று, 'அவுட் லுக்'கில் அனுராதா ரமணன் என்பவர் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள கட்டுரை:




அனில் கக்கோதார் (தலைவர், ஏ.ஈ.சி.)



பி.கே. சதுர்வேதி (அமைச்சரவை செயலர்)



கமலேஷ் சர்மா (இந்தியாவுக்கான ஐ.நா. பிரதிநிதி)



புலோக் சட்டர்ஜி (பிரதமர் அலுவலகம்)



சஞ்சயபாரு (பிரதமரின் செய்தி தொடர்பாளர்)



என். கோபால்சாமி (தலைமை தேர்தல் ஆணையர்)

அய்.ஏ.எஸ். அதிகாரிகளாக - பார்ப்பனர்களே, இப்போதும் நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு பதவிகளில் செல்வாக்குள்ள அதிகாரிகளாக இருப்பவர்கள் அவர்கள் தான். பிரதமருக்கு ஆலோசனை கூறும் இடத்தில் இருப்பவர்களும் அவர்கள்தான். காலம் காலமாக அவர்களின் இந்த "பிறவி உரிமை" தொடரவே செய்கிறது.

இந்த ஆதிக்கம் - பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே தொடங்கிவிட்டது. படிப்பாளிகளாக பார்ப்பனர்கள் மட்டுமே இருந்தார்கள். எனவே உயர் பதவிகளில் பார்ப்பனர்களே நியமிக்கப்பட்டார்கள்.

மேலோட்டமாக - பார்த்தாலே பார்ப்பன அதிகாரிகளே - இப்போதும் மத்திய அரசில் - மய்யமான இடங்களைப் பிடித்திருப்பதைப் புரிந்து கொள்ள முடியும். 'ரா' உளவுத்துறை பாதுகாப்பு மற்றும் ஆய்வுத் துறை, விவசாயம், கூட்டுறவு, பொருளாதாரம், வருவாய், சட்டம் போன்ற முக்கிய துறைகளின் பொறுப்பு - பார்ப்பனர்களிடம்தான் இருக்கிறது.

தற்போதைய மத்திய நிர்வாக அமைப்பில் - செயலாளர்கள் என்ற உயர்நிலையில் இருப்பவர்களில் 37 பேர் பார்ப்பனர்கள். 37.17 சதவீதம் பேர் பார்ப்பன அதிகாரிகள் என்று, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அறிக்கை குறிப்பிடுகிறது.

அரசு நிதியுதவியுடன் செயல்படும் ஆராய்ச்சி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உயர் பொறுப்புகளில் இருப்பவர்கள் பார்ப்பனர்களே !

வி.பி.சிங் - 1990களில் பிற்படுத்தப்பட்டோருக்கு கதவைத் திறந்தார். ஆனாலும், இட ஒதுக்கீட்டின் கீழ், பிற்படுத்தப்பட்டோர் உயர்பதவியில் செயலாளர் என்ற நிலையை எட்டுவதற்கு இன்னும் அய்ந்தாண்டு காலம் பிடிக்கும் என்று, அதிகார வட்டாரங்களில் கூறப்படுகிறது.

அய்.ஏ.எஸ். தேர்வுகளில் - இப்போது பிற்படுத்தப்பட்டோர் வரத் தொடங்கியுள்ளனர். இந்த ஆண்டு - அய்.ஏ.எஸ். தேர்வில் 144 பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் வெற்றி பெற்றுள்ளனர். முதல் இடத்தைப் பெற்றவர்கூட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர் தான். "2010 ஆம் ஆண்டில்தான் தற்போதுள்ள அதிகார அமைப்பில் மாற்றத்தைக் காண முடியும். அது வரையில் பார்ப்பன கட்டுப்பாட்டில் தான் இந்திய அதிகார அமைப்பு இருக்கும்" என்கிறார் ஒரு மூத்த அதிகாரி. ✦

## கழகத் தோழர்களுக்கு

கழகத் தலைமை
அலுவலகம்
மாற்றப்படுகிறது.
புதிய அலுவலக முகவரி
விரைவில்
அறிவிக்கப்படும்.

## புதிய இணைய தளம்

பெரியார் திராவிடர் கழகச் செய்திகள் - புரட்சிப் பெரியார் முழக்கக் கட்டுரைகள் - பெரியாரிய கட்டுரைகள் - சாதி மறுப்புத் திருமண விவரங்கள் பற்றி அறிய -

'www.dravidar.org.'

இணைய தளம் பாருங்கள். உங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 28th June 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.